ஸீதா கல்யாணம்.

10 NOV 1908
MADRAS.

ஸ்ரீ வாணீ விலாஸினீ

வா. 5. பிலவங்க௵ மாசி௴ ந. 29.

ஸ்ரீராமானுஜ சரித்ம்.

இவ்வாறு நாடெங்கும் அதர்மம் ஒரு மூலையிலும் இடம்பெறாதபடி ஸ்ரீவைஷ்ணவஸமிருத்தியும் தர்மச்ரத்தையும் ஆஸ்திக்யமும் நிலைநின்று திவ்ய தேசங்களும் சீர்பெற்று நடந்து போருகிறகாலத்திலே, ஸ்வாமிகள் இப்பிருகிருதிமண்டலத்தில் தாம் வந்தவதரித்ததின் பிரயோஜனம் நிறைவேறிவிட்டபடியால் இம்மண்ணுலகவாழ்க்கையைநீக்கிமீட்சியில்லாக் கலங்காப்பெருநகரிற்சென்று தமக்குற்றதாகிய பேரடிமை

களைப் பரமபதநாதனுகிய ஸ்ரீமந்நாராயணனுக்குச் செய்து கொண்டிருக்கத்துரித்து ஸ்ரீரங்கநாதனிடம் இதைத்தெரிவிக்க, அவரும் இவரைவிட்டுப்பிரிய மனமின்றி மறுக்க, ஸ்வாமிகள் மறுக்கவொண்ணுதபடி மறுபடி நிர்ப்பந்திக்க, பெருமாளும் அப்படியேயாகுகவென்று நியமநம் கொடுக்க, ஸ்வாமிகள் விடைபெற்றுத் தம்மாச்ரமமேறத் திரும்பினுர்கள்.

வரும்வழியில் ஒருருவு ஸ்வாமிகள்முன் வந்துநின்றது. அதுவரையில் அவ்வாறு விகாரமும் நிர்த்தயமுமான உருவத்தை யாரும் கண்டதில்லை. அது ஒரு கையில் நீண்ட கத்தியும் ஒரு கையில் துண்டிக்கப்பட்ட பசுக்கால்கள் மூன்றுமாய்க் காணப்பட்டது. அதற்குச் சிறிது தூரத்தில் அதன் வேலைக்காரரென்று நிச்சயிக்கும்படி பலர் தென்பட்டார்கள். மூன்றுகாலும் வெட்டப்பட்டுப்போய்க் கண்ணுங்கண்ணீருமாய்க் கதறிக்கொண்டோடும்பசுவொன்றை அவர்கள் துரத்திக்கொண்டோடக் காணப்பட்டார்கள். இக்கோரக்காட்சியைக் கண்டதும் ஸ்வாமிகள் ஜுகுப்ஸையால் கண்ணை மூடிக்கொண்டார்கள். அந்த உருவானது ஸ்வாமிகளை நெருங்கி "இதுவரையில் நீர் என்னை எங்கும் கால்பாவவொட்டாமல் துரத்தியடித்தபடியால் அதற்குப் பிரதியபகாரமாக நான் நாலுவகை யுபாயங்களாலும் உமது மதத்தைச் சிதைக்கக்கடவேன்" என்று சபதம் கூறி மறைந்துபோய்விட்டது.

இவ்வாறு கூறிச் சபதம் செய்தது கலிபுருஷனேயாம். இதைக்கேட்ட ஸ்வாமிகள் புன்னகைசெய்துகொண்டே அருகேயிருந்த அடியார்களை நோக்கினுர்கள். அவர்கள் சிந்தைக்கடலில் முழுகியிருக்கிறுர்கள். பயமும் அதிகரித்திருக்கிறது. எல்லோரும் நடுங்கிக்கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் நிலையைக் கண்டு ஸ்வாமிகள் ஆச்சரியப்பட்டார்கள். "நமது மதமென்பது யாது, ஸ்ரீய:பதியான நாராய

ணன் தனது பத்நியாருக்கு உபதேசித்து வளரவிட்ட இந்த ஸித்தாந்தம் பிராட்டி மதமேயன்றோ? அதைக் கலங்காமல் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டியது அவனது கடமை. यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत । अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् " என்று சொன்னவன் இதற்குத் தக்கபடி செய்கிறான், நீங்கள் தேறியிருங்கோள்" என்று அடியார்களுக்குத் தேறுதல்கூறித் தமதிருப்பிடம் சேர்ந்தார்கள்.

அந்த க்ஷணமே ஸ்வாமிகள் திருமேனியில் பெருத்த ஆயாஸம் உண்டாயிற்று. தாம் பரமபதம்போகவேண்டிய காலம் ஸமீபித்ததென்று கண்டுகொண்டார்கள். தமது ஜ்ஞானபுத்திரராகிய திருக்குருகைப்பிரான்பிள்ளானையும் தமக்கு மாஹாநஸிகரான கிடாம்பியாச்சானையும் அருகே யழைத்து அவர்களுக்கு முக்கியமான விஷயங்கள் சிலவற்றைக் குறிப்பாக உபதேசித்துத் தமது திருவடிகள் இரண்டையும் அவர்கள் சிரஸ்ஸில் வைத்து முடிசூட்டி, தமக்கு ஸரஸ்வதி கொடுத்த லக்ஷ்மீஹயக்ரீவரைத் தமது ஜ்ஞானபுத்திரரான திருக்குருகைப்பிரான்பிள்ளானுக்கும் தமக்குப் பஞ்சஸம்ஸ்காரகாலத்தில் பெரிய திருமலைநம்பி பிரஸாதித்த அருளாளப்பெருமாளாகிய வந்துவாழ்வித்த பெருமாளைக் கிடாம்பியாச்சானுக்கும் பிள்ளைதிருமாலிருஞ்சோலை தாஸர் தமக்கு வெகுமதியாகக்கொடுத்த லக்ஷ்மீந்ருஸிம்ஹனை நடாதூராழ்வானுக்கும் திருக்கோட்டியூர்நம்பி திருநாட்டுக்கெழுந்தருளும்போது தமக்குப் பிரஸாதித்த சொக்கத்தேவரை பட்டருக்கும் ப்ரஸாதித்தருளி, தாம் ஆளவந்தார் பாதுகைத்தீர்த்தம் ஸ்வீகரித்து அடியார்களுக்கும் ப்ரஸாதித்து, அவர்களுக்குத் தம் ஸ்ரீபாததீர்த்தமும் பாதுகையும் பிரஸாதித்து,

"தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னுங் குறுகாதோ"

என்று பலகாலம் அநுஸந்தித்துக்கொண்டிருந்தார்கள். அடியார்களெல்லோரும் சூழ்ந்திருந்தார்கள். அவரவர் பெருஞ்சோகத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் அடியார்களுக்குத் தேறுதல் சொன்னார்கள். தாம் தேஹந்யாஸம் செய்த(இவ்வுலகத்தைவிட்ட) தன்பின் நடக்கவேண்டிய சரமக்ரியைகளைத் தமக்கு ஜ்ஞானபுத்திரராகிய திருக்குருகைப்பிரான்பிள்ளானே நடத்தவேண்டியதென்றும், பேரருளாளப்பெருமாளுக்குத் தாம்நடத்திவந்த திருமஞ்சனக்கைங்கர்யத்தை ஜ்யேஷ்டாம்சமாக அவர் பெறவேண்டியதென்றும் நியமித்தார்கள்.

அரங்கநாதனது கோயில் கைங்கர்யபரர்களை அழைத்து அவர்களைப் பட்டர் கையில் காட்டிக்கொடுத்து நான் ஏதாவது பிழைகள் செய்திருக்கக்கூடுமாகையால் அவைகளை க்ஷமித்துவிடவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். ஸ்ரீரங்கநாதனது கைங்கர்யங்கள் குறைவற நடந்துவரும்படி பார்த்துக்கொள்ளும்படி பட்டருக்கு நியமித்தார்கள்.

தமது ஜ்ஞானபுத்திரராகிய திருக்குருகைப்பிரான் பிள்ளானை தமக்குப்பிறகு தம்மைப்போல் பார்த்துக்கொள்ளும்படி அடியார்களுக்கு ஆஜ்ஞாபித்தார்கள். தம்மிடத்தில் வேதாந்தங்களிரண்டும் பூர்த்தியாக வுபதேசம்பெறாது குறையாயிருந்தவர்கள் அனைவரையும் திருக்குருகைப்பிரான்பிள்ளானிடத்தில் அவற்றைப் பூர்த்திசெய்துகொள்ளும்படி நியமித்தார்கள். அடியார்களைப் பல தொகுதியாகப்பிரித்து ஒவ்வொரு தொகுதியை முக்கியர்களாகத் தாம் குறிப்பிட்ட ஒவ்வொருவரிடத்தில் தம்மிடத்தில்போலவே இருக்கும்படி நியமித்தார்களென்று கூறுவாருமுண்டு.

ஸ்வாமிகளுக்கு ஆயாஸம் அதிகரித்தது. மனதினிடமாக த்வயாநுஸந்தானம்செய்துகொண்டிருந்தார்கள். அத்

தருணம் ஸந்த்யாகாலம் நேர்ந்தது. ஸ்வாமிகளுக்கோ எழுந்திருக்க சக்தியில்லை. அர்க்ப்யப்ரதானம் செய்யவேண்டும். எழுந்து நின்றுகொண்டு செய்யவேண்டும். அசக்தி காலமாயிருந்தும் கௌணமுறையில் செய்ய ஸ்வாமிகள் ஸம்மதிக்கவில்லை. வருந்தியெழுந்து ஜலாஞ்ஜலி செய்தார்கள். நித்யகருமக்கடன் முடிந்ததும், தாம் இனி உலகப் பற்றை நீத்துவிட்டதாகத் தெரிவித்துவிட்டு,

"இசைவித் தென்னை யுன்தா ளிணைக்கீ ழிருத்து மம்மானே
அசைவி லமரர் தலைவர் தலைவா வாதிப் பெருமூர்த்தி
திசைவில் வீசுஞ் செழுமா மணிகள் சேருந் திருக்குடந்தை
அசைவி லுலகம் பரவக் கிடந்தாய் காண வாராயே"

என்றநுஸந்திப்பதும் த்வயோச்சாரணம்செய்வதும் மறுபடி 'தாவி வையங்கொண்ட' என்றநுஸந்திப்பதுமாக இப்படி மாறிமாறி அநுஸந்தித்துக்கொண்டிருந்தார்.

அத்தருணத்தில் அடியார்களுக்குண்டாயிருந்த வியாகுலபாவத்தை யெழுதிமுடியாது. அந்த வெகு பிரயாஸத்தோடடக்கிக்கொண்டு மேல் நடக்கவேண்டியதில் கவனமாயிருந்தார்கள். சிலர் ஒருபுறத்தில் ஆநந்தவல்லி பிருகுவல்லிபாராயணம் செய்தார்கள். ஒருபுறத்தில் சிலர் 'சூழ் விசும்பணிமுகில்' 'முனியே நான்முகனே' இவைகளை அநுஸந்தானம் செய்தார்கள். இப்படி ஆச்ரமம்முழுதும் பெருங்கோஷமாய் இருந்தது.

ஸ்ரீரங்கநாதன் தம் நாய்ச்சிமாரோடு திருச்சியில் புறப்பட்டு ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் ஆச்ரமவாசல் வந்துசேர்ந்தார். ஆச்ரமத்தின் முன்பாகத்தில் ஓர் முற்றமிருக்கிறது. அதற்கு யமுனைத்துறைவன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஸ்வாமிகள் அங்குத்தான் சயநித்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கநாதன்வாசலுக்கெதிராய்த் திரும்பிநின்று ஸ்வாமிகளுக்குக் காட்சிகொடுக்கலானார். அப்போது ஸ்வாமிகள்,

"வாராய் மடநெஞ்சே வந்து——மணிவண்ணன்
சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளித்
தாரான் தருமென் றிரண்டத்தி லொன்றதனை
ஆரானு மொன்னுதார் கேளாமே சொன்னக்கால்
ஆராயு மேலும் பணிகேட் டதன்றெனிலும்
போரா தொழியாதே போக்திடுநீ யென்றேற்குக்
காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே யென்னை மறந்ததுதான்——வல்வினையேன்
ஊரா ருகப்பதே யாயினேன் மற்றெனக்கிங்
காராய்வா ரில்லை யழல்வாய் மெழுகுபோல்
நீரா யுருகுமென் னாவி"

என்பதை அநுஸந்தித்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீரங்கநாதன் திரும்பியபோது ஊதப்பட்ட திருச்சின்னவோசை செவியில் விழ ஸ்வாமிகள் கண்ணைத்திறந்து ஸேவிக்கப் பெற்றார்கள். 'பூவார் கழல்க ளருவினையேன் பொருந்துமாறு புணராயே' என்று பிரார்த்தித்தார்கள். திருத்துழாய்மாலையும் ஸ்ரீசடகோபனும் ஸ்வாமிகளுக்கு ப்ரஸாதித்தார்கள். ஸ்வாமிகள் யோகாஸநத்தில் இருத்தப்பட்டு அவைகளைப் பெற்றார்கள். பிறகு,

"மாயஞ்செய் யேலென்னையுன் திருமார்வத்து மாலைநங்கை
வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணைநின் னாணைகண்டாய்
நேசஞ்செய் துன்னோடென்னை யுயிர்வேறின்றி யொன்றாகவே
கூசஞ்செய்யாதுகொண்டாயென்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ."

என்று ஸ்வாமிகள் பிரார்த்திக்கவும் ஸ்ரீரங்கநாதன் திரும்பவும் திருச்சின்னம் ஒலிக்கவும் ப்ருஹ்மரந்த்ரம் திறந்து ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் பரமபதத்திற்குப் பிரயாணமாய் விட்டார்கள். அத்தருணத்தில் எம்பார்ஸ்வாமிகள் ஓர் மூலையிலிருந்து 'அருளாளப்பெருமாளாயின் இளையாழ்வாரை இங்கிருந்து அங்குக்கொண்டுபோக இசையார்' என்று நினைந்திருந்தார் என்பார்கள். பேரருளாளப்பெருமாள்

ஸகல பரிஜனபரிவாரங்களுடன் கருடாரூடராய் ஸேவை கொடுத்தாரென்று சிலரும், கோயில் திருமலை பெருமாள் கோவில் திருநாராயணபுரம் நாலு திவ்யதேசத்தெம்பெருமாள்களும் கருடாரூடர்களாய் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நித்யமுக்தர்களும் புடைசூழ அங்கு காட்சிகொடுத்தார்களென்று சிலரும் கூறுவார்கள். ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் சரீரத்தினின்றும் ஒருதேஜஸ்ஸு வெளியாகி ரங்கநாதனது திருக்குடையில் சேர்ந்துவிட்டதாகச் சிலருக்கும் விஷ்வக்ஸேநரிடம் லயித்ததாகச் சிலருக்கும் ரங்கநாதனது திருவடியில் மறைந்துவிட்டதாகச் சிலருக்கும் அவரது மார்பில் புகுந்துவிட்டதாகச் சிலருக்கும் ஆகாயமார்க்கமாய்ப்பெரிய ஆடம்பரத்துடனும் 'ஹாவு ஹாவு' 'ஹாவு ஹாவு' என்னும் முழக்கத்துடனும் போகிறதாகச் சிலருக்கும் காணப்பட்டதென்பார்கள்.

அரங்கநாதன் கோயிலுக்குள் புகாமல் வெளியே ஒரு மண்டபத்தில் இறங்கினர். ஸ்வாமிகள் இம்மண்ணுலகத்தைத்துறந்துவிட்டதற்காக அடியார்களெல்லாரும் பெருந்துயரில் மூழ்கிவிட்டார்கள். மூலைக்கு மூலை அவர் அவர் மனம்போன வழியெல்லாம் சொல்லிச் சோகித்தார்கள். வெகுநாழிகை சோகித்தபின் தாங்களே தேற்றிக்கொண்டார்கள். இதற்குள்ளாக ஸ்ரீரங்கநாதன் இவர்களுக்குத் தேறுதல் சொல்லும்படிக்கும் மேல் கைங்கர்யங்களை விதிப்படி நடத்தும்படிக்கும் நியமித்தனுப்பினன்.

முன்னே ஆளவந்தாருக்கு நடந்த முறைப்படி ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளுக்கும் யதிகளுக்குரியபடி கிரியைகள் நடத்தப்பட்டன. ஸ்ரீரங்கநாதன் நியமனப்படி கோயிலுக்கெதிர்ப்புறத்திலேயே ஒரு இடத்தில் ஸ்ரீஸ்வாமிகளின் சரமசரீரம் திருப்பள்ளிப்படுத்த (கநநம் செய்ய)ப்பட்டது. பிறகு ரங்கநாதனுள்பட எல்லாரும் அவபிருதங்

கொண்டார்கள். எல்லாரும்போலே அரங்கநாதனும் சோகித்துக் கண்ணீருகுத்துத் தேறுதல்சொல்லி அவரவரை அனுப்பிவிட்டுத் தாம் தமது கோயிலுக்குட்புகுந்தார்.

ஸ்மிருதிமுறைப்படி பன்னிரண்டுநாள் கிரியைகளும் ஸ்ரீவைஷ்ணவமுறைப்படி பெரிய திருவத்தியயநமும் நடந்தேறியது. கைங்கர்யங்களெல்லாம் திருக்குருகைப்பிரான் பிள்ளான்கையால் நடந்தது. வெகு பெருமையாயும் கௌரவமாயும் நிறைவேறியது.

கைங்கர்யங்கள் நிறைவேறியபின் அரங்கநாதன் துரித்தபடியால் முன்னே ஸ்வாமிகள் நியமித்திருந்தபடி ஸ்ரீரங்கத்திவ் பிள்ளான் ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் விக்கிரஹத்தை உடனே பிரதிஷ்டைசெய்துவைத்தார்கள். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளின் சரமவிக்கிரஹத்தைத் திருப்பள்ளிப்படுத்திய இடத்தையே கோயிலாக்கி அங்கேயே மூலோத்ஸவபேரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர்.

ஸ்வாமிகள் ப்ரமபதமடைந்த ஸங்கதி யெங்கும் பரவியது. அங்கங்கு அடியார்கள் ஸ்ரீசூர்ணபரிபாலனமும் திருவத்தியயநமும் நடத்தினர்கள். எல்லா திவ்யதேசங்களிலும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளின் அர்ச்சாமூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. ஸ்ரீபெரும்பூதூரில் முதலியாண்டானும், பெருமாள்கோவிலில் நடாதூராழ்வானும், கீழத்திருப்பதியில் பிள்ளை திருமலைநம்பியும், திருமலையில் அநந்தாழ்வானும், திருக்கோட்டியூரில் பட்டரும், திருநாராயணபுரத்தில் கிடாம்பியாச்சானும் ஸ்ரீபாஷ்யகாரமூர்த்திகளைப் பிரதிஷ்டைசெய்தார்கள். தைமீ பூர்ணிமை புஷ்ய நக்ஷத்ரம் விபாழக்கிழமைகூடிய சுபதினத்தில் ஸ்ரீபெரும்பூதூரிலும் திருவவதாரதினமாகிய சித்திரைத்திருவாதிரையன்றே மற்ற எல்லாவிடங்களிலும் பிரதிஷ்டை நிறைவேறியது. ஸ்ரீபெரும்பூதூரில் மாத்திரம் ஸ்வாமிகள் திரு

நாட்டுக்கெழுந்தருளுவதற்குமுன்னமே பிரதிஷ்டை செய்யப்பட்டதென்றும் குருபுஷ்யதினத்தை நாளாக ஸ்வாமிகளே குறிப்பிட்டுக்கொடுத்தார்களென்றும் அப்படி அங்கு பிரதிஷ்டை நடந்ததினம் அந்த முகூர்த்தத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமிகள் திருமேனியில் அசக்தி அதிகமாயிருந்ததென்றும் சில நூல் கூறுகிறது. முதலியாண்டான் குமாரராகிய கந்தாடையாண்டானென்பவர் ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்வாமிகளின் அர்ச்சாமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து வைத்தாரென்பது ஸ்ரீராமாநுஜதிவ்யசரிதையின் கூறு. முதலியாண்டானுக்கு ஸந்ததியில்லையென்று மஹாவம்சமஹிமையில் கூறப்பட்டிருக்கிறது. முதலியாண்டான் ஸந்யாஸம்செய்துகொண்டதாக விலக்ஷணமோக்ஷாதிகாரி நிர்ணயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கைங்கர்யங்களெல்லாம் பூர்த்திசெய்யப்பட்டபின்பு அடியார்களெல்லாரும் கூடித், திருக்குருகைப்பிரான்பிள்ளானை ஸ்ரீபாஷ்யகாரஸ்தானத்தில் அபிஷேகம் செய்து அவருக்கு அடங்கி அவரது ஆஜ்ஞைப்படி திக்விஜயமும் திவ்ய தேசயாத்திரையும் பரமதநிரஸநமும் வேதாந்தஸித்தாந்த ஸ்தாபநமும் செய்துகொண்டுவந்தார்கள்.

ஸ்ரீரங்கநாதனது கைங்கர்யங்களைப் பட்டரும்பேரருளாளன் கைங்கர்யங்களை திருக்குருகைப்பிரான்பிள்ளானும் கீழத்திருப்பதியிலும் திருமலையிலும் கைங்கர்யங்களை பிள்ளை திருமலைநம்பியும் திருமலை திருநந்தனவனக் கைங்கர்யத்தை அநந்தாழ்வானும் திருச்சுகனூர் அலர்மேல் மங்கை கைங்கர்யங்களை நடாதூரர்ழ்வானும் செல்வப்பிள்ளை கைங்கர்யங்களை கிடாம்பியாச்சானும் குறைவற நடத்திவந்தார்கள். பேரருளாளன் சாலைக்கிணற்றுத் திருமஞ்சனகைங்கர்யத்தைப் பிள்ளானும் திருவேங்கடமுடை

யான் ஆகாசகங்கை திருமஞ்சனகைங்கர்யத்தை பிள்ளை திருமலைநம்பியும் நடத்திவந்தார்கள்.

ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக்கிடக்கிற சேதநர்கள் கடைத்தேறும்படி மோக்ஷோபாயமான பிரபத்தியை நாடெங்கும் நிலைநிறுத்தி வேதாந்த ஸித்தாந்தத்தை வளர்த்துவைத்த ஸ்ரீராமாநுஜாசார்யஸ்வாமிகள் இம்மண்ணுலகில் நூற்றிருபத்தைந்து திருநக்ஷத்திரம் (வருஷம்) வஸித்தார்கள். இப்போதும் ஸ்ரீராமகிருஷ்ணதிமூர்த்திகளைப்போலே அர்ச்சாரூபமாய் எங்கும் நிலைபெற்று வீற்றிருக்கிறார்கள்.

அன்பர்களே! ஸ்ரீஸ்வாமிகளின் சரித்திரத்தை இத்துடன் முடிவுசெய்கிறோம். சரித்திரப்போக்குமுழுதும் ஸாவதானமாய் வாசித்துக்கொண்மின்! அநேக கட்டங்கள் ஸ்ரீராமாயணத்தின் போக்காக இருக்கின்றன. பெரும்பாலும் அவைகளை ஒப்பிட்டுக்காட்டியிருக்கிறோம். ஸ்வாமிகள் அருளாளப்பெருமாளைப்பிரிந்து திருவரங்கப்பெருமாள் அரையரோடு அரங்கநகருக்குப் புறப்படும் கட்டமானது ஸ்ரீராமன் தசரதரிடம் விடைபெற்று தண்டகாவநம் புறப்படும் கட்டத்துக்கு முழுதும் ஒத்திருப்பதுதவிர லக்ஷ்மணர் கடைசியாக ஸ்ரீராமரிடம் விடைபெற்றுச்செல்லும் கட்டத்தையும் ஒருவாறு ஒத்திருக்கிறது. இந்த ஒப்புமைகள் சரித்திரத்திற்கு ஒரு பெருமையைக்காட்டுவதோடு ஸ்ரீஸ்வாமிகளின் பெருமையையும் ஸ்பஷ்டமாய் விளங்கச்செய்கின்றன. இவற்றைக்கொண்டே ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளின் அவதாரப்ரகரணத்தில் நாம் குறிப்பிட்ட விஷயம் யாவையும் யதார்த்தமானவையென்று புத்திமான்கள் தெரிந்துகொள்ளக்கூடுமென்று நினைக்கிறோம்.

கோயில், திருமலை, பெருமாள்கோவில், திருநாராயணபுரத்தெம்பெருமாள்களும், திருமலைநம்பிகள், பெரியநம்பிகள், திருக்கோட்டியூர்நம்பிகள், திருமாலையாண்டான் திரு

வரங்கப்பெருமாள் அரையர் என்னும் ஐந்து ஆசாரியர்களும்செய்த அநுக்கிரஹத்தின் பெருமைகளும் குறிப்பாய்க் கவனிக்கத்தக்கன. ஸ்வாமிகளின் பெருமைகள் எவர் எவர்களால் வெளியிடப்பட்டிருப்பதென்பதையும் உற்றுணர்ந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு நாம் சுருக்கமாக எழுதிமுடித்த ஸ்ரீராமாநுஜாசார்யஸ்வாமிகளின் சரித்திரத்தில் எமது அறிவின் குறை அஜாக்கிரதை முதலியவைகளால் நேர்ந்திருக்கக்கூடிய குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டியது பண்டிதர்களின் கடைமையாகும்.

பூமகள் கேள்வன் பொன்னடி யாகும்
பாமகிழ் மாறனார்க் கடியாஞ்
சேமமேற் றுய்ந்தான் சேனையர் கோமான்
சேடன்மா லுருவென வேற்றுந்
தாமணி ராமா நுசமுனித் தலைவன்
தன்சரி தத்தினைத் தினமுந்
தூமதி யோடுந் துதிமினீர் தொண்டீர்
தூயதாம் பயனெலாம் பெறுவீர்.

ச்யாமதேசிக திருமலை தாதாசாரியர்.

முற்றிற்று.

ஸுலலிதாமனோஹரம்.

பரிச்சேதம்—1.

ஹே காந்தாமணீ! இன்று என் மனம் மிகவும் உற்சாகத்தையடைந்திருக்கின்றது. காரணம் இன்னதென்று தெரிந்துகொள்ளக் கூடவில்லை. 'என்னையறியாமலே என் மனதிற்கு அதிக ஆனந்தமுண்டாகின்றது. இதுகாறுமில்லாமல் இப்பொழுது என் வலதுபுஜமும் துடிக்கின்றது. எனது இஷ்டானுகூலங்கள் இன்று நிறைவேறக் கூடுமென்று நிச்சயமாய் சொல்லுதற்கு வேண்டிய தைரியம் எனக்கு உண்டாவது யாதுகாரணங்கொண்டோ அறிகிலேன். இன்று யான் கண்ட சுபசகுனங்களையும், அடைந்திருக்கும் சந்தோஷத்தையும் நினைத்துக்கொண்டால் எனக்கே ஆச்சரியமாயிருக்கின்றது. தெய்வச்செயலை யறிந்தார் யார்? யான் இதுகாறும் மக்களைப்பெற்று மழலைச் சொற்களைக்கேட்டு மனமகிழாத மாபாவியானேன். எனக்கு அளவற்ற செல்வங்களிருப்பினும் யாது பயன்? பிள்ளையில்லாத பாக்கியம் நான் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்?' எத்தனையோ விரதமிருந்தேன். நதிகளாடினேன். நானா தேசங்கட்கும் யாத்திரை சென்றேன். காணாத க்ஷேத்திரங்களில்லை. மூழ்காத தீர்த்தங்களில்லை. செய்யாத தருமங்களில்லை. கடைசியில் மனஞ்சலித்து எனது பிராணேசுவரி காந்தாமணீ ஸஹிதம் ஸ்வதேசமாகிய

இந்த மனோரஞ்சிதபுரியை யடைந்தேன். ஹா! ஜகதீசா, உனது ஸன்னிதானத்திற்குப் பிரதிநித்தியமும் இராக்காலங்களில் நானும் என் மனைவியுமாக தவறாது வந்துகொண்டிருப்பதை நீயும் அறிவாய். ஹா பகவானே! என்று எனது மனக்குறை தீருமோ? எப்பொழுது உன் கிருபாகடாக்ஷம் என்மீது வீசுமோ? என்றென் மனோர்த்தம் ஈடேறுமோ உணர்கிலேன். இவ்வளவு கஷ்டங்களையனுபவித்துக் கொண்டு யான் இப்பூவுலகில் இருந்தென்ன பயன்? என் மனதின் நிலைமையையும், யான் படும் துயரத்தையும் பக்தவத்ஸலா, நின்னையன்றி யாரறிவர்? அளவற்ற செல்வங்களை யான் பெற்றிருந்தும் ஒரு புத்திரனில்லாக் குறையால் பரதேசிபோலானேன். பாரினில் பலர் நகைக்க உடலெடுக்கலானேன். ஆதிமத்யாந்தரஹிதா! யான் செய்த பாவம் எப்பொழுது தொலையுமோ தெரியவில்லை. என் கவலையொழிந்து கஷ்டம் நீங்கி யான் சுகமுறும் காலமும் இருக்கின்றதா! பரமாத்மாவே! என் எண்ணம் நிறைவேறாதபடி நான் செய்த பாவந்தானென்ன! கருணைக்கடலே! ஜகதீசா! என்னைக் கடாக்ஷிக்கலாகாதா! என்று இவ்வாறாகச் சொல்லிச்சொல்லி ஒரு சுந்தரபுருடன் பலவாறு துக்கித்தும், பகவானைப் பிரார்த்தித்தும் பெருமூச்சுவிட்டுத் தன் நிலைமையை யெண்ணிக் கண்ணீர் சொறிந்தான். அருகில் இருந்த அன்னவன் மனைவியும் ஆற்றொணாத் துயரமெய்தித் தன் துக்கத்தை யடக்கமுடியாமல் பிரலாபிக்கலானாள்.

பின் ஸதிபதிகளிருவரும் ஒருவாறு தேறி பகவானைத் தரிசனம் செய்துகொண்டு ஈச்வர ஸன்னிதானத்தைவிட்டு வெளியில் வந்தார். தக்ஷணமே குழந்தை அழும் சப்தமொன்று கேட்டது. உடனே அதிக ஆச்சரியத்துடன் ஸ்திரீ புருஷர்களிருவரும் அந்த சப்தம் வருமிடத்தை நோக்கி விரைந்துசென்றனர். ஹா! என்ன ஆச்சரியம்! ஸர்வலோகசரண்யரின் செயலை யறிந்தார் யார்? இரத்ன கசிதமான ஒரு தட்டில் ஆண்குழந்தையொன்று படுத்திருக்கக்கண்டனர். குழந்தையைக்கண்டதும் தம்பதிகளுக்கு உண்டான ஆனந்தத்தையென்னென்று கூறுவோம். உடனே கார்ந்தாமணி குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டு அத்யானந்தபரிதையாய் தனது பிராணநாதனிடம் தர விஜயார்த்தனனும் அதிக சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டான். தக்ஷணமே கடிதமொன்று கீழே விழ உடனே அதை யெடுத்து ஆவலுடன் வாசிக்கையில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"விஜயார்த்தனே! நீ இதுகாறும் பகவானைப் பிரார்த்தித்து வந்ததின் பலனாக உனக்கு இந்தக்குழந்தை கிடைத்திருக்கின்றது. இப்பாலகனை வளர்ப்பதற்காக பிரதிமாதமும் முதல் தேதியில் ரூ. 200 கிடைக்கப் பெறுவாய். ஆனால் அது எது, எவ்விடத்திலிருந்து வந்தது என்றுமட்டும் நீ விசாரிக்கக்கூடாது. தட்டின் கீழிருக்கும் ஸுவர்ணமாலையை இக்குழந்தையின் கழுத்தில் போட்டு "மனோஹரன்" என்று பெயரிட்டுப் பிரியமுடன் வளர்த்து வருவாயாக."

இக்கடிதத்தைப் படித்ததும் மிகுந்த வியப்படைந்து உடனே தட்டை யெடுத்துப் பார்க்க அதின்கீழ் ரூ 200ம், ஸுவர்ணமாலை யொன்றும் இருக்கக்கண்டு அதிக சந்தோஷத்துடன் அம்மாலையை யெடுத்துக் குழந்தையின் கழுத்தில்போட்டு அப்பாலகனை யெடுத்துக்கொண்டு தமது கோரிக்கையை ஈடேற்றிய பகவானைப் பலவாருக ஸ்தோத்தரித்து பிறகு தேவாலயத்தைவிட்டு சந்தோஷசித்தர்களாய் இல்லிற்குச் சென்றனர். மறுநாட்காலையில் விஜயார்த்தனனும் காந்தாமணியும் ஈச்வர ஸன்னிதானத்திற்குவந்து ஜகதீசனை வணங்கி, அநேக தானதருமங்களைச்செய்து இஷ்டமித்ர பந்துஜனங்கள் அனைவரும் ஸந்தோஷிக்க விருந்து முதலியவைகளை நடத்தி அத்யானந்தபரிதர்களாய் தங்களுக்குத் தேவாலயத்தில் கிடைத்த குழந்தைக்கு "மனோஹரன்" என்று பெரிட்டு மிகுந்த பிரியத்துடன் வளர்த்து வரலாயினர்.

பரிச்சேதம்—2.

மனோரஞ்சிதபுரி மிகவும் சிறந்த நகரம். அது வீரகேஸரி மன்னனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. புரஜனங்கள் இராஜ விச்வாஸிகளாய் தர்மமார்க்கதர்சிகளாய் இருந்து ஸதா ஸந்தோஷத்தோடு காலங்கழித்துவந்தனர். அந்நகரத்தில் விஜயார்த்தனன் மிகுந்த பிரக்யாதியுடன் வாழ்ந்துவந்தான். எங்கு பார்ப்பினும் அவனுடைய தர்மங்களாகவே நிறைந்திருந்தன. குழந்தை பிறக்கவில்லையே யென்ற மனவருத்தமொன்றுதான் நெடுநாளாக அவன் மனதில் இருந்துவந்தது. ஈச்வரகிருபையால் இப்பொழுது அந்த வருத்தமும் நீங்கிவிட்டது. தனக்குப் பகவானுடைய ஸன்

னிதானத்திற் கிடைத்தக் குழந்தைக்கு "மனோஹரன்" என்று நாம கரணம்செய்து அத்யந்த பிரியத்தோடு வளர்த்துவந்தான். பிரதி மதியும் முதல் தேதியில் தவறாமல் ரூபாய் இருநூறு மணியாடர் மூலமாக விஜயார்த்தனனுக்குக் கிடைத்துவந்தது. அது எது எவ் விடத்திலிருந்து வந்தது என்பதைப்பற்றி அவன் ஒன்றும் விசாரிக்க வேயில்லை. இப்படியாக, நடந்துவருகையில் மனோகரனுக்கு வயது ஐந்தாயிற்று. விஜயார்த்தனன் தகுந்த ஆசிரியர்களை நியமனம் செய்து மனோகரனை அவர்களிடத்தில் ஒப்புவித்து கல்வியை கச டறக் கற்கும்படி எற்பாடுகள் செய்தான். மனோகரனும் தனது பன்னிரு பிராயத்திற்குள்ளாக கற்றுக்கொள்ளவேண்டியவைகள் அனைத்தையும் பூரணமாய்த் தெரிந்துகொண்டு வித்தியாவந்தனாய் விளங்கினான். மனோகரனின் வித்வதீஸாமர்த்தியங்களைக்கண்டு விஜ யார்த்தனனும் காந்தாமணியும் வெகு ஆனந்தமடைந்தனர். இங்ங னமாக ஸந்தோஷத்துடன் காலத்தைக் கழித்துவருகையில் ஒருநாள் திடீரென்று காந்தாமணீ காணமற்போனான். பற்பல இடங்களி லும் தேடினர்; அகப்படவில்லை. கடைசியாக ஒரு குளத்தின் சமீப த்தில் அலங்கோலமான நிலைமையில் பிரேதமொன்று காணப்பட் டது. கைகால்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. பிணத்தின் தலையை மட்டும் காணோம். காந்தாமணீ நேற்றிரவு தரித்திருந்த வஸ்திர மும் அந்த பிணத்தின் மீதிருந்தது. அப்பிரேதத்தின்மேலிருந்த ஆபரணங்கள் காந்தாமணியினுடையதாவே காணப்பட்டன. காந் தாமணியின் சரீரத்துக்கும் அப்பிண்த்துக்கும் யாதொரு வித்தியா சமும் இருப்பதாகத் தோன்றவில்லை. அனைவரும் காந்தாமணி இறந்தாளென்றே நிச்சயித்தனர். மனோகரனும் விஜயார்த்தனனும் காந்தாமணியின் சவந்தானென்று தெரியவந்ததும் கீழே விழுந்து மூர்ச்சையாயினர். பிறகு ஜனங்களாலும், பந்துக்களாலும் ஒரு வாறு தேற்றப்பட்டு காந்தாமணியின் உடலை மயானத்திற்கு எடுத் துச்சென்று செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் செய்துவிட்டு இல்லத்திற்குத் திரும்பினர். மறுநாட்காலையில் விஜயார்த்தனரை யும் காணோம். எவ்வளவோ பிரயாசை யெடுத்துக்கொண்டு அநேக இடங்களில் விசாரித்தும் பிரயோஜனப்படாமற்போய்விட்டது. எல்லோரும் தேடித்தேடி அலுத்தனர். ஒன்றும் பயன்படவில்லை. மாதாபிதாக்கள் இருவரையும் ஒருங்கே பறிகொடுத்துவிட்ட மனோ

கானின் மனோசஞ்சலத்தை யாரால் எடுத்துரைக்க வியலும்? பொறுக்கமுடியாத வியஸனத்துடன் நாட்களைக் கடத்திவந்தான்.

அவ்வூரில் விக்கிரமசேனன் என்றொருவன் இருந்தான். இவன் மனோரஞ்சிதபுரிக்கு வந்து சின்னாட்களேயாயின. இவன் வெகு தந்திரசாலி. விஜயார்த்தனனுடைய ஐச்வரியங்களைத் தான் அபகரித்துக்கொண்டு ஏகபோகமாக அனுபவிக்கவேண்டுமென்ற பேராசை இவனுக்கு நெடுநாளாக இருந்தது. ஆனதுகொண்டு விஜயார்த்தனனைத் தொலைப்பதற்காக வேண்டிய தந்திரங்களைத் தேடிவந்தான். அவனுடைய் எண்ணத்திற்கு ஏற்றபடியே அகஸ்மீகமாய் காந்தாமணியும் காலஞ்சென்றுவிட்டாள். விஜயார்த்தனனும் காணாமற் போனான். அவன் சென்ற இடம் இன்னதென்று இன்னும் தெரிந்தபாடில்லை. அவன் இந்த உலகத்தில் ஜீவிதனாய் இருக்கின்றானோவென்பதும் சந்தேகம். இப்பொழுது அவனுடைய ஐஸ்வரியங்களெல்லாம் மனோகரனுக்குக் கிடைத்திருக்கின்றது. அவனோ சூதுவினைகள் அறியாத சிறுவன். இவனை ஏமாற்றிவிட்டு எப்படியாவது இந்த ஐச்வரியங்கள் அனைத்தையும் தன் வசப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று பல வஞ்சனைக்கிரிகளை செய்துவந்தான். ஒன்றும் பலிக்கவில்லை. இது இப்படியாக, ஒரு நாள் மாலைப்பொழுது கடைவீதியில் விக்கிரமசேனன் நின்றுகொண்டிருக்கும்போது, ஒரு சுந்தரபுருடன் சிறந்த உடைகளையணிந்து வெகு ஆடம்பரத்துடன் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான். இவன் காரியங்களைக்கண்டு சந்தேகித்து விக்கிரமசேனன் அவனுக்குத் தெரியாமல் அவன் பின் தொடர்ந்து சென்றான். வந்த சுந்தரபுருடனோ பல கடைகளுக்குச் செல்லுவதும் வியாபாரம் செய்வதுபோற் பாவனைகாட்டி கடைக்காரர்கள் சிறிது பாராமுகமாய் இருக்கும்போது நல்ல தினுசுகளாகப் பொறுக்கி எடுத்து அதில் சிலவற்றை அவர்களுக்குத்தெரியாமல் ஒளித்துவிட்டு சரக்குகள் நன்றாயில்லையென்று சொல்லிவிட்டு மற்றொரு கடைக்குச் செல்லுவதும் அங்கும் இப்படியே செய்வதுமாக, அந்த ஒரு தினத்தில் 300 ரூபாய் வரை மதிப்புள்ள சரக்குகளைக்கொள்ளையடித்து அவைகளைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு, மற்றொரு கிராமத்திற்குச் சென்று அங்கு ஒரு பெரிய வீட்டின் திண்ணையில் இறக்கி வைத்துவிட்டுத் தன்னுடைய உடுப்புகளை மாற்றி ஒரு கிழவனைப்போல் வேஷம்போட்டுக்கொண்டு அவ்வீட்டத்திலேயே உட்கார்

ந்தான். இதுவரையில் இவன் செய்த காரியங்களையெல்லாம் கவனித்துவந்த விக்கிரமசேனன் இவனை நமது நண்பனாக்கிக்கொண்டால், நாம் செய்யப்போகும் காரியங்களுக்கு மிகுந்த உதவி செய்வான் இதுதான் சிறந்த யோசனையென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு திருட்டுக்கிழவனிடம் சென்று அவன் காதில இரகஸ்யமாகச்சில விஷயங்களைச்சொல்ல அதைக்கேட்ட அவன் மிகவும் ஆச்சரியப்பட்டு "அவள் ஊரைவிட்டுப்போனது உன்னுடைய சாமர்த்தியத்தினாலேயே" என்று சொல்லிப் பிரமிக்கலானான். பிறகு விக்கிரமசேனனை நோக்கி என் பெயர் தந்திராஜித்து, நாமிருவரும் இன்று முதல் சிநேகிதர்களாயிருப்போம் என்று கூற, விக்கிரமசேனனும் மிகவும் சந்தோஷித்து நாளை காலையில் சில விஷயங்கள் தங்களால் முடியவேண்டியிருக்கிறதென்று சில சங்கதிகளைத்தெரிவிக்க, தந்திரஜித்தவும் அதற்கு இணங்கி, அப்படியே செய்வதாய் ஒப்புக்கொண்டான்.

காலை எட்டுமணியாயிற்று. எவரோ தனவந்தரொருவர் வந்திருப்பதாகவும், அவர் விஜயார்த்தனரைக் காண மிகவும் விருப்பங்கொண்டிருப்பதாயும் தெரிவித்தனர். இவைகளைக் கேட்ட மனோகரன் வெளியில் வந்துபார்க்க, அங்கு ஒருவர் சிறந்த ஆடைகளையணிந்து மிகுந்த ஆடம்பரத்துடன் உட்கார்ந்துகொண்டிருக்கக் கண்டு அவரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் தகுந்த மரியாதைகள்செய்து தனது தாயார் இறந்த செய்தியையும், விஜயார்த்தனன் காணமற்போன விஷயங்களையும் மிகுந்த வியசனத்துடன் அறிவித்தான். இதைக்கேட்ட பிரபு மிகவும் வியசனப்படுகிறவர்போல் நடித்து, "அப்பா மனோகரா! என்னை அன்னியனென்று நினைக்கவேண்டாம். நான் உன் தந்தையின் பிராணசிநேகிதன், என்னைத் தந்திரஜித்து என்று அழைப்பார்கள். இங்ஙனமாக உனது தந்தைக்கு நேரிடுமென்று நான் கனவிலும் கருதினேனல்லேன், என்னசெய்வது, எல்லாம் ஈச்வராக்ஞை, நீயோ சிறுவனாயிருக்கிறாய், உன் தந்தையின் காரியங்களை நன்றாய்க்கவனித்து நடத்திவருவதற்கு உன்னால் ஆகமாட்டாது, எனக்கு ஒரு ஆப்தமித்திரர் இருக்கின்றார், அவர் மகா ஸத்யவான், உனக்குத் தகுந்த வயது வருமளவும் மேல் பார்த்து வருவதற்கு அவரை நியமித்தால் மிகவும் நலமாயிருக்கு

மென்று நம்புகிறேன். இப்படிச் செய்தாற்ருன் உனது தந்தையின் காரியங்கள் செவ்வனே நடைபெறும், நீயும் பிற்காலத்தில் அவரைப் போல் சிறப்படையலாம், நானும் என்னுலான உதவியை வஞ்சக மின்றி உனக்குச் செய்யத்தயாராய் இருக்கின்றேன். இதைப்பற்றி இவ்வளவு தூரம் உனக்குச் சொல்ல வந்தது, எனது மித்திரன் விஜயார்த்தனனை உத்தேசித்தும், உனது நன்மையைக் கருதியுமே யென்று அறிந்துகொள்" என்று பலவாருகச் சொல்ல, சூதுவினை கள் அறியாத மனோகரனும் தந்திரஜித்து கூறிவந்ததையெல்லாம் உண்மையென்று நம்பி மறுநாட்காலையில் விக்கிரமசேனனை அழைத் துவரும்படிசெய்து, அவனைத் தன் தந்தையின் காரியங்களைக் கவனி த்துவரும்படி மிகவும் வேண்டிக்கொள்ள, விக்கிரமசேனனும் தன் தந்திரம் பலித்ததென்றெண்ணி அங்ஙனமே ஒப்புக்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைத் தந்திரஜித்துடன் கலந்து நடத்திவரலா ஞன்.

மனோகரன் வழக்கம்போல் பாடசாலையில் வாசித்துவந்தான். இவனுக்குக் 'கமலாகரன்' என்ருெருமித்திரன் உண்டு. இவ்விருவ ரும் ஒருவரையொருவர் பிரியாது மிகவும் நேசித்துவந்தனர். பள் ளிக்கூடமில்லாத நாட்களில் மனோகரன் தனது காலத்தைக் கமலா கரன் வீட்டிலேயே கழிப்பான். இது விஷயங்களெல்லாம் விக்கிர மசேனனுக்கும் தந்திரஜித்துக்கும் நன்ருய்த் தெரியும். விக்கிரம சேனனும் தந்திரஜித்தும் இப்பொழுது முன்போலில்லை. "ஆற் றிலேபோகிற ஜலத்தை அப்பாகுடி ஐயாகுடி" என்பதுபோல தங்க ளுக்கு இஷ்டமான விஷயங்களிலெல்லாம் விஜயார்த்தனன் திரவி யங்களை வாரி இறைத்துக்கொண்டுவருகிருர்கள். அக்கிரம செலவு கள் மிகவும் அதிகரித்துவிட்டது. இதற்கிடையில் தந்திரஜித்துக் கும் விக்கிரமசேனனுக்கும் மனோகரன் இருப்பது ஒரு பெரிய தடை யென்றும், எவருக்கும் தெரியாமல் அவனைக் கொன்றுவிட்டு விஜயா ர்த்தனரின் ஐச்வரியங்களை ஸ்வதந்திரமாய் அநுபவிக்கவேண்டுமெ ன்றும் துராலோசனை ஒன்றுண்டாயிற்று. இக்கருத்தை மனதில் வைத்துக்கொண்டு மனோகரனைத் தொலைத்துவிடப் பலசூழ்ச்சிகள் தேடிக்கொண்டிருந்தனர்.

ஒரு நாள் மாலை ஆறரை மணியிருக்கலாம். மனோகரன் பாட சாலையிலிருந்து வந்தவுடன் வழக்கம்போல் தன் மித்திரன் கமலா

கரனுடைய வீட்டிற்குச்சென்று தன் உடைகளையெல்லாம் கழற்றி விட்டு சாதாரண உடையொன்று தரித்துக்கொண்டு தன் நண்பன் வீட்டில் இல்லாததால் அவனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். இத்தருணத்தில் ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்து 'கமலாகரன்மீது வண்டியேறி கால்கள் முறிந்து மிகுந்த அபாயகரமான நிலைமையில் இருப்பதாயும், பல வைத்தியர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டு சிகிச்சைகள் செய்கிறதாயும் இதை உன்னிடம் தெரிவித்து அழைத்துவரும்படி சொன்னான்' என்றும் தெரிவிக்க இதைக்கேட்ட மனோகரன் உடையொன்றும் எடுத்துக்கொள்ளாமல் தரித்திருந்த சாதாரண வஸ்திரத்தோடு மிகுந்த ஆத்திரத்துடன் வந்தவனோடு வெகு அவசரமாய்ச் சென்றான். இதற்குள் இருளும் நெருங்கிவிட்டது. பயங்கரமான ஆரண்யத்தில் இருவரும் வந்தனர். மனோரஞ்சிதபுரிக்கும் இவர்கள் இருக்குமிடத்திற்கும் சுமார் எழெட்டுமைல்களிருக்கலாம். இதற்குள் அவ்வளவுதூரம் வந்துவிட்டனர். கமலாகரனையோ காணோம். மனோகரனுக்கும் மார்க்காயாஸம் உண்டாயிற்று. இனி அதிகதூரம் போவதற்கு இஷ்டப்படவில்லை. அத்துடன் மனதில் அச்சமும் சந்தேகமும் நிறைந்து மனக்கலக்கம் விளைவித்தது. உடனே வந்தவனை நோக்கி 'இனி அதிகதூரம் செல்வதற்கு சாத்தியப்படாது, ஐயோ! கமலாகரன் எங்கே என்று கேட்க, அதற்கு வந்தவன் இதோ அவனைக் காட்டுகிறேனென்று கூறி ஒளித்துவைத்திருந்தவாளை யெடுத்து மனோகரனை வெட்டமுயன்றான். உடனே மனோகரனுக்கு சங்கதி இன்னதென்று தெரியவந்தது. வெட்டுவதற்கு ஓங்கிய வாளை மனோகரன் தடுப்பதற்குள்ளாக அது அவன் கழுத்தில் விழுந்தது. ஐயோ! மனோகரன் நிலத்தில் வீழ்ந்தான். பிணமானான்.

பரிச்சேதம்—3.

பயங்கரமான காட்டில் ஒரு அங்கனாமணி ஒரு திருடனிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றாள். ஐயோ! அவள் அந்த ஆரண்யத்தில் அக்கள்வனிடமிருந்து தப்பித்துக்கொள்ள பலவித ஸாகஸங்கள் செய்தும் முடியாமல் பெற்றோரை நினைத்துப் பிரலாபிப்பது கேட்பதற்கு மிகவும் பரிதாபமாய் இருக்கின்றது. திருடனோ தன்

னுடன் வராவிடில் இவ்வாளாலுன்னை வெட்டிவிடுவேனென்று பயமுறுத்துகின்றான். சுந்தராங்கனையின் மனமோ தாமரையிலை நீர் போல் தத்தளிக்கின்றது. திருடனுக்கோ கோபமும் ஆத்திரமும் அதிகமாய்விட்டன. உடனே கரவாளையுருவி ஸ்திரீ ரத்னத்தை வெட்டத் துணிந்துவிட்டான். வாளைக்கண்டதும் தன் வாழ்நாள் இன்றுடன் முடிந்ததென்றெண்ணி ரமணீமணி நடுங்கினாள். வாளும் கழுத்தில் விழுந்துவிட்டது. நாரியர் நாயகமும் கீழே விழுந்து மூர்ச்சித்தாள். இப்படிப்பட்ட தருணத்தில் அத்திருடன்மேல் ஒரு கத்திவெட்டு கதக்கென்று விழுந்தது. உடனே கள்வனும் நிலத்திற் சாய்ந்தான். நாரீரத்னத்தை வெட்டவந்த வாளும் குறி தப்பிப் போய் மற்றோரிடத்தில் விழுந்தது. தக்ஷணமே அதிரூபனான சுந்தரபுருடனொருவன் ஆங்கு தோன்றினான். இதைக்கண்ட அங்கனாமணி தன்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றிய வீரபுருஷனை மிகவும் கொண்டாடி தன் வந்தனத்தைச் செலுத்தி நன்றியறிதலைக் காட்டி பகவானைப் பலவாறு ஸ்தோத்தரித்தாள். அவ்விடத்தில் வந்தவன் வேறெவனுமல்ல. நமது தோழனாகிய மனோகரன் தான். காட்டில் மீளவும் எழுந்திருந்து தன்னை வெட்டவந்தவன்மீது அவ்விடத்திலிருந்த ஒருபெரிய கல்லைத்தூக்கி எறிய அது அவன்முகத்திற் பட்டு பற்களெல்லாம் உதிர்ந்து பலமானகாயத்துடன் அவன்கீழேவிழ உடனே அவனுடைய வாளைப்பிடுங்கிக்கொண்டு மறுபடியும் அவனையடிக்கப்போக, இதைக்கண்ட அவன் பயந்து மனோகரா! என்னை அடிக்கவேண்டாம். இன்று எனக்கு உயிர்ப்பிச்சைக்கொடு, நடந்த விஷயங்களெல்லாம் ஒளியாமற்சொல்லிவிடுகின்றேன். கமலாகரனுக்கு யாதொரு அபாயமும் நேரவில்லை. அவன் உன்னைத்தேடிக்கொண்டு வீட்டிற்கு வந்த தருணத்தில் விக்கிரமசேனன் அவனை ஒரு அறையில் அடைத்துவிட்டு என்னை உன்னிடம் போகச்சொல்லி, "கமலாகரன் அபாயகரமான நிலைமையில் இருப்பதாகவும், உன்னை உடனே அழைத்துவரும்படியாகச் சொன்னான்" என்றும் கூறித் தந்திரமாகக் காட்டிற்கு அழைத்துக்கொண்டு சென்று அவ்விடத்தில் உன்னைக் கொலை செய்துவிடும்படியாகப் புகன்று அதற்காக விக்கிரமசேனன் எனக்கு அளிப்பதாகச் சொன்ன ஆயிரம் ரூபாய்க்கு நான் ஆசைப்பட்டு இவ்வடவியில் உன்னைக்கொல்ல முயன்றேன். என்னை மன்னிக்கவேண்டும். இனி நீ வீட்டிற்குப்

போகக்கூடாது. என் வார்த்தையைத் தடுத்துச்சென்றால் உன்னைக்கொன்றுவிட்டதாகப் பொய்கூறி யான் பெற்றுக்கொள்ளப்போகிற ஆயிரம் ரூபாயும் எனக்குக் கிடைக்காமற்போய்விடுவதுந்தவிர எந்தவிதத்திலாவது உன்னையும் கொன்றுவிடுவான். ஆகவே இப்போது விக்கிரமசேனன் இருக்குமிடத்தைவிட்டு நீங்கி சிலவருஷங்கள் வரையிலாயினும் மறைவாயிருந்து உயிர்பிழைப்பதே நலமாயிருக்குமென்றான். இவ்விஷயங்களைக்கேட்ட மனோகரன் மிகவும் ஆச்சரியப்பட்டுக்கொண்டு உலகத்தில் இப்படியும் நடக்கிறதாவென்று சிந்திக்கலானான். விக்கிரமசேனனும் தந்திரஜித்தும் இதுவரையில் நடத்திய காரியங்களெல்லாம் கபடமான எண்ணத்தைக்கொண்டென்று தெரியவந்தது. பிறகு வீட்டிற்குச் செல்வதில் பயனில்லையென்று நினைத்துத் தன்னைக் கொல்லவந்தவனுக்கு விடைதந்துவிட்டு அவனுடைய வாளைத் தான் பெற்றுக்கொண்டு இச்சிறு பிராயத்தில் தனக்குச் சம்பவித்த பல கஷ்டங்களையும், தாய்தந்தையர்கள் இருவரும் தன்னைத் தனியேவிட்டுச் சென்றதையும் எண்ணியெண்ணி மனம் புண்ணாகிப் பலவாறாகத் துக்கித்துக்கொண்டு அக்காட்டின் வழியே வந்துகொண்டிருந்தான். அத்தருணத்தில் எங்கிருந்தோ சப்தமொன்று கேட்க அவ்விடத்திற்குச்சென்று பார்த்ததில் திருடனுக்கும் நமது அங்கனாமணிக்கும் நடந்த விஷயங்களையும், கடைசியில் திருடன் வெட்டவருவதையுமறிந்து தான் கொண்டுவந்திருந்த வாளைத் திருடன்மீது குறிப்பாய் வீசி எறிய அது கழுத்தில் விழத்திருடனும் மூர்ச்சித்து நிலத்திற் சாய்ந்தான். பிறகு நமது அங்கனாமணியைப் பலவாறு தேற்றி நடந்த விஷயங்களை வினவியதில் தான் சுந்தரபுரியின் மன்னர் குணசீல மகாராஜாவின் புத்திரி என்றும், தன் பெயர் "ஸுலலிதாகுமாரி" என்றும் தான் பாடசாலையிலிருந்து வெளியில்வரும்போது இத்திருடன் தூக்கிக் கொண்டுவந்துவிட்டதாகவும் பிறகு தன்னுடைய ஊருக்கும் வரும்படி அழைக்கத் தான், அதற்கு இணங்காதது கண்டு தன்னைவெட்ட வந்தானென்றும் கூறினாள். பின் மனோகரன் தான் தக்க தருணத்தில் வந்துதவியதற்காக மிகவும் சந்தோஷித்து திருடனைப் பார்த்ததில் அவன் இறக்கமாட்டான் என்பதைத் தெரிந்துகொண்டு வாளைமட்டும் கைப்பற்றி அக்கள்வனை அக்கானகத்திலேயே

விட்டுவிட்டு ஸுலலிதாவை யழைத்துக்கொண்டு சுந்தரபுரியை நோக்கி அக்காட்டில் வழிபிடித்துக்கொண்டு சென்றான்.

சுந்தரபுரியில் ஸுலலிதாவைக் காணோமென்று பலவிடங்களிலும் தேடித்திரிந்தனர். குணசீலமன்னனும் அவர் மனைவி கமலாக்ஷியும் ஸுலலிதா அகப்படாததையறிந்து வெகுவாய் வியசனித்து அவளை எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டுமென்றெண்ணி நகருக்கு வெளியே அவளைத் தேடிக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் யாரோ இருவர் வருவதுபோல் காணப்பட்டது. உடனே அவ்விடத்திற்கு தங்கள் வண்டியை அதிவேகமாய் விட்டுக்கொண்டுசென்றனர். இவர்கள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் அதிரூபனான ஒரு பாலியனுடன் ஸுலலிதா வந்துகொண்டிருப்பதைக்கண்டு ஆனந்தபரிதர்களாயினர். பிறகு அதிக சந்தோஷத்துடன் அச்சுகுமாரனையும் ஸுலலிதாவையும் தங்கள் வண்டியிலேற்றிக்கொண்டு நடந்த விஷயங்கள் அனைத்தையுமறிந்து அப்பால்யனின் ஸாகஸத்திற்கு மெச்சி மனமகிழலானான். பிறகு மனோகரனை தனது அரண்மனையிலேயே வைத்துக்கொண்டு ஸுலலிதாவுடனிருந்து கல்வியைக் கற்குமாறு ஏற்பாடுகள் செய்தான். ஸுலலிதாவும் மனோகரனும் மலரும் மணமும்போலிருந்து ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் நேசித்து தங்கள் கல்வியை அபிவிர்த்தி செய்துகொண்டுவந்தனர். குணசீலனும் கமலாக்ஷியும் இவர்கள் நட்பை மிகவும் ச்லாகித்து இவ்விருவரும் என்றும் பிரியாது ஒருமித்து வாழும்வண்ணம் மனோகரனுக்கும் ஸுலலிதாவுக்கும் விரைவில் விவாகம்செய்து ஆனந்திக்கவேண்டுமென்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

பரிச்சேதம்—4.

—இன்னும் வரக்காணோமே? இராவாய்விட்டதே? கமலாகரன் வீட்டில் என் செய்துகொண்டிருக்கிறான்? உடனே தாமதியாது மனோகரனை அழைத்துவாவென்று விக்கிரமசேனன் தனது வேலைக்காரனைக் கமலாகரன் வீட்டிற்கு அனுப்ப, அங்கு மனோகரன் இல்லாததைக்கண்டு திரும்பிவந்து விக்கிரமசேனனிடம் தெரிவித்தான். இதைக்கேட்ட விக்கிரமசேனன் தக்ஷணமே போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று மனோகரனைக் காணோமென்றும், கமலாகரனுடைய

வீட்டிற்குச் சென்றவன் மறுபடியும் திரும்பிவரவில்லையென்றும் தனக்குக் கமலாகரன்மீது சந்தேகமாய் இருப்பதால் அவன் வீட்டைத் தக்ஷணமே சோதனை செய்யவேண்டுமென்றும் தெரிவித்தான். உடனே இருபது போலீஸ்வீரர்கள் விக்கிரமசேனனுடன் கமலாகரன் வீட்டைச் சோதனை செய்தனர். மனோஹரன் அன்று மாலையில் தரித்திருந்த உடுப்புகளெல்லாம் கமலாகரன் வீட்டிலிருந்து கிடைத்தன. அவற்றில் ஒரு உடுப்பு இரத்தத்தில் நனைக்கப்பட்டுக் கிடந்தது. அந்த உடுப்புமட்டும் வேறொரு இடத்திலிருந்து கண்டெடுத்தனர். மற்ற உடைகளிலும் இரத்தம் சிதறியிருந்தது. தரையெல்லாம் இரத்தமயமாய் இருக்கக்கண்டு திகைத்தனர். உடனே சந்தேகம் பலப்பட்டது. மனோகரன் அன்றுகாலை யணிந்திருந்த ஆபரணங்களைமட்டும் அவ்விடத்திற்காணோம். மனோஹரன் தரித்திருந்த ஆபரணங்களை யபகரித்துக்கொள்ளவெண்ணி அவனைக் கமலாகரன் கொன்றுவிட்டானென்று விக்கிரமசேனன் கூறினான். அந்த உடை இரத்தத்தால் நனைக்கப்பட்டும் மற்ற உடைகளிலெல்லாம் சிதறியும், தரையெல்லாம் இரத்தமயமாயுமிருப்பதால், மனோகரன் அலங்கோலமான நிலைமையில் கொலையுண்டிருக்கலாமென்றும் சவம் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறதென்றும் அங்கு வந்திருந்த டாக்டரும் அபிப்பிராயப்படலானார். விக்கிரமசேனனுடைய வார்த்தையை ஜனங்கள் நம்பினார்களேயொழிய கமலாகரன் சொன்ன வார்த்தைகள் செவிக்கேறவில்லை. உடனே கமலாகரனைக் கைதிசெய்து அழைத்துக்கொண்டு போயினர். வீசாரணையும் நடந்தது. நாளையதினம் தீர்ப்பு சொல்வதாக நியாயாதிபதி தெரிவித்தார். மறுநாட்காலையில் 'கேஸின்' முடிவையறிந்துகொள்வதற்காக வெகு ஜனங்கள் வந்திருந்தனர். கடைசியாக நியாயாதிபதி தமது அபிப்பிராயத்தையுமொட்டித் தீர்மானத்தை எழுதி வாசித்தார். அதாவது "கமலாகரன் மனோகரனைக் கொலை செய்திருக்கலாமென்றே அபிப்பிராயப்படுகிறோம். ஆனதால் நாளையதினம் காலை அவனைத் தூக்கிற்போட்டுவிடும்படியாகத் தீர்மானித்துவிட்டோம்" என்றார். கமலாகரன் ஒன்றும் தோன்றாதவனாய் பிரமித்தான். சேவகர்கள் அவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோக அருகில் நெருங்கினர். உடனே சபையில் ஒரு கோலாகலமுண்டாயிற்று. திடீரென்று எங்கிருந்தோ ஒருவன் ஓடிவந்து கமலாகரனைக் கட்டிக்கொண்டு கதறி

ஞன். கமலாகரனும் வந்தவனைப் பார்த்துத் திடுக்கிட்டு "ஹா மனோ கரா! வந்தாயா!!" என்று அலறினன். நியாயாதிபதி ஒன்றுந்தோன்ருமல் திகைத்தார். விக்கிரமசேனனும் தந்திரஜித்தும் தாங்கள் செய்த தந்திரம் நிஷ்பிரயோஜனமாய்விட்டதேயென்று வியஸனித்தனர். ஜனங்கள் அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

சுந்தரபுரியிலிருந்த மனோகரன் மனோரஞ்சிதபுரிக்கு எப்படி வந்தான்? இது வெகு ஆச்சரியமாயிருக்கிறதே யென்று வாசகர்களுக்குத் தோன்றலாம், ஆனல் நடந்த சங்கதி யாதெனில் மனோகரன் சுந்தரபுரியில் ஒருநாள் மத்தியானம் தமிழ்ப்பத்திரிகை யொன்றைப் படித்துக்கொண்டிருக்கும்போது அதில் ஒரு சமாசாரத்தை வாசித்ததும் 'ஹா கமலாகரா!" என்றுகூவி கீழேவிழுந்து மூர்ச்சித்தான். அருகிலிருந்த லலிதா திடுக்கிட்டு தக்ஷணமே தன்பெற்றோர்கட்குத் தெரிவிக்க உடனே கமலாக்ஷியும் குணசீலமன்னனும் ஓடிவந்தனர். பிறகு மனோகரன் மூர்ச்சைதெளிந்து உட்கார்ந்து தான் பத்திரிகையிற் கண்டவிஷயங்களை குணசீலமன்னனுக்கு வாசித்துக்காட்டி விக்கிரமசேனனும் தந்திரஜித்தும் தன்விஷயத்தில் நடத்திய அக்கிரமங்களையெல்லாம் கூறி கமலாகரனுக்கு இந்த விபத்து நேரிட்டதற்கு விக்கிரமசேனனும் தந்திரஜித்துந்தான் காரணமாயிருக்கலாமென்றும் சொல்ல உடனே குணசீலமன்னர் அதிக கோபமடைந்து தனது மித்திரனுகிய மனோரஞ்சிதபுரி மன்னனுக்கு ஸ்வஹஸ்தலிகிதமொன்று தந்து முப்பது சேவகர்களுடன் மனோகரனை மனோரஞ்சிதபுரிக்கு அனுப்பிவைத்தனர். மனோகரன் அவ்வூரையடைந்து நியாயாதிபதி இருக்குமிடம்போய்ச் சேருகிற தருணமும், நீதியதிபர் தமது தீர்மானத்தைச் சொல்லப்போகும் சமயமும் ஒன்ருயிருந்தது. கடைசியாகத்தீர்ப்பின் முடிவையறிந்த மனோகரன் தனது துக்கத்தைப் பொறுக்கமுடியாமல் ஜனங்கள் மீது விழுந்து ஓடிவந்து கமலாகரனைக் கட்டிக்கொண்டு பிரலாபிக்க, அவனும் மனோகரனென்று அறிந்து பிரமித்துப்புலம்ப, இந்த ஆச்சரியத்தைக் கண்ட ஜனங்களெல்லாம் இவர்களைச் சூழ்ந்துகொள்ள பெரிய 'அமளி' ஆய்விட்டது. ஜன இரைச்சலைக்கேட்ட வீரகேசரி மன்னர், உடனே அங்குவந்து நடந்தவிஷயங்களை யறிந்து வியப்புற்ருன். அத்தருணத்தில் மனோகரன்சென்று, மன்னனை வணங்கி நிருபமொன்றளித்தனன். அதனைப் பிரித்துப்பார்த்ததில்.

வீரகேசரி மன்னவ!

வந்தனம். இந்நிரூபங்கொணரும் மனோகரன் எனதன்பிற்குரியவன். அன்னவன் விஷயத்தில் விக்கிரமசேனனும் தந்திரஜித்தும் நடத்திய அக்கிரமங்கள் அனந்தாநந்தம். அவைகளனைத்தையும் மனோகரன் தங்கட்குத் தெரிவிப்பான். ஒருபாவமும் அறியாத கமலாகரனை இவ்வளவு துன்பங்கட்குட்படுத்திய மேற்கூறிய இருவரையும் தகுந்த விசாரணைசெய்து சரியான தண்டனை விதிப்பீர்களென்று நம்புகின்றேன். கமலாகரனைத் தக்ஷணமே விடுதலைசெய்யவேண்டியது. மற்றவிஷயங்கட்கு மனோகரனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

சுந்தரபுரி. தங்கள் நண்பன்

குணசீலன்.

என்று எழுதியிருந்தது. கடிதத்தை வாசித்ததும் வீரகேசரி மன்னர் கமலாகரனைச் சிறையினின்றும் விடுதலையாக்கி அவனையும் மனோகரனையும் தமது அரண்மனையிலேயே இருக்கச்செய்து அநியாயத்தீர்ப்புசெய்த நியாயாதிபதியையும், விக்கிரமசேனனையும் தந்திரஜித்தையும் காராகிரகத்திற்குக் கொண்டுபோகும்படி உத்திரவு செய்தார். மனோகரனும் கமலாகரனும் நடந்த விஷயங்களையெல்லாம் அரசனுக்கு எடுத்துச்சொல்லினர். மறுநாட்காலையில் அரசன் சபாமண்டபத்திற்குவந்து தந்திரஜித்து, விக்கிரமசேனன், நியாயாதிபதி ஆகிய இவர்களை விசாரிக்கத் தொடங்கினர். இம்மூவரும் உண்மையை மறைப்பதைக் கண்டு ஒவ்வொருவரையும் தூணிற்கட்டி 30 அடிகள்வீதம் அடிக்கும்படி கட்டளையிட, விக்கிரமசேனன் அடிகளைப் பொறுக்கமுடியாமல் நடந்த சங்கதிகளைத் தெரிவித்துவிடுவதாகச் சொல்லி, விஜயார்த்தனரின் செல்வங்களை அபகரிக்கவேண்டுமென்று தான் கொண்டிருந்த எண்ணத்தையும், தந்திரஜித்து தனக்கு நண்பனாகக்கிடைத்த விதத்தையும், பிறகு மனோகரனை தந்திரஜித்தின் சகாயத்தால் மயக்கி விஜயார்த்தனரின் ஐச்வரியங்களை வீணில் விரயம்செய்த விஷயத்தையும், சொத்துக்களை ஸ்வதந்திரமாய் அனுபவிப்பதற்கு ஒரு பெரிய தடையாயிருக்கிற மனோகரனைக் கொன்றுவிட நினைத்து ஜனார்த்தனன் என்ற ஒருவனுக்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச்சொல்லி மனோகரனைக் காட்டிற்

கழைத்துக்கொண்டுபோய்க் கொன்றுவிடும்படிசெய்த சங்கதியை யும், கமலாகரனுக்கு ஆபத்துவந்துவிட்டதென்று பொய்சொல்லி மனோகரனைக் கொல்ல அழைத்துக்கொண்டுபோகும் தருணத்தில் அகஸ்மீகமாய்க் கமலாகரன் வந்துவிட்டால் அவனைக்கொல்லும்படி செய்திருக்கிற ஏற்பாடுகளெல்லாம் கெட்டுப்போகுமென்றும் மனோ கரன் உண்மையைத் தெரிந்துகொண்டு காட்டிற்கு வாராமற்போய் விடுவானென்றும் யோசித்து இந்த ஏற்பாடுகளெல்லாம் கெட்டுப் போகாதிருக்கும்படியும் கமலாகரனுக்கு யாதொரு அபாயமும் நேரி டவில்லை யென்பதை மனோகரன் அறியாதிருக்கும்படியும் அவனைத் தேடிக்கொண்டு வீட்டிற்குவந்த கமலாகரனைத் தான் பலாத்கார மாய் அறையில் அடைத்துவைத்த விஷயத்தையும், மனோகரனைக் கொன்றதுபோல் கமலாகரனையும் தொலைத்துவிடவேண்டுமென் றெண்ணி அவன் மனோகரனைக் கொலைசெய்தானென்று அனைவ ரும் நம்பும்படியாக செகப்பு இங்கியில் நனைக்கப்பட்டு அகஸ்மீக மாய் அங்குகிடந்த துணியை இரத்தத்தில் நனைக்கப்பட்டிருக்கிற தென்று பொய்சொல்லும்படி டாக்டருக்கு ஆயிரம் ரூபாயும் கமலா கரனைத் தூக்கிற்போட்டுவிடும்படியாகத் தீர்ப்பு செய்யவேண்டுமெ ன்று கேட்டுக்கொண்டு அதற்காக நியாயாதிபதிக்கு நாலாயிரம் ரூபா யும் இலஞ்சமாகக் கொடுத்த விஷயங்களையும் விஸ்தாரமாகத் தெரி வித்துவிட்டுக் கடைசியாகத் தன்னை 'மன்னிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். வீரகேசரிமன்னர் செகப்பு இங்கியில் உடை நனைக்கப்படவேண்டிய காரணமென்னவென்று விசாரித்ததற்கு மனோகரன் அன்று மாலையில் தான் கமலாகரன் வீட்டிற்குச் சென்றி ருந்தபோது அலமாரியில் வைத்திருந்த புத்தகத்தை யெடுக்கும் தரு ணத்தில் கைதவறி அங்கு செகப்பு இங்கி வைத்திருந்த ஜாடி தன் மீது தவறிவிழ தான் அணிந்திருந்த வஸ்திரங்களிலெல்லாம் சிதறி யதாகவும், மேல்போட்டிருந்த உடுப்புமட்டும் முழுதும் நனைந்துபோ னதாகவும் அதைத்தான் எடுத்து மற்றோரிடத்தில் வைத்ததாகவும் சொன்னான். மனோகரன் வைத்ததாகச் சொன்ன இடமும் போலீ சார் உடுப்புகளைக் கண்டெடுத்த இடமும் சரியாக இருந்தது. பிறகு அரசன் எல்லோரையும் விசாரணைசெய்து, இலஞ்சம்வாங்கிக்கொ ண்டு அநியாயஞ்செய்த டாக்டருக்கு 1000 ரூ. அபராதமும் ஐந்து வருஷ கடினகாவலும், நியாயாதிபதிக்கு 4000 ரூ அபராதமும் பத்து

ஆ கடினகாவலும், தந்திரஜித்து ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவனென்றும், 'பல நாள் திருடன்' என்றும், அநேக களவுகளில் சம்மந்தப்பட்டிருக்கின்றானென்றும் தெரிய வந்ததால் அவனுக்கும், விக்கிரமசேனனுக்கும் முறை பதினைந்து ஆ கடினகாவலுமாகத் தீர்ப்பளித்து அவர்களைக் காராக்கிருகத்தில் அடைக்கும்படி உத்திரவுசெய்து விஜயார்த்தனருடைய திரவியங்களையெல்லாம் மனோகரனிடம் ஒப்புவிக்கும்படியும், கமலாகரன் அனுவசியமாய் அடைந்த கஷ்டத்திற்கு அவனிடம் தான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டியது அவசியமென்றும் சிரமபரிகாரார்த்தமாக ரூபாய் பதினாயிரத்தை பொக்கிஷத்திலிருந்து அவனுக்குக் கொடுக்கும்படியும் கட்டளையிட்டார். தன் தந்தையின் ஐச்வரியங்களையெல்லாம் மீண்டும் மனோகரன் பெற்றுக்கொண்டு மனோரஞ்சிதபுரியில் கமலாகரனுடன் சிலநாள் இருந்தான்.

விஜயார்த்தனர் தந்தத்தாற்செய்த பொட்டியொன்றை வெகு ஜாக்கிரதையுடன் காப்பாற்றிவந்தார். அதைப்பார்க்கவேண்டுமென்று மனோகரன் பலமுறைகேட்டும் அவர் அப்பெட்டியை அவனுக்குக் காட்டாமலே சாக்குப்போக்குகள் சொல்லிவந்தார். அப்பெட்டியை இப்பொழுது பார்க்கவேண்டுமென்ற அபேக்ஷை மனோகரனுக்கு உண்டாயிற்று. உடனே கமலாகரனும் மனோகரனுமாக அப்பெட்டியைக் கொண்டுவந்து திறந்துபார்த்தனர். அதில் 225 மணியார்டர் கூபன்கள் இருந்தது. எந்த கூபனை எடுத்துப்பார்த்தபோதிலும் அதில் ரூ 200 அனுப்பியிருக்கிறதாகவே எழுதியிருந்தது. இன்னும் அதில் இரண்டுகடிதங்களும் இருக்கக்கண்டனர். முதல் கடிதத்தைப் பிரித்து வாசித்ததில்,

விய ஆ சித்திரை மீ 20 உயாகிய இன்றையதினம் எனக்கு ஈச்வரசன்னிதானத்தில் ஆண்குழந்தையொன்று ஜகதீசனது காருண்யவிசேஷத்தால் கிடைத்தது. எனக்கு வேறு குழந்தைகளில்லாததால் அக்குழந்தைக்கு மனோகரன் என்று பெயரிட்டு எனது புத்திரனைப்போல் பாவித்துப் பிரியமுடன் வளர்த்துவருகின்றேன்.

விஜயார்த்தனன்.

என்று வரைந்திருக்கக்கண்டு மனோகரன் பிரமித்தான். தேவாலயத்திற் குழந்தைகிடைத்த ரகஸ்யங்களும் மனோகரனை எடுத்து

வளர்க்கின்றூர்களென்ற விஷயமும் நமக்கும் நாம் சொல்லிய பிறகு நமது வாசகர்களுக்கும் தெரியவருமேயல்லாமல் ஏனையோர்களுக்கு இதவிஷயங்கள் தெரிவதற்குக் காரணமொன்றும் ஏற்படவில்லை. மனோகரன், விஜயார்த்தனர் காந்தாமணி இவர்களைத் தன் உண்மைத் தாய் தந்தையர்களென்றே நம்பியிருந்தான். கமலாகரனும் மற்றவர்களும் அப்படியே எண்ணியிருந்தார்கள். ஆனதால் முதல் கடிதத்தை வாசித்ததும் மனோகரன் பிரமித்துப்போனான். கமலாகரனும் இதென்ன ஆச்சரியமென்று திகைத்து மற்றொரு கடிதத்தை வாசித்துப்பார்க்கவேண்டுமென்றான். அப்படியே அக் கடிதத்தைப் பார்த்ததில் அது விஜயார்த்தனனுக்கு ஈச்வரசன்னிதானத்திற் கிடைத்த லிகிதமாயிருந்தது. அதில் குழந்தைக்கு மனோகரன் என்று பெயரிடும்படியும், அக்குழந்தையை வளர்ப்பதற்காக மாதம் தவருது ரூ 200 கிடைத்துவருமெனவும், ஸுவர்ணமாலை குழந்தையின் கழுத்தில் எப்போதும் இருக்கவேண்டுமெனவும் எழுதியிருந்தன. அப்பெட்டியிலிருந்த மணியாடர் கூபன்களைப் பார்த்ததில் பிரதிமாதமும் தொடர்ச்சியாகவே ரூ 200 மணியாடர்மூலம் கிடைத்திருப்பதாகத் தெரியவந்தது. அனுப்பியவர்கள் இன்னுரொன்பதைத் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. இத்தருணத்தில் தபால்காரன் கூப்பிட்டான். அன்று முதல்தேதியானபடியால் வழக்கம்போல் விஜயார்த்தனன் பேருக்கு ரூ. 200 மணியார்டர் வந்திருந்தது. உடனே மனோகரனும் கமலாகரனும் வெளியே வந்து அந்த மணியார்டர் எங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கிறதென்று பார்த்ததில் வஜ்ரபுரியென்ற போஸ்டாபீஸ் முத்திரை போடப்பட்டிருந்தது. பணம் அனுப்பியவரின் பெயரைக் கவனித்ததில் பெயர் தெரியவில்லை. "கா. சு. அ." வஜ்ரபுரியென்றுமட்டும் எழுதியிருந்தது. கையெழுத்தைக் கவனித்ததில் எழுத்துகளின் உருவம் தெரியாதபடி கிறக்கியிருந்தது. பிறகு மனோகரன் கையொப்பமிட்டு ரூபாய் 200 ஐயும் பெற்றுக்கொண்டு தனது காரியங்களையெல்லாம் கமலாகரனைப் பார்த்துக்கொள்ளும்படிச்சொல்லி சகலமும் அவன் வசத்தில் ஒப்புவித்துவிட்டுத் தான் இனி ஒருமாதத்தில் வருவதாயும் தனக்குக் கடிதம் எழுதவேண்டுமானால் வஜ்ரபுரிக்கு அனுப்பும்படியும் நிருபம் ஒன்றெழுதி அதை ஸுலலிதாவிடம் கொடுக்கும்படியும், நடந்த விஷயங்களையும் விக்கிரமசேனனுதியோர் தண்டிக்கப்பெற்ற

சங்கதிகளையும் ஸவிஸ்தாரமாக வரைந்து அக்கடிதத்தைக் குணசீல மன்னரிடம் தரும்படியும் புகன்று மனோரஞ்சிதபுரிக்குத் தன்னுடன்வந்த சேவகர்களிடம் கொடுத்து வீரகேசரிமன்னர்செய்த மரியாதைகளுடன் அவர்களை சுந்தரபுரிக்கு அனுப்பிவிட்டு, தன்னைப் பெற்ற தாய்தந்தையர்களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று தீர்மானித்தவனாய், மணியார்டர் வஜ்ராபுரியிலிருந்து வந்திருந்தபடியால் தன்னைப் பெற்றோர்கள் அவ்விடத்திற்றான் இருக்கக்கூடுமென்று எண்ணி வஜ்ரபுரியை நோக்கிப் பிரயாணமானான்.

பரிச்சேதம்.—4.

ரூபாவதி! நீ சொல்வது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைத் தருகின்றது. குழந்தைகாணமற்போய் எத்தனையோ வருஷங்களாய் விட்டன. நமது அரசருடைய மித்திரர் சந்தானகிருஷ்ணருடைய வீட்டிற்கு வந்திருக்கும் பாலியனைப் பார்த்தால் என்குமாரனைப்போலவே இருக்கிறதென்று கூறுகின்றாய். நீ பொய்புகலமாட்டாயென்பதை யானறிவேனாயினும் உன்னால், இப்பொழுது சொல்லப்படும் வார்த்தைகள் நம்பக்கூடியதாயில்லையே! 19 வருஷங்கட்குமுன்பு காணமற்போன குழந்தை இன்னும் உயிரோடு இருக்கிறதென்றால் இதை யாரேனும் உண்மையென்று நம்புவார்களா? நீ என்ன சொல்லியபோதிலும் எனக்கு சந்தேகமாகத்தானிருக்கிறது. நீ சொல்லும் பாலியனின் பெயர் மனோகரன் என்றுகூறுவதால் ஒருசமயம் எனது குழந்தையாகத்தான் இருக்கலாகாதா என்ற ஆசையும் ஒருபக்கம் அடித்துக்கொள்ளுகிறது. எதற்கும் இன்றிரவு அந்த சுகுமாரனை நாம் பார்த்துவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுவாவென்று வஜ்ரபுரியரசனாகிய பிரதாபசந்திரனுடைய மனைவி பரிமளாங்கி கூறலானாள். இதைக்கேட்ட ரூபாவதி அதிக சந்தோஷத்துடன் வெளியிற்சென்றாள்.

இரவு பன்னிரண்டு மணியாயிற்று. எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். எங்குபார்ப்பினும் நிசப்தமாயிருக்கிறது. இத்தருணத்தில் ஒரு வண்டி சந்தானகிருஷ்ணருடைய வீட்டிற்கு அருகில் நின்றது. இருபெண்மணிகள் வண்டியிலிருந்து இறங்கினர். ரூபாவதி கேட்டுக்கொண்டபடியே சந்தானகிருஷ்ணரும் வீட்டின்

வெளிக்கதவைத் திறந்துவைத்திருந்தனராகலான் இவ்விருவரும் யாதொருதடையுமின்றி உள்ளே நுழைந்தனர். அங்கு அதிரூபனான ஒரு சுந்தரபுருடன் நித்திரைசெய்துகொண்டிருந்தான். அவனுக்கு வயது சுமார் 20 இருக்கலாம். உள்ளேவந்த பெண்களிருவரில் மூத்தவள் அந்தப்பால்யனை மிகுந்த ஆவலுடன் உற்றுநோக்கினாள். தன்னுடைய முகச்சாயல் அப்பால்யனிடம் இருக்கக்கண்டு வியந்தாள். பிறகு அந்த சுகுமாரனின் வயிற்றைப்பார்த்ததில் அங்கு ஒருவித மச்சமிருக்கக்கண்டு அத்யானந்தபரிதையானாள். பின் அவன் கழுத்தில் தரித்திருந்த ஸ்வர்ணமாலையை யெடுத்துப் பரீக்ஷித்தாள். அதில் பரிமளாங்கி என்று எழுதியிருந்தது. உடனே ஒருகத்தியால் அந்த ஸுவர்ணமாலையிலிருந்த இரத்தினபதக்கத்தின் பின்புரத்திலுள்ள தங்கத்தட்டை எடுத்துவிட்டுப்பார்த்தாள். அதில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் கடிதமொன்று அடக்கஞ்செய்யப்பட்டிருந்தது. அதைக்கண்டதும் நாரீமணி கீழேவிழுந்து மூர்ச்சையானாள். அருகிலிருந்த அங்கனாமணி பலவாறு தேற்றப் பின் மூர்ச்சைதெளிந்து நித்திரைசெய்துகொண்டிருந்த பால்யனைப் பலதடவையும் முத்தமிட்டு அவன் தன் குமாரனென்பதை யறிந்துகொண்டு ரூபாவதியை மிகவும் கொண்டாடி ஜகதீசனைப்பலவாறு ஸ்தோத்தரித்தாள். பிறகு முன்போலவே இரத்னபதக்கத்தில், தானெடுத்த கடிதத்தைவைத்து தங்கத்தட்டால் மூடி எடுத்தது தெரியாதபடிசெய்து ஸுவர்னமாலையை அச்சிறுவனின் கழுத்தில் போட்டுக்கடிதமொன்றை எழுதி அதை அவன் படுக்கையில் வைத்துவிட்டு மறுபடியும் முத்தமிட்டுக்கொண்டு இருவரும் வெளியில் வந்து வண்டி எறிச்சென்றனர்.

உஷத்காலமாயிற்று. திவாகரனும் உதயமானான். நமது மனோகரனும் நித்திரைநீங்கி உட்கார்ந்தான். ரூபாவதியின் தந்திரத்தால் நேற்றிரவு மனோகரன் அருந்திய பாலில் மயக்கந்தரும் மருந்துகலக்கப்பட்டிருந்தது காரணமாக நன்றாய்த் தூங்கிவிட்டனனாகலான் இரவு நடந்த விசேஷங்களொன்றும் மனோகரனுக்குத் தெரியாது. துயில் நீங்கிய மனோகரன் எழுந்திருக்கையில் கடிதமொன்று கீழே விழ உடனே அதைப் பிரித்துப்பார்க்கையில் அதில் அடியிற்கண்ட விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன:—

மனோகரா!

நீ இங்குவந்து சேர்ந்த விஷயத்தைப்பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கின்றேன். உன்னைப்பெற்ற தாய்தந்தையர்கள் இந்த வஜ்ரபுரியில் மிகுந்த பிரக்யாதியுடன் வாழ்ந்துவருகின்றனர். இன்னும் இரண்டொருவாரத்தில் அவர்கள் உன்னைக்காணவருவர். நீ இன்னகரைவிட்டு எங்கும் செல்லவேண்டாம்.

இப்படிக்கு

ப. கி.

இதை வாசித்ததும் மனோகரன் மிகுந்த ஆச்சரியமடைந்து நான் என் பெற்றோரைக் கண்டுபிடிக்கவெண்ணி இங்கு வந்திருக்கும் விஷயம் கமலாகரனையன்றி வேறெவருமறியார். அப்படியிருக்க இக்கடிதம் நான் கோரிவந்த விஷயம் நிறைவேறுமென்று சொல்லத்தக்கவண்ணம் வெகு விவரமாய் எழுதப்பட்டிருக்கிறதே! இதென்ன விந்தையென்று பிரமித்தான். இரவு யாராவது வந்தார்களாவென்று வீட்டுக்காரரை விசாரித்ததில் எவரும் வரவில்லையென்பதாகவே விடைகள் கிடைத்தன. கடிதம் வந்தவிஷயம் மிகவும் அற்புதமாகவே யிருக்கிறதென்று யோசித்துக்கொண்டு அங்கிருந்த தலைமைப் போஸ்டாபீஸிற்குச் சென்று தன் பெயருக்கு சுந்தரபுரியிலிருந்து கடிதங்கள் ஏதாவது வந்திருக்கிறதாவென்று கேட்க, அதற்கு அவர்கள் சென்ற இரண்டு வாரங்களாகத் தங்கள்பேருக்கு வந்தகடிதங்களை தாங்கள் வாங்கிவரச்சொன்னீர்களென்பதாகக்கூறி விக்கிரமசேனனென்போன் இங்கு வந்து அப்போதைக்கப்போது பெற்றுக்கொண்டு போனான் என்று தெரிவிக்க, இதைக்கேட்ட மனோகரன் திடுக்கிட்டுக் கடிதங்கள் வாங்கிவரும்படியாக நான் எவருக்கும் சொல்லாமலிருக்க, என்னையறியாமல் என் கடிதங்களை மற்றொருவன் பெற்றுக்கொண்டுபோயிருப்பது மிகவும் விந்தைக்குரியதே. இனி அப்படிச் சொல்லிக்கொண்டு யாராவது வந்து கேட்கும்பட்சத்தில் அவரை உடனே போலீஸ் ஸ்டேஷனில் ஒப்புவியுங்கள் என்று கூறிவிட்டு அன்று காலை வந்த கடிதத்தைமட்டும் பெற்றுக்கொண்டு வீடுசேர்ந்து நிருபத்தை உடைத்துப்பார்க்க அதில் பின்வரும் விஷயங்கள் காணப்பட்டன.

அன்பீர்!

தாழ்ந்த நமஸ்காரம். உபயக்ஷேமம். தங்கட்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினேன். அவைகளில் ஒன்றுக்காவது பதில் விடுத்

தீர்களில்லை. இனி தங்களின் பிரிவைப்பொறுக்க என்னால் முடியாது. தரிசித்து பல மாதங்களாகின்றன. வஜ்ரபுரிக்கு வருவதாகவே நிச்சயித்துவிட்டேன். அதைப்பற்றி சென்ற வாரத்தில் அனுப்பிய எனது விஸ்தாரக் கடிதமும் பெற்றிருக்கலாம். நாளை பிற்பகலில் அங்கு வந்து சேருவேன். வழியில் தாங்கள் சந்திப்பீர்களேல் சந்தோஷமே.

சுந்தரபுரி. தங்கள் பிரியை,

ஸுலலிதாகுமாரி.

கடிதத்தை மனோகரன் வாசித்ததும், இதுபோன்ற மற்றக்கடிதங்களெல்லாம் விக்கிரமசேனனுக்குக் கிடைத்திருப்பதால் ஸுலலிதாவுக்கு அவனால் அபாயம் ஏதாவது விளையுமோ என்று மனக்கலக்கங்கொண்டான். மனோரஞ்சிதபுரியில் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த விக்கிரமசேனன் இங்கு எப்படிவந்தானென்பது தெரியவில்லை. சென்ற வாரத்தில் அனுப்பியதாகச் சொல்லப்படும் விஸ்தாரக்கடிதம் நமக்குக் கிடைக்கவில்லை. விக்கிரமசேனன் அக்கடிதத்தை உடைத்து வாசித்திருப்பான். அதிலும் வஜ்ரபுரிக்கு ஸுலலிதா வருவதைப்பற்றிய சங்கதிகள் எழுதப்பட்டிருக்குமென்று நம்புவதற்கு இன்று கிடைத்த கடிதமே போதுமானது. விக்கிரமசேனன் ஸுலலிதா வரும் விஷயமறிந்து அவளுக்கு ஏதாவது கெடுதி செய்ய நினைத்து அங்கு சென்றிருக்கக்கூடும். ஆனதால் நாம் உடனே பிரயாணத்திற்குத் துரிதப்படவேண்டுமென்று தீர்மானித்து வீட்டிலுள்ள சாமான்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படியாக சந்தானகிருஷ்ணனிடம் சொல்லிவிட்டுத் தான் ஒரு குதிரையின்மீதேறிக்கொண்டு வெகு அவசரமாய்ச் சென்றான்.

பரிச்சேதம்—5.

இதுதான் நமக்கு நல்ல தருணம் எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த மரத்தின்மீதேறி அருகிலிருக்கும் குளத்தில் குதித்துத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போகலாம் என்று ஒருவன் மெதுவாகச்சொன்னான். அதைக்கேட்ட மற்றொருவன் அப்படியே செய்யலாமென்று சொல்லிபலகணியிலிருந்த இரும்புக்கம்பிகளை ஒவ்வொன்றாக அசைத்து அசைத்துப் பார்த்துக்கொண்டேவருகை

யில் அதிருஷ்டவசமாய் ஒரு கம்பி சிறிது ஆடக்கண்டு மிகவும் சந்தோஷித்து வெகு பிரயாசத்துடன் அக்கம்பியைப் பிடுங்கிவிட்டு அந்த சந்துவழியாக வெளியில் குதித்து தனது நேசனை அடைத்திருந்த அறையின் பூட்டையும், காலிற்போட்டிருந்த விலங்கின் பூட்டையும் உடைத்தெறிந்துவிட்டான். பிறகு இவ்விருவரும் அங்கிருந்த ஒரு பெரிய விருக்ஷத்தின்மீதேறி அருகிலிருந்த குளத்தில் குதித்து நீந்திக்கொண்டு அக்கரையேறி அந்த இராத்திரியே மனோரஞ்சிதபுரியைவிட்டு ஓட்டமெடுத்தனர். இவர்கள் யார்? நமது நண்பர்களாகிய விக்கிரமசேனனும் தந்திரஜித்துமே. இவ்விருவரும் அந்த இராத்திரியே மனோரஞ்சிதபுரியினின்றும் பிரயாணமாகி கடைசியில் வஜ்ரபுரி வந்துசேர்ந்தனர். மறுநாள் புராலங்காரத்தைப் பார்த்துக்கொண்டு கடைசியில் தபாலாபீசுக்கருகில் வந்தனர். அங்கு ஒரு மேஜைமேலிருந்த கடிதத்தில் "மனோகரர் வஜ்ரபுரி" என்று இருக்கக்கண்டு சந்தேகித்து உடனே தபாலாபீஸாரிடம் மனோகரர் தமக்கு வந்த கடிதங்களை வாங்கிக்கொண்டு வரும்படியாகத் தன்னை யனுப்பியிருப்பதாகவும், தன் பெயர் விக்கிரமசேனனென்றும் தெரிவித்து அவர்களை நம்பும்படி செய்து அக்கடிதத்தைப்பெற்றுக்கொண்டு மற்றோரிடத்திற்கு வந்து அதைப் பிரித்துப்பார்க்க அது மனோகரனுக்கு லலிதா எழுதிய கடிதமாக இருக்கக்கண்டனன். அன்றுமுதல் விக்கிரமசேனன் மனோகரனுக்கு வரும் கடிதங்களையெல்லாம் முறையே பெற்றுக்கொண்டுபோய் அவைகளை உடைத்துப் பார்த்துப்பார்த்து அதிலுள்ள சங்கதிகளை யறிவதையே தன் தொழிலாகக்கொண்டிருந்தனன். இங்ஙனமாக இவர்களுக்கு 8 கடிதங்கள்வரையும் கிடைத்தது. அவைகளில் கடைசிக்கடிதத்தில் லலிதா தனியே வஜ்ரபுரிக்கு வருவதாக எழுதியிருந்ததை வாசித்து அவளைப் பிடித்துக்கொண்டுபோய் தான் விவாகம் செய்துகொள்வதாகச்சொல்லி அதற்காக தனது தோழர்களாகிய திருடர்களுடன் வஜ்ரபுரிமார்க்கத்தில் நாளைக் காலைவருவதாயும், தனக்கு முன்பாக சர்வ ஜாக்கிரதையுடன் அந்த இடத்தில் காத்துக்கொண்டிருக்கும்படியும் தந்திரஜித்து கூற விக்கிரமசேனனும் அதற்குச் சம்மதிக்கப் பிறகு தந்திரஜித்து தன் சிநேகிதர்களிருக்கும் இடத்தைநோக்கிச்சென்றான். மறுநாட்காலையில் விக்கிரமசேனன் குறிப்பிட்ட இடத்தில் நின்றுகொண்டு லலிதா எப்

போது வருவாளோ என்று எதிர்பார்த்திருந்தான். நெடுநேரம் காத்திருந்தும் அவள் வாராததால் தந்திரஜித்தையாவது பார்த்து விட்டு வரலாமென்றெண்ணி மற்றொருவழியை நோக்கிச்சென்றான். அகஸ்மீகமாய் அவ்வழியில் குதிரையொன்று வரக்கண்டு லலிதா தான் வருகின்றாளோவென்றையுற்று குதிரையின்மீது வருவது யார் என்று கவனித்துப்பார்த்து உடனே திடுக்கிட்டுப்பயந்து தனக்குக் கெடுதிவிளையுமென்றெண்ணி அங்கிருந்த ஒரு பெரிய குளத்தில் திடீரென்று குதித்துவிட்டான். குதிரையின்மீதுவந்த மனோகரன் இவனைப் பார்த்ததும் பிரமித்து அதிக கோபங்கொண்டு அவனைப் பிடித்துத் தக்கபடி தண்டிக்கவேண்டுமென்று அருகில்வர, உடனே விக்கிரமசேனனும் குளத்தில் குதித்துவிட சனி தொலைந்ததென்று நினைத்துத் தன் அசுவத்தை வெகுவேகமாய் விட்டுக்கொண்டுசென் றான். அத்தருணத்தில் ஜன இரைச்சலொன்று கேட்டது. என்ன வென்றுபார்க்கையில் தந்திரஜித்து தனது திருட்டுத்தோழர்கள் ஸஹிதம் வந்துகொண்டிருந்தான். அவனுடன் வருகிறவர்கள் சுமார் நூறுபேர் இருக்கலாம். திருடர்கள் கூட்டமும் நெருங்கிவிட் டது. அதேதருணத்தில் லலிதாவும் வந்துவிட்டாள். பார்த்தான் மனோகரன். இவன் யோசிப்பதற்குள் திருடர்கள் கூட்டம் இவனை எதிர்த்துக்கொண்டது. மனோகரன் தன் குதிரையை அவர்கள் மேல்விட்டு த்வம்ஸம் செய்தான். அநேகர் குதிரையால் உதைப் பட்டும் நசுங்கியும் பற்கள் உதிர்ந்தும்போயினர். நூறு பேரை எதி ர்த்து ஒருவன் எவ்வளவு நேரந்தான் யுத்தம் செய்வான்? மனோகர னால் சாத்தியப்படாதுபோல் தோன்றிற்று. இவைகளைக்கண்ட லலிதா தான் கொண்வெந்திருந்த தங்கக்குழாயை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு பலமாக ஊதினாள். சில நிமிஷத்துக்குள் எங்கி ருந்தோ நூற்றுக்கணக்கான வீரர்கள் புற்றிலிருந்து ஈசல் புறப்பட் டதுபோல் ஒடிவந்து தந்திரஜித்தையும் மற்றவர்களையும் கைதி செய்து லலிதாவின்கட்டளைப்படி அவர்களை வஜ்ரபுரிக்குக்கொண்டு போயினர். லலிதா தான் எழுதிய கடிதங்கட்குப் பதில்வாராததால் அவை அன்னியரிடமே கிடைத்துவிட்டதென்றெண்ணி தனது தந் தையிடம் இது விஷயங்களைத் தெரிவித்து 200 வீரர்கள் சகிதம் புறப்பட்டதாகவும், தான் அனுப்பிய கடிதம் மற்றவர்களிடம் கிடை த்திருப்பின் தன்னுடன் இருநூறு வீரர்கள் வருகிறார்களென்கிற

செய்தியை அவர்கள் அறியாதிருக்கும்படி கடிதத்தில் தனியே வருவதாக எழுதியிருந்ததாயும் தெரிவித்துப் பின் நடந்த விஷயங்களையெல்லாம் அறிந்து சந்தோஷித்தாள். மனோகரனும் லலிதாவும் அன்று மாலையில் வஜ்ரபுரி வந்துசேர்ந்தனர்.

பரிச்சேதம்—6.

கூட்டம்கூட்டமாய் ஜனங்கள் போய்க்கொண்டிருந்தனர். பட்டணமெல்லாம் வெகு அலங்காரமாயிருந்தது. ரதகஜதுரக பரிவாரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. வஜ்ரபுரியின் பிரதம அமைச்சரும் இதோ வந்துவிட்டார். எல்லோரும் சந்தானகிருஷ்ணருடைய வீட்டின் அருகில் நெருங்கினர். அமைச்சதிலகர் இல்லிற்குள் பிரவேசித்து வஜ்ரபுரியின்மன்னர் மனோகரனையும், ஸுலலிதாவையும் அழைத்துவரும்படி சொல்லியதாகத் தெரிவித்து அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு ரதகஜதுரக பரிவாரங்கள் சூழ, மங்களவாத்தியங்கள் முழங்க சபாமண்டபத்திற்குச் சென்றனர். பிரதாபசந்திரரும் பரிமளாங்கியும் மனோகரனையும் ஸுலாலிதாவையும் எதிர்கொண்டழைத்துவந்து சிரேஷ்டாஸனத்தில் வீற்றிருக்கச்செய்தனர். மந்திரியும் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். பிரதாபர் மனோகரனை வெகு ஆவலுடன் உற்று நோக்கி மிகுந்த ஆச்சரியமடைந்தார். மனோகரனுடைய முகசாயல் பரிமளாங்கியினுடையதாகவும் மற்றசரீர அடையாளங்கள் தன்னைப்போலும் இருக்கக்கண்டு பிரமித்தார். அரசர் மனதில் ஒரு யோசனையுண்டாயிற்று. தக்ஷணமே தமக்குப் பலவருஷங்கட்கு முன்பு உபநாயகியாயிருந்த 'காமசுந்தரி'யை அழைத்துவரும்படி கட்டளையிட்டார். மன்னருடைய ஆக்ஞையின்படி அவளும் சபைக்கு வர உடனே பிரதாபசந்திரர் வாளையுருவிக்கொண்டு நீ எனது குமாரன் விஷயத்தில் நடத்திய அக்கிரமங்களை சொல்லிவிடுகிறாயா, அல்லது இவ்வாளால் உன்னை வெட்டட்டுமா என்று அதிக கோபத்துடன் கேட்க காமசுந்தரி நடுநடுங்கி உண்மையைத் தெரிவித்துவிடுவதாகக் கூறித்தான் செய்தகாரியங்களைச் சொல்லலானாள்.

அரசே! இந்த மனோகரன் தங்களுடைய குமாரன்தான். இதில் சிறிதும் தடையில்லை. இருபதுவருஷங்கட்கு முன்பு நானும் பரிமளாங்கியும் கற்பவதிகளாய் இருந்தோம். எங்கள் இருவருக்கும்

ஏககாலத்தில் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தன. என் குழந்தையே பிற்காலத்தில் வஜ்ரபுரிக்கு அரசனாகவேண்டுமென்றெண்ணி பரிமளாங்கியின் குழந்தையை அது பிறந்த பத்தாவதுநாளிரவு அரண்மனையில் அனைவரும் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது திருடிக்கொண்டு அதற்குப் பதிலாக எனது குழந்தையை அங்கு வைத்துவிட்டுவந்துவிட்டேன். ஆனால் நான் எடுத்துக்கொண்டு வந்த குழந்தையைக் கொன்றுவிடவில்லை. அதை எவரிடமாவது கொடுத்து வளர்த்துவரும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், அக்குழந்தையை வளர்க்கச் சம்மதிப்பவர்கட்கு செலவுக்காக பிரதி மாதமும் இருநூறு ரூபாய் தருகிறதென்றும் தீர்மானித்துக்கொண்டு அதே எண்ணத்துடன் மனோரஞ்சிதபுரிக்குச் சென்றேன். அங்கிருந்த ஓர் ஆலயத்தில ஸ்திரீபுருஷர்களிருவரும் ஏகாந்தமாய் கடவுளைப் பலவாறு ஸ்தோத்தரித்து தங்கட்குக் குழந்தையொன்று பிறக்கும்படியாக அனுக்கிரகிக்கவேண்டுமென்று வெகு உருக்கமாகப் பிரார்த்தித்தனர். இதுகளையெல்லாம் கவனமாய்க் கேட்டிருந்த யான் இவர்களிடந்தான் இக்குழந்தையை ஒப்புவிக்கவேண்டுமென்றெண்ணி, தக்ஷணமே கடிதமொன்றெழுதி அதையும் அந்தக் குழந்தையையும் ஈச்வரஸன்னிதானத்திலிருந்து எடுத்த ஒருதட்டில் வைத்து அதின்கீழ் நான் கொண்டுபோன இருநூறு ரூபாயையும் குழந்தையின் கழுத்திலிருந்த ஸுவர்ணமாலையையும் வைத்துவிட்டு மற்றோரிடத்தில் ஒளிந்துகொண்டிருந்தேன். நான் சென்றதும் குழந்தை வீறிட்டழ ஆரம்பித்தது. உடனே அவ்விடத்திலிருந்த விஜயார்த்தனரும் காந்தாமணியும் ஓடிவந்து குழந்தையையும் நான் எழுதிவைத்திருந்த கடிதத்தையும் ஸுவர்ணமாலையையும் எடுத்துக் கொண்டு பகவானுடைய அனுக்கிரகமென்று மகிழ்ந்து குழந்தையின் கழுத்தில் ஸுவர்ணமாலையைப்போட்டு ரூபாய்களை எடுத்துக்கொண்டு குழந்தை ஸஹிதம் இல்லத்திற்குச் சென்றனர். அன்றுமுதல் இன்றுவரையிலும் பிரதிமாதமும் 200 ரூபாய்வீதம் மனோரஞ்சிதபுரிக்கு அனுப்பிக்கொண்டுவருகிறேன். மணியார்டரில் காமசுந்தரி அம்மாள் என்பதற்குப் பதிலாக "கா. சு. அ." கையொப்பமிடுவது வழக்கம். நான் இவ்வளவு பிரயாசையெடுத்துக்கொண்டும் பரிமளாங்கி மறுநாட்காலையில் குழந்தையைப்பார்த்ததும் தன்னுடையதல்லவென்றும் எவரோ மோசம் செய்திருக்கின்றனரென்றும் தங்கட்

குத் தெரிவித்ததாக நான் கேள்விப்பட்டேன். குழந்தைகள் இரண்டும் தங்களுக்கே பிறந்தபடியால் இரண்டுக்கும் வித்தியாசமொன்றும் காணப்படவில்லை. ஆனல் பரிமளாங்கிக்குப் பிறந்த குழந்தையின் முகச்சாயல் அவளைப்போலவும் மற்ற தேக அடையாளங்கள் தங்களை யனுசரித்தும் இருந்தது. எனது குழந்தையின் முகத்தில் தங்களுடைய சாயல் காணப்பட்டது. தங்களுக்கும் அதற்கும் எள்ளளவு பேதமாவது தோற்றவில்லை. வித்தியாசம்கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டந்தான். அப்படியிருந்தும் பரிமளா தன் குழந்தையல்லவென்பதை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்துவிட்டாள். ரூபாவதியும் அவளுடன் சேர்ந்துகொண்டாள். தங்களுடைய முகச்சாயல் அக்குழந்தையின் மீதிருந்தபடியால் தாங்களும் மற்றவர்களும் குழந்தைகாணமற்போயிற்றென்பதை நம்பவில்லை. "தானென்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைத்தது" என்றபடி பரிமளாங்கியிடம் விட்டுவந்த குழந்தை எட்டாவது மாதத்தில் இறந்துபோய்விட்டது. இதற்குப்பிறகு மனோரஞ்சிதபுரியிலிருந்த பரிமளாங்கியின் குழந்தை மீது எனது கவனத்தை முற்றிலும் செலுத்திவந்தேன். இராஜகுலதிலகா! 'பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்றபடி இவைகளையெல்லாம் நான் தெரியாமற் செய்துவிட்டேனென்றாலும் தங்கள் குழந்தைக்கு நான் ஒரு தீங்கும் புரிந்தவளல்லவாகலான் தாங்கள் என்மீது கோபங்கொள்ளாமல் என் குற்றத்தைப்பொறுத்து மன்னிக்கவேண்டுமென்றாள். உடனே சபையோர் கரகோஷம் செய்தனர்.

அரசனருகில் வீற்றிருந்த மனோகரன் அந்த சபையில் நின்றுகொண்டிருந்த ஒரு பரதேசியைக் கண்டதும் திகைத்து உடனே ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டழுதான். அப்பரதேசியும் மனோகரனைக்கண்டு பிரலாபிக்கலானான். பிரதாபசந்திரர் இதென்ன விந்தையென்று பிரமித்து ஸிம்ஹாஸனத்திலிருந்து இறங்கிவந்து யாரென்று அப்பரதேசியை உற்றுநோக்கியதில் இவரும் ஒன்றும் தோன்றாமல் திகைத்து "ஹா சகோதரா!" என்று ஆனந்தக் கண்ணீர் சொறிந்தார். இந்தப் பரதேசி வேறுயாருமல்ல. நமது விஜயார்த்தனர்தான். மனோரஞ்சிதபுரியில் காந்தாமணி இறந்துபோன இரவு வீட்டில் சயனித்திருந்த விஜயார்த்தனர் தமது நாயகியின் பிரிவைப் பொறுத்துக்கொண்டு வீட்டிலிருக்க மனமொப்பாமல் அன்றிரவே

மனோரஞ்சிதபுரியைவிட்டுப் பிரயாணமாகி அநேக திவ்யக்ஷேத்திரங்கட்கும் சென்று தேசசஞ்சாரியாய்த் திரிந்து முடிவில் வஜ்ரபுரி வந்து சேர்ந்தார். இவ்வூருக்கு இவர் வரவும் முன்நடந்த விஷயங்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. பிறகு பலவாறு யோசித்துக்கொண்டு சபாமண்டபத்தின் சமீபம் வருகையில் அங்கு ஜனத்திரளைக்கண்டு என்னவென்று அறிய அவ்விடம்போய்ப் பார்க்கையில் காமசுந்தரி சொல்லிய விஷயங்களெல்லாம் தன்னைப்பற்றியதாகவும், மனோகரனைப்பற்றியதாகவும் இருக்கக்கண்டு பிரமிக்கலானார்.

விஜயார்த்தனரும் பிரதாபசந்திரரும் ஒரு தாய்வயிற்றிற்பிறந்த சகோதரர்கள். தந்திரஜித்தின தோழர்களிற் சிலரை பிரதாபசந்திரர் தண்டிக்க, அதற்காகத் தந்திரஜித்து கோபங்கொண்டு விஜயார்த்தனரை ஆசைவார்த்தைகாட்டி அழைத்துக்கொண்டுபோய் தன்னுடைய அறையில் பூட்டிவைத்தான். அப்பொழுது விஜயார்த்தனருக்கு எழுவயது. ஒருநாள் தந்திரஜித்து தன் சினேகிதர்களையெல்லாம் அழைத்துவந்து ஒரு பெரிய விருந்துசெய்தான். அந்த சமயத்தில் விஜயார்த்தனர் தந்திரஜித்து வைத்திருந்த மயக்கந்தரும் மருந்து அவனுக்குத்தெரியாமல் கொஞ்சம் எடுத்து சமையற்பாகங்களில் கலந்துவைத்துவிட்டு ஒன்றும் அறியாதவர்போல் இருந்தார். அம்மருந்தை வழிப்போக்கர்களுக்குக் கொடுத்து மயக்கம் வரும்படி செய்து அவர்களிடமுள்ள பொருள்களையெல்லாம் அபகரித்துக் கொள்ளுவது தந்திரஜித்தின் வழக்கம். அந்த மயக்கம் அரைமணி வரையிலும் நீடித்திருக்கும். மனிதர்களுக்கு ஸ்மரணையே தெரியவராது. இப்பேர்ப்பட்ட மருந்து கலந்துவைக்கப்பட்டிருந்த போஜனவகைகளையெல்லாம் தந்திரஜித்தும் அவனுடைய தோழர்களும் அபரிமிதமாய்ப் புசித்து விருந்துண்டு மகிழலாயினர். எனினும் சற்றுநேரத்திற்கெல்லாம் அவர்கள் அனைவரும் ஸ்மரணைதப்பிப்போயினர். விஜயார்த்தனர் தக்ஷணமே தன்னைப்போல் அங்கு சிறைபட்டிருந்தவர்களையும் விடுவித்து நடந்த சங்கதிகளைச்சொல்ல, அதைக் கேட்ட அவர்கள் அவருடைய ஸாகஸத்திற்கு மெச்சி விடைபெற்றுக் கொண்டு ஓடிப்போயினர். அவர்களில ஒரு சிறுமியும் இருந்தாள். விஜயார்த்தனரால் விடுதலைபெற்றவர்களில் ஒருவரான ஜானகிராம் என்பவர் விஜயார்த்தனரையும் காந்தாமணியென்னும் அச்சிறுமியையும் தன்னுடன் வரும்படியழைக்க, மறுபடியும் வஜ்ரபுரிக்குச்

செல்வதற்கு வழி தெரியாததால் வேறு விதியின்றி அவருடைய வார்த்தைக்கிணங்கி மனோரஞ்சிதபுரியைச்சேர்ந்து அங்கு காந்தாமணியுடன் கல்வியைக் கசடறக்கற்று ஜானகிராம் மனமகிழ நடந்துவந்தனர். தனக்கு வேறு குழந்தைகள் இல்லாததால் ஜானகிராம் இவரைத் தன் புத்திரனாக ஸ்வீகாரம் செய்துகொண்டு காந்தாமணியை அவருக்கு விவாகம் செய்துகொடுத்து சில வருஷங்களிருந்து பிறகு காலஞ்சென்றான். அவனுடைய ஐச்வரியங்களெல்லாம் விஜயார்த்தனருக்கும் காந்தாமணிக்கும் கிடைத்தது. இச்சங்கதிகளையெல்லாம் தனது தமயனாராகிய பிரதாபசந்திரருக்கு எடுத்துச்சொன்னார். இதைக்கேட்ட அனைவரும் அத்யானந்தபரிதர்களாயினர்.

பிறகு பரிமளாங்கி மனோகரன் கழுத்திலிருந்த ஸுவர்ணமாலையைக் கழற்றி இரத்தினபதக்கத்தில் அடக்கஞ்செய்யப்பட்டிருந்த கடிதத்தை எடுத்து சபையோருக்கு வாசித்துக்காட்டினான். அதில்

விய ஞுல சித்திரைமீ கிருஷ்ணபக்ஷம் ரேவதி நட்சத்திரத்தில் பிரதாபசந்திரருக்கு "மனோகரன்" என்ற ஒரு ஆண்குழந்தை ஜனனம்.

இங்ஙனம்,
பரிமளாங்கி.

என்று எழுதியிருந்தது. இதைத் தான் இருபது வருஷங்கட்கு முன்னர் தனக்குப் பிறந்த குழந்தையின் கழுத்தில் போடப்பட்டிருந்த ஸுவர்ணமாலையின் இரத்தினபதக்கத்தில் அடக்கஞ்செய்து அதை யெவரும் அறியாத தங்கத்தகடால் மூடியிருந்ததாயும், காமசுந்தரி தன்னருகில் வைத்துவிட்டுப்போன அவளுடைய குழந்தையின் கழுத்தில் இதேவிதமான ஸுவர்ணமாலை யொன்று இருந்ததாயினும் இரத்தினபதக்கத்தில் தான் அடக்கஞ்செய்திருந்த கடிதம் காணப்படாததாலும், தன் முகச்சாயல் அக்குழந்தையினிடம் இல்லாததாலும், தான் எற்கனவே பார்த்திருந்த மச்ச அடையாளம் வயிற்றில் இல்லாததாலும் அது தன் குழந்தையல்லவென்று நிச்சயித்ததாயும், ரூபாவதியும் தன்னைப்போலவே அபிப்பிராயப்பட்டாளென்றும் பரிமளாங்கிகூறினாள். மனோகரன் தன்படுக்கையில் கடிதம் வைத்துவிட்டுச்சென்றது தனது அன்னை பரிமளாங்கிதானென்று அறிந்து சந்தோஷித்தான். தனக்கு இருநூறுரூபாய் தவறாமல் பிரதி மாதமும் கிடைத்து வந்ததென்றும், வாரம்தப்பினாலும் தப்பும், பண

ம்வருவதுமட்டும் ஒருக்காலும் தவருதென்றும் ஒவ்வொரு மாதமும் முதல்தேதியன்று கட்டாயம் சிறிதும் பிசகாமல் தனக்கு வந்துசேரு மென்றும், தன்னைப்பற்றிக் காமசுந்தரி கூறியவையனைத்தும் உண் மையேயென்றும் விஜயார்த்தனர் ஒப்புக்கொண்டனர். மனோகரன் தான் வீட்டில் தந்தப்பெட்டியில் கண்டெடுத்த கடிதங்கள் இரண் டையும் சபையோருக்கு வாசித்துக்காட்டினன். பிரதாபசந்திரர் காமசுந்தரியை மன்னித்து அவளைப் பலவாறு கொண்டாடி மனோக ரனைத் தன் குமாரனென்று தெரிந்துகொண்டு, சந்தானகிருஷ்ண ருடைய வீட்டில் வந்திருக்கும் சிறுவன் நமதுபுத்திரனேயென்று பரிமளாங்கியும் ரூபாவதியும் சொல்லியது உண்மையாகவே முடிந்த தைப்பற்றி மிகவும் சந்தோஷித்து, காணுமற்போன குழந்தையும் சகோதரனும் ஒருங்கே சௌக்கியமாக வந்துசேர்ந்ததற்காக ஆனந் தித்து ஆச்சரியத்தில் மூழ்கி பரமகருணாஸாகரான ஜகதீசனைப் பலவாறு ஸ்தோத்தரிக்கலானார். அன்று அங்கு வந்திருந்தவர்கள் அடைந்த உற்சாகத்திற்கு அளவில்லை. அவர்களுடைய ஆனந்தம் அதிசயிக்கத்தக்கதாக இருந்தது. பிறகு அனைவரும் அதிக சந்தோ ஷத்துடன் விடைபெற்றுக்கொண்டு சென்றனர்.

மறுநாட்காலையில் பிரதாபசந்திரமகாராஜா கொலுவீற்றிருக் கின்றார். விஜயார்த்தனர், மனோகரன், சந்தானகிருஷ்ணர் முத லிய சகலரும் வந்திருக்கின்றனர். பிரபுக்களும் புரஜனங்களும் தத்தம் ஸ்தானங்களில் உட்கார்ந்திருக்கின்றார்கள். பரிமளாங்கி, ரூபாவதி ஸுலலிதா முதலியவர்கள் சிரேஷ்டாஸனங்களில் அம ர்ந்து நடக்கும் விஷயங்களைக் கவனிக்கின்றனர். மனோகரனைக் கண்டு அச்சமுற்றுக் குளத்தில் விழுந்த விக்கிரமசேனன் இறப்ப தற்கு மனந்துணியாதவனாய் வெகு கஷ்டத்துடன் நீந்திக்கொண்டு கரையேறி வஜ்ரபுரி வந்துசேர்ந்து வழக்கம்போல் போஸ்டாபீசில் கடிதங்களைக்கேட்க அவர்கள் இவனைப்பிடித்துப் போலீசார்வசம் ஒப்புவிக்க அந்த விக்கிரமசேனன் இப்பொழுது இங்கு கைதியாக நின்றுகொண்டிருக்கின்றான். மற்றொருபாங்கர் தந்திரஜித்தும் அவ னுடைய இஷ்டர்களாகிய திருடர்களும் கைகால்களில் விலங்குக ளோடு நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அரசர் இவர்களையெல்லாம் விசாரணை செய்தனர். ஸுலலிதா அங்கு நின்றுகொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவனைக்காட்டி இவன் தன்னைக் களவாடிக்

கொண்டுவந்து காட்டில் கொல்லமுயன்ற தருணத்தில் மனோகரனால் காப்பாற்றப்பட்டதாகக் கூறினள். இக்குற்றவாளி யார்? தந்திரஜித்துதான். இந்த சமயத்தில் அச்சபையிலிருந்த மற்றொருவன் எழுந்து விக்கிரமசேனன் மனோகரனைக் கொல்லமுயன்றானென்றும் அதற்குத் தானே சாக்ஷி என்றும் கூறினன். இவன் யார் தெரியுமா? அன்றொருநாள் மனோகரனைக் காட்டில் கொல்லமுயன்றானே ஜனார்த்தனன் என்ற பெயருள்ள ஒருவன்; அவன் தான் இவன். தந்திரஜித்து விஜயார்த்தனரைப்பார்த்ததும் அநேக வருஷங்களுக்குமுன்பு சமையற்பாகங்களில் மருந்தைக் கலந்து நமக்கும் நமது நண்பர்களுக்கும் மயக்கம் வரும்படி செய்து மோசம் பண்ணிவிட்டு ஓடிப்போன பயலல்லவா இவன் என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டான். விஜயார்த்தனரும் இவனை இன்னானென்று அறிந்துகொண்டார். பிறகு பிரதாபசந்திரர் எல்லா விசாரணையையும் முடித்து தந்திரஜித்தையும் அவனைச்சேர்ந்த நூறு திருடர்களையும் விக்கிரமஸேனனையும் ஆயுள்பரியந்தம் சிறையிலிருக்கும்படி தீர்ப்பு செய்து ஜனார்த்தனனை மன்னித்து அரண்மனைச்சேவகர்களில் ஒருவனாக ஏற்படுத்தினர். இவைகளெல்லாம் நடந்து முடிந்தபிறகு மனோகரனுக்கும் ஸுலலிதாவுக்கும் விவாகமும் வஜ்ரபுரி பட்டாபிஷேகமும் செய்வதாய் நிச்சயித்து அதற்குவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து விவாகத்திற்கு வரும்படியாக சுந்தரபுரி மன்னருக்கும், மனோரஞ்சிதபுரியின் அரசருக்கும், மற்றுமுள்ள வேந்தர்களுக்கும் கடிதங்கள் அனுப்பிவைத்தனர். மனோகரன் நடந்த விஷயங்களையெல்லாம் விவரமாக எழுதி விவாகத்திற்கு வரும்படியாக, பிரதாபசந்திரர் அனுப்பிய கடிதமல்லாமல் தானும் ஒரு நிருபம் எழுதி கமலாகரனுக்கு விடுத்தான். குணசீலமகாராஜா திருமணப்பத்திரிகையைக் கண்டதும் கண்களில் ஒத்திக்கொண்டு அத்யானந்தபரிதராய் கமலாக்ஷிசகிதம் ஸ்வபரிவாரங்களுடன் வஜ்ரபுரிக்குப் பிரயாணமானார். மனோரஞ்சிதபுரி மன்னரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் நிருபத்தைப் பெற்றுக்கொண்டு கமலாகரன்சஹிதம் வஜ்ரபுரி வந்துசேர்ந்தார். மனோகரனும் கமலாகரனும் ஒருவரையொருவர் சந்தித்து நடந்த விஷயங்களையெல்லாம் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு மனமகிழலாயினர். சகலதேச இராஜாக்களும் வந்து சேர்ந்தனர். நமது நேசர்களான கமலாகரனும் மனோ

காரனும் கட்டாயம் விவாகத்திற்கு வந்துபோகவேண்டுமென்று நமக்கும் நிருபமனுப்ப நாமும் அதை அங்கீகரித்து எப்போதும் பெருந்தொல்லையைக் கொடுத்துக்கொண்டுவந்த பேஷ உத்தியோகத்தைச் சிலநாள்வரைக்கும் இராஜிநாமா செய்துவிட்டு அதிக சந்தோஷத்துடன் வஜ்ரபுரி சேர்ந்தோம். நமது நண்பர்கள் இருவரும் நம்மை எதிர்கொண்டழைத்து அநேக உபசாரங்களைச் செய்தனர். வஜ்ரபுரியின் இளவரசியாகிய மாக்ஷிமைதங்கிய ஸுலலிதாகுமாரி அவர்களின் சந்திப்பும் பெற்றோம். இங்ஙனமாக நாம் நமது நேயர்களுடன் கூடி ஆனந்தமடைந்திருந்தோம். இதற்குள் திருமணத்திற்கென்று குறிப்பிட்ட நாளும் நெருங்கியது. இத்தருணத்தில் ஒரு சன்னியாசியார் வஜ்ரபுரிக்கு வந்து அநேக இடங்களில் அற்புத பிரசங்கங்கள் செய்யலானார். கேட்டவர்கள் எல்லோரும் பிரமித்துப்போயினர். பிரதாபசந்திரரும் இந்த சன்னியாசியாரைக் கொண்டு தமது அரண்மனையில் ஈசுவரபக்தியைப்பற்றிய பிரசங்கமொன்று நடக்கும்படி ஏற்பாடு செய்தார். வெகு ஜனங்கள் வந்திருந்தனர். உபந்யாசம் அதிசிலாக்கியமாயிருந்தது. எல்லோரும் வெகு சந்தோஷத்தையடைந்தனர். அச்சபையில் மனோகரன் எழுந்து பிரசங்கத்தின் சாரத்தை எடுத்து விளக்கி சன்னியாசியாரைப் பலவாறு கொண்டாடினான். மனோகரனுடைய குரலைக்கேட்டதும் சன்னியாசியார் பிரமித்து "அப்பா குழந்தாய், மனோகரா! என்னை இன்னானென்று அறிவாயா" என்று கேட்டார். சன்னியாசியார் உபந்யாசம் செய்ய ஆரம்பித்ததுமுதற்கொண்டு இதுவரையிலும் அவரையே கவனமாகப் பார்த்துவந்த விஜயார்த்தனர் மனோகரனை நோக்கிச்சொல்லிய வார்த்தையைக்கேட்டதும் திடீரென்று எழுந்து சன்னியாசியாரைத் தழுவிக்கொண்டு, "ஹா, காந்தாமணீ! உன்னை இவ்விதகோலத்தோடு பார்க்கவா இருந்தேன்!" என்று அழுதார். மனோகரனும் காந்தாமணி உயிரோடிருக்கின்றாளென்று அறிந்து அவளைப் பிடித்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான். காந்தாமணீ என்ற பெயரைக்கேட்டதும் குணசீலமன்னனும் பரிமளாங்கியும் திகைத்து அருகில்போய்ப்பார்த்ததும், "ஹா, சகோதரீ!" என்று இருவரும் அவளைக் கட்டிக்கொண்டு பிரலாபித்தனர்.

மனோரஞ்சிதபுரியில் விஜயார்த்தனருடன் சயனித்திருந்த காந்தாமணி நடுராத்திரியில் கதவை யாரோ தட்டியதையறிந்து வெளி

யில்வந்து திறக்க அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த விக்கிரம சேனன் இவள் வாயில் துணியைவைத்சடைத்து ஒரு வண்டியில் ஏறச்செய்து காட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கு அவள் அணிந்திருந்த ஆடையாபரணங்கள் அனைத்தையும் அபகரித்துக் கொண்டு உடுத்திக்கொள்ள ஒரு கந்தைத்துணியைமட்டும் கொடுத்து இனி மனோரஞ்சிதபுரிக்குத் திரும்பிவந்தால் கொன்றுவிடுவேனென் பதாகப் பயமுறுத்தி காந்தாமணியைக் காட்டில் துறத்திவிட்டு சுட லைக்குச் சென்று ஒரு பிணத்தைத் திருடிக்கொண்டுவந்து அதின் தலையையும் கால்கரங்களையும் வெட்டிவிட்டு காந்தாமணியின் நகை களையெல்லாம் அதற்கணிந்து அவளுடைய ஆடையையும் அதற்கு உடுத்தி ஒரு குளத்தில் அந்தப் பிணத்தைக் கொண்டுவந்துபோட்டு விட்டுப்போய்விட்டான். இவ்வளவுதூரம் விக்கிரமசேனன் செய்த தறகுக் காரணம்: இந்தப்பிணத்தைக் காந்தாமணியென்று நினைத்து அவள் இறந்துபோனபோது தான்மட்டும் இந்த உலகத்தில் உயிரோ டிருக்கிறதாவென்பதாகச் சிந்தித்து விஜயார்த்தனர் தற்கொலை செய்துகொள்ளுவரென்றும், பிறகு மனோகரனை ஏமாற்றிவிட்டு அவருடைய ஐசுவரியங்களைத் தான்அபகரித்துக்கொள்ளலாமென்ற எண்ணத்தினுல்தான். இங்ஙனமாக காந்தாமணியைத் துரத்தி விட்ட விஷயத்தைத் தான் தந்திரஜித்துடன் சினேகம்செய்யத் தொடங்கியபோது அவனுடைய செவியில் இரகசியமாகச் சொல்லி னன். இதுகிடக்க, காட்டில் தனியாய் விடப்பட்ட காந்தாமணி யோ, தன் விதியை நொந்து விஜயார்த்தனரின் பிரிவால் மிகவும் வருந்தி மனோகரனைக் காணுததால் வாடி பிறகு சன்னியாசியாராக ஆண்வேடம் தரித்து பல தேசங்கள் சுற்றி ஆங்காங்கு கதாப்பிரசங் கங்கள் நடாத்தி அதில் வந்த திரவியத்தைக்கொண்டு தன்னுயிரைக் காப்பாற்றி மிகுந்ததை தர்மத்தில் செலவிட்டு, இப்படியாக ஸத் காலக்ஷேபம் செய்துகொண்டு கடைசியில் அகஸ்மீகமாய் வஜ்ரபுரிக் கும் வரலானுள். பரிமளாங்கி, காந்தாமணி, குணசீலமன்னன் இம்மூவரும் ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவர்கள். காந்தாமணியின் ஸௌந்தர்யத்தைக்கண்டு மயங்கி அவளை எழு பிராயத்தில் தந்திர ஜித்து திருடிக்கொண்டு வந்துவிட்டான். பிறகு ஜானகிராமுடன் விஜயார்த்தனர்சகிதம் மனோரஞ்சிதபுரிக்கு வந்துசேர்ந்தாள். பிறகு இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. இது விஷயங்களைக்கேட்ட

எல்லோரும் ஆச்சரியப்படலானார்கள். பிறகு ஒருவர்க்கொருவர் தேற்றிக்கொண்டு அனைவரையும் ஒன்றாய்ச்சேர்த்த பகவானைப் பல வாறு துதித்தனர். 'தான் திருடி தலையாரிவீட்டில் வைத்ததுபோல்' குழந்தையைத்திருடி அதின் சிறிய தகப்பனாராகிய விஜயார்த்த னரிடம் ஒப்புவித்தேனென்று காமசுந்தரி சொல்லி நகைத்தாள். உடனே அனைவரும் கொல்லென்று சிரித்தனர். தனது குழந்தை மனோகரன் தன் ஸகோதரி காந்தாமணியிடம் வளரும்படியான பாக்கியத்தைப்பெற்றது தனது அதிர்ஷ்டவசமேயென்று பரிமளா மனமகிழலானாள். இங்ஙனமாக அன்றையதினத்தை எல்லோரும் ஆனந்தத்திலேயே கழித்தனர். கமலாகரனைத் தூக்கிற்போடும்படி தீர்மானித்ததைத்தடுத்து அவனைக் காப்பாற்றியதற்குக் காரணமா யிருந்த தமிழ் பத்திரிகையைப் பிரசுரித்துவரும் பத்திராதிபரை விவா கத்திற்கு வரும்படியாக நாமும் நமது மித்திரர்களான மனோகர னும் கமலாகரனுமாகச்சேர்ந்து ஒரு கடிதம் எழுதி அவருக்கு அனுப்பினோம். அவரும் அதிக சந்தோஷத்துடன் வர அவருக்கு அநேக உபசாரங்களைச்செய்து பத்திரிகாபிவிர்த்தியின் நிமித்தம் வேண்டிய திரவியசகாயம் செய்து மனோகரன் அவரைப் பலவாறு கொண்டாடினன். பிறகு ஸுலலிதாவுக்கும் மனோகரனுக்கும் விதிவத்தாய் விவாகம் மங்களகரமாய் நடந்தேறியது. பிறகு வஜ்ர புரிராஜ்யமகுடாபிஷேகமும் வெகு விமரிசையாய் நிறைவேறிற்று. மனோரஞ்சிதபுரியின் மன்னர் கமலாகரனுடைய உத்தமகுணத்திற்கு மெச்சி அவனுக்குத் தன் குமாரத்தி ஆனந்தவல்லியைப் பாணிக்கிர கணம் செய்வித்து அவனை அந்நகரத்திற்கு அரசனாக்கினர். மனோ கரனும் கமலாகரனும் தங்கள் பால்ய சிநேகத்தைத் தினத்திற்குத் தினம் விருத்திசெய்துகொண்டனர். பிரதாபசந்திரர் வீரகேசரி மன்னரைத் தம்மிடத்திலேயே இருக்கும்படி செய்து தாம் தமது அருமைக்கண்மணிகளான, பரிமளாங்கி, ரூபாவதி, காந்தாமணி, ஸுலலிதாகுமாரி, விஜயார்த்தனர், சந்தானகிருஷ்ணர் முதலிய வர்களோடு காலங்கழிக்கலானார். குணசீலமன்னரும் கமலாக்ஷியும் விடைபெற்றுக்கொண்டு சந்தோஷசித்தர்களாய் சுந்தரபுரிக்குப் பிர யாணமாயினர். விவாகத்திற்கு வந்திருந்த அரசர்களெல்லாம் தத்தம் தேசம்போய்ச்சேர்ந்தனர். இவர்களின் கதையை இதுகா றும் கூறிவந்த நாமும் நமது வாசகர்களிடம் வந்தனத்தோடு விடை

பெற்றுக்கொள்ளுகின்றோம். கமலாகரன் மனோரஞ்சிதபுரியில் அரசாக்ஷிசெய்துகொண்டு ஆனந்தவல்லியோடு ஆனந்தமாயிருக்கின்றான். மனோகரனும் இகபரஸாதகமான அநேக தருமகாரியங்களைச் செய்துகொண்டு பிரஜானுகூலனாய் விளங்கி தன்னுயிர்போல் மன்னுயிரைக்காத்து செங்கோல் செலுத்தி பூலோகதேவேந்திரனைப் போல் அரசுபுரிந்துகொண்டு ஸுலலிதாவுடன் சுகமாய் வாழ்ந்து வருகின்றான்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

குவாலியர்

அல்லது

ஸிந்தியராஜ்யம்.

பரப்பளவு—29047 சதுரமைல்.

ஜனத்தொகை—933001. வருஷவரும்படி—ரூ. 13779232.

மத்திய இந்தியாவில் உள்ள இந்த ராஜ்யம், முன்னொருகாலத்தில் வெகுதூரம் பரவியிருந்தது. மகாராஷ்டிர யுத்தங்களுக்குப்பிறகு எஞ்சிநின்றதுதான் இப்போதுள்ளது. இந்த ராஜ்யத்தை மூன்று பீடபூமிகளாகப் பிரிக்கலாம். அவைகளில் தெற்கேயுள்ளது மிகவும் உயரமானது. சில பாகங்கள் காடடர்ந்தும், வேறு சில பாகங்கள் பசுமையான புல்லால் மூடப்பட்டுமிருக்கின்

றன. ஆறுகளநேகமோடுகின்றன. இந்நாட்டுக்கு வட மேற்கிலும் வடகிழக்கிலும் சம்பல்நதி எல்லையாகி ஆக்ரா, இடாவாமுதலிய பிரிடிஷ் ஜில்லாக்களினின்றும், டோல்புரி கராலி, ஜெயபுரி என்னும் சுதேச ராஜ்யங்களினின்றும் இதைப் பிரிக்கின்றது. கிழக்கில் ஜெலான், ஜான்ஸி, லலித் பூர், ஸாகர்முதலிய ஜில்லாக்களாலும், தெற்கில், போபால், டான்க், கில்ச்பூர், ராஜகிருகமுதலிய ராஜ்யங்களாலும், மேற்கில், ஜெலவார்டான்க், கோடா ராஜ்யங்களாலும் இந் நாடு சூழப்பட்டிருக்கிறது.

குவாலியர்தேசத்தரசர் மகாராஷ்டிர சூத்திரர். இவர் மூதாதைகளில் ஒருவனான ராணோஜி என்பவன் இவ்விராஜ் யத்துக்கு மூல்புருஷனும். ராணோஜியின் தகப்பனார் (சிந் தியா) சதாரா ஜில்லாவிலுள்ள குமாகரா என்னும் கிராமத் தில் தலைகாரி (பேடல்) வேலைபார்த்துவந்தனர். அவரு டைய வம்சத்தவரும் குடும்பப்பெயரையே வைத்துக்கொ ண்டிருக்கின்றனர். ராணோஜியின் முன்னோர்கள், பீடர் தேசத்து அரசன்கீழ் வேலைபார்த்துவந்தனர். ராணோ ஜிக்கு அங்கு உத்தியோகம் கிடைக்காமற்போகவே,மிகுந்த தாரித்திரியத்தையடைந்து உற்றுருறவினருதவியின்றித் தவிப்பாளுயினன். ஆயினும் அதிருஷ்டவசத்தால் 1714-ல் சதாராவுக்குப்போய் பேஷ்வா பாலாஜி விசுவநாதருக்குப் பாதரக்ஷை தூக்கும் தாழ்ந்த உத்தியோகத்தில், அவ்வுத்தி யோகத்துக்கேற்ற குறைந்த சம்பளத்தோடு அமர்ந்தான். என்றாலும், ஒரு பெரியமனிதன்கீழ் தாழ்ந்தவேலையிலிருந் தாலும் அது கௌரவமென்றே எல்லாரும் எண்ணுவது வழக்கமாதலால், ராணோஜியும் பாதரக்ஷை தூக்கும் உத்தி யோகத்தில் ஆறுவருஷகாலமிருந்தான். அவன் முன் னுக்குவந்தவிதம் வருமாறு:—ஒருநாள் பேஷ்வா பாஜி ராவ், மகாராஜாஸாகுவோடு நெடுநேரம் பேசிக்கொண்டி

ருந்தனராம். அப்போது பாதரக்ஷையைக் கையில் வைத்துக்கொண்டு வெளியில் காத்திருந்த ராணோஜிக்குத் தூக்கம் வர அத்தூக்கத்தில்கூடத் தன்னெஜமானனுடைய பாதரக்ஷையை மார்போடணைத்துக்கொண்டு துயின்றனன். வெளியில், பேச்சு முடிந்ததும் வந்துபார்க்க, ராணோஜி இருந்த நிலைமைக்குவியந்து, பாஜிராவ் உடனே அவனுக்கு ஒரு சில்லதார் (குதிரைவீரன்) உத்தியோகம்கொடுத்தான்.

இதற்குமுன்பேயே, டில்லியில் மொகலாய ராஜ்யம் க்ஷீணதசையையடைய அதைசசேர்ந்த சிறு உத்தியோகஸ்தர்களெல்லாம் தத்தமக்கென்று ஒவ்வொரு ராஜ்யம் செய்துகொள்ளவாரம்பித்ததினால் உண்டான கலகத்தையும் குழப்பத்தையும் ஒருவாறு அடக்கியதற்காக பேஷ்வா பாலாஜி விசுவநாதருக்கு மொகல் சக்கரவர்த்தி தக்ஷிண தேசங்களில் 'சவுத்' என்னும் வரியை வசூலிக்க உத்தரவு கொடுத்திருந்தான். இந்த உத்திரவுக்கு அநுகுணமாக, பாஜிராவும் மால்வா, காண்டஷ்முதலிய பிராந்தங்களில் மேற்கூறிய வரி வெகுநாளாகப் பாக்கியாயிருந்ததை வசூலிக்கச்சென்றான். அப்போது ராணோஜிஸிந்தியாவும் அவனுடன் கூடச்சென்று தன்னுடைய சக்தியையெல்லாங் காட்டினான். இதற்கு வியந்து பாஜிராவ் ராணோஜியை ஒரு குதிரைப்பட்டாளத்துக்கு அதிகாரியாக்கினான். மறுபடியும் 1725-ல் மாளவதேசத்துக்கு வரி வசூலிக்க அனுப்பிப் பின்பு, அவனுக்கு வெகுமதியளிக்கவேண்டியதற்காகவும் அவனுடைய செலவுகளுக்காகவும், மாளவதேசத்தை ராணோஜிக்கே கொடுத்துவிட்டான். உடனே ராணோஜியும் மாளவதேச அதிகாரியானான். பத்து வருஷங்களுக்குப் பிறகு பாஜிராவ் நேராகவே மொகல்சக்கரவர்த்தியை சில நிலங்கள் கேட்கத்துணிந்ததும், சக்கரவர்த்தி மறுத்ததைப் பொறாமல், பாஜிராவ், ராணோஜி, மல்ஹார் ராவ்ஹோல்கார்

மூவரும் படையெடுத்து டில்லிக்குச்சென்றனர். ஆனால் தோல்வியடைந்து திரும்பிவருகையில் நிஜாமல்முல்க் வழி மடக்கிக்கொள்ள, அவனிடமிருந்து தந்திரமாய்த் தப்பிப் பிழைத்ததுமன்றி, அவனைத் தோற்கடித்துத் தாங்கள் சொன்னபடியெல்லாம் கேட்கும்படி செய்தனர். மாளவ தேசத்தையும், நர்மதைக்கும் சம்பலுக்கும் இடையிலே யுள்ள நிலங்களையும் நிஜாம் மகாராஷ்டிரர்களுக்குக் கொடுத்துவிட்டான். இவை போதாமல் மகாராஷ்டிரர்கள் ஐம்பதுலக்ஷரூபாயும் அவனிடமிருந்து கவர்ந்தனர். 1739-ல் போர்த்துகல் தேசத்தாரிடமிருந்து ராணோஜி பேஸின் என்னுங் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டான்.

இந்தச்சந்தர்ப்பத்தில் இந்தியாவின்மேல் நாதர்ஷா படையெடுத்து வந்தவுடன், அவன் டில்லியைநோக்கிச் சென்ற செய்தியைக் கேள்வியுற்றதும் மகாராஷ்டிரர்களெல்லாம் அந்நகரைக் காக்க விரைந்தோடினர். பேஷ்வா கட்டளையிட ராணோஜியும் போனான். ஆனால் நாதர்ஷா இந்தியாவை ஜயித்து அதில் ஆளவேண்டுமென்னும் எண்ணத்துடன் வரவில்லை. கொள்ளையடிப்பதற்காகவே வந்தான் வேண்டியவரையில் கொள்ளையடித்துக்கொண்டு டில்லியைவிட்டுப்போய்விட்டான். அவன் கொண்டுபோன வெள்ளி, பொன், நகைகள், சாமான்கள்முதலியவைகளெல்லாம் சுமார் எழுபதுகோடிரூபாய் மதிப்புள்ளதாம். ஷாஜிகான் செய்துவைத்திருந்த மயிலாஸனத்தையும் கொண்டுபோய்விட்டான். இவைகளன்றி, அவனது அட்டூழியத்தினால் உயிர்துறந்தனர் இரண்டுலக்ஷம்பேராம். இவனது குரூரத்தனத்தைப்பற்றிப் பின்வரும் கதையொன்று சொல்லப்படுகிறது. ஒரு சன்னியாசியொருவர், இவனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் "நீ தெய்வமா

யிருந்தால், தெய்வத்தைப்போல் நட; அவதாரபுருஷனுனல் எங்களுக்கு மோக்ஷசாதனத்தைக் காட்டு; அரசனுனல் ஜனங்களைச் சந்தோஷப்படுத்து; அவர்களைக்கொல்லாதே" என்று எழுதியிருந்ததற்கு நாதர்ஷா "நான் தெய்வத்தைப்போல நடப்பதற்குத் தெய்வமல்ல; மோக்ஷசாதனத்தைக்காட்ட நான் அவதாரபுருஷனல்லன். ஜனங்களைச் சந்தோஷப்படுத்த நான் அரசனுமல்லன். ஆனுல் எந்த ஜனங்களைக் கடவுள் சினந்து தண்டிக்க வேண்டுகிறுரோ, அவர்களுக்கு அந்தக் கடவுளாலேயே யனுப்பப்பட்டவன்" என்று பதில் சொன்னுனும். இதுவும் ஒருகாலம்!! இந்த சமயத்தில் மகாராஷ்டிரர்கள் தங்கள் தங்கள் இடங்களில் ஸ்திரப்படுத்திக்கொள்ள மொகல் சக்கரவர்த்தியிடமிருந்து சன்னது பெற்றுக்கொண்டனர். இவைகளுக்குப் புருஷகாரமாய் நின்றவர்கள் ஜெயபூர் மகாராஜா ஜெயஸிங், ராணேஜி இவ்விருவர்களே. மகாராஷ்டிரர்களுக்கு, அவர்களிடத்தில் ராணேஜியும், மல்ஹார்ராவ்ஹோல்காரும் இருந்தது பெரிய கவுரவமும் கர்வமுமாயிற்று.

ராணேஜிஸிந்தியா 1750-ல் இறந்தான். அவனுக்கு மீனுபாய் என்னும் சுயஜாதிப்பெண்ணுல் மூன்று குமாரர்களும் (ஜெயாதி, தத்தாஜி, ஜெய்தாஜி), சீமாபாய் என்னும் ராஜபுத்திரஸ்திரீயால், மாதாஜி, துக்காஜி என இருவருமாக, ஐந்து புத்திரரிருந்தனர். எல்லாருக்கும் மூத்தவனை ஜெயாஜிராவ் தகப்பனிறந்தவுடன் ஸிந்தியாவானுன். கொஞ்சநாள்களுக்குப் பிறகு டில்லியரசன் இவனை, ரோகில்கண்டுக்கு விரோதமாய்த் துணைகேட்க, இவனும் சிலதுணைவருடன் சென்று கலகத்தையடக்கி, நாட்டைப் பிடித்துத் தன்னேடுகூட வந்தவருடன் பாகஞ்செய்துகொண்டான். மற்றுஞ்சின்னுட் சென்றதின்பின் பாலாஜிராவ், (மூன்றுவது பேஷ்வா) மாளவதேசத்தைப் பாகித்துக்கொடுத்ததில்,

ஜெயாஜிக்கு வருஷமொன்றுக்கு எழுபதுலக்ஷ ரூபாய் வரும்படியான பூமியைக்கொடுத்தான்.

மார்வார் தேசத்தில் பட்டத்துக்கு வருவதைப்பற்றி விவாதமுண்டாக, விஜயஸிங் என்பவன் ராம்ஸிங் என்பவனுக்கு விரோதமாகக் கிளம்பினன். ராம்ஸிங் பேஷ்வாவைத் துணைகேட்க, ஜெயாஜிஸிந்தியா துணையாகச்சென்று நாகூர் என்னுமிடத்து பாசறையிலிருந்துழி, விஜயஸிங் ஏவின சில பாதகர்கள் இவனைக்கொலைசெய்துவிட்டனர். இதற்குப் பழிவாங்குவதற்காக மகாராஷ்டிரர்கள் விஜயஸிங்கிடமிருந்து ஆஜ்மீர் கோட்டையையும், மார்வார் தேசத்தில் சௌத்வரீ வசூலிக்க அதிகாரத்தையும் பெற்றுவிட்டனர்.

1759-ல் ஜெயாஜி யிறந்ததும், அவன்றம்பியான தத்தாஜிராவ் ஸிந்தியா பட்டத்துக்கு வந்தனன். அதற்கு முன்னேயே, 1751-ல், பூனுவின்மேல் படையெடுத்துவந்த ஸலபட்ஜங்கை வென்று வென்னிட்டோடும்படிசெய்தும், 1755-ல், ஆமதபாத்தை எதிர்த்துச்சென்ற பேஷ்வாவின் சகோதரனுன ரகுநாதராவின் துணைக்குச்சென்று ஜெயங்கொடுத்தும் வீரனெனப் புகழ்படைத்தவன். மூன்றுவருஷங்களுக்குப் பிறகு, ரகுநாதராவ் பஞ்சாபின்மேற் சென்று லாகூரைப் பிடித்துக்கொண்டான். மேலும் போகத்தொடங்குகையில், எதிராக ஆமதுஷா அப்தலி, ரோஹில்லாநாஜிமுட்டௌலா, ஷுஜாவுடௌலா இம்மூவரும் பெருத்த படையுடன் வந்தனர். டில்லிக்குச் சமீபத்தில் தத்தாஜி ஸிந்தியர், மல்ஹார் ராவ்ஹோல்கார் இவ்விருவருடைய படையும், துருக்கருடையப்படையும், கைகலந்தது. கடைசியாக மகாராஷ்டிரர்கள் தோல்வியடைந்தனர். அவர்களில் இறந்தனர் கணக்கிலாதபேர். தத்தாஜியும் கொலையுண்டவர்களில் ஒருவன். (1759).

தத்தாஜி யிங்கே உயிர்துறந்ததும், அவன் தம்பியான ஜெய்டோஜியும், டீக் என்னுமிடத்துக்கருகில் காம்பீர் என்னுமிடத்தை முற்றுகைபோட்டுக்கொண்டிருக்கையில், கொல்லப்பட்டான். ஆகையால் ஸிந்தியாபட்டம், இளவரசான ஜெயாஜிராவின் புதல்வன் ஜென்கோஜிக்குக்கிடைத்தது.

லாகூரில்நடந்த சண்டைக்குப்பின் ஆமதுஷா அப்தலி டில்லிமேல் கனவேகமாய் வந்துகொண்டிருந்தான். அவனையெதிர்க்க மகாராஷ்டிரவீரரெல்லோரும் சேர்ந்துசென்றனர். 1761-ஷு ஜனவ்ரிமீ 7உ இருதிறச்சேனையும் பானிபட்டு என்னுமிடத்தில் (புராணகுருக்ஷேத்திரத்தக்சருகே) சண்டைசெய்யத்தொடங்கின. இப்போது இறந்த அநேகமாயிரவீரர்களை யார்கொலோவுரைக்கிற்பார்? மகாராஷ்டிரர்கள் நேராக நெடுநேரம் நின்று சண்டைசெய்த வழக்கமில்லை. ஆனபடியால் துருக்கருடைய சண்டைக்குச் சரியாய் எதிர்த்துநிற்கமாட்டாமல்பின்னிட்டனர். உடனே துருக்கர்கள் துரத்தவாரம்பித்து மகாராட்டியர்களைக் கண்டகண்டவிடமெல்லாம் கண்டதுண்டமாக்கினர். மேன்மையான சூரர்கள் ஆயிரக்கணக்காயிறந்தனர். பாக்கியிருந்தவர்களோ இருந்தவிடந்தெரியாமல் ஓடிப்போகும்படி துரத்தப்பட்டனர். இப்படி ஓடும்போதும் அநேகர் தாங்கமாட்டாமல் உயிர்துறந்தனர். கையில் அகப்பட்டவர்களை மகம்மதியர் படுத்தியபாட்டுக்கு அளவில்லை. அதைச் சொல்லவும் நா எழவில்லை. விசுவநாதராவ் (பேஷ்வாவின் புதல்வன்), மகாராஷ்டிர சேனைத்தளகர்த்தனை சதாசிவபாவ், ஜென்கோஜிராவ் ஸிந்தியா, இன்னுமநேக பிரபலர்கள், வீரர்கள் எல்லோரும் வீரசுவர்க்கமடைந்தனர். தப்பியோடினவர் சிலரே. அவர்களும் மிகுந்த சிரமத்துடன் போய்ப் பேஷ்வாவுக்கு இந்த மகத்தான துக்க சமாசா

ரத்தைச்சொல்லினர். கேட்டதும், புத்திரசோகம் ஒருபால், சேனையிழந்தது ஒருபால், அதிகாரம்போனது மற்றொருபால். இவ்வாருகப் பேஷ்வா மனநந்தளர்ந்தனன். மல்ஹார்ராவ்ஹோல்காரும், தாமாஜிராவ் கய்க்வாருமே தப்பிப்பிழைத்தனர். இந்தச்சண்டையில் இறந்த மகாராஷ்டிரர்கள் சுமார் இரண்டுலக்ஷமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வேறு சொல்வானேன். சண்டையானபின்பு இந்தியாவில் இறந்துபோனபிள்ளைக்கும், கணவனுக்கும், சகோதரனுக்கும், தகப்பனுக்கும் அழாத மகாராஷ்டிரவீடு இல்லவேயில்லை. இந்தச்சண்டையால் மகாராஷ்டிரர் அதிகாரம் நிலைகுலைந்துபோய்விட்டது.

மேற்சொல்லியபிரகாரம் ஜென்கோஜிராவ் ஸிந்தியா பாணிபட்டு யுத்தத்தில் கொலையுண்டு இறந்ததும் ஸிந்திய ராஜ்யத்துக்கு வருவதற்கு இருவர்தாமிருந்தனர். அவ்விருவர்களும் ரானோஜியின் ராஜபுத்திர ஸ்திரீயிடத்துப் பிறந்த மாதவராவும், துகாஜிராவும்தான். இருவர்களும் வாதத்துக்குத் தொடங்க, இவ்வழக்கு பேஷ்வாவிடம் போயிற்று. அங்கேயும் இருபக்கமும் சார்பிருந்தது. இருந்தும் கடைசியாக 1767-ல் மாதவராவே ஸிந்தியாவானன். இதுவும் ஒரு நன்மையே. மாதவராவ் ஸிந்தியாவும் பானிப்பட்டு யுத்தத்திலிருந்து தப்பியோடியவனே. அவன் ஓடிக்கொண்டிருக்கையில் ஒரு ஆப்கான் இவனைத் துரத்திக்கொண்டுவந்தான். இளைப்பினுல் சற்று மெதுவாய்ப்போகவும், ஆப்கான் இவனைப் பிடித்துக்கொண்டு முகத்தில் காரியுமிழ்ந்து கத்தியால் அவனது வலதுகாலை முடமாக்கிவிட்டு, அவனுடைய ஆடையாபரணங்களையும், குதிரையையும் பிடுங்கிக்கொண்டு ஒரு குழியில் தள்ளிவிட்டுப்போய்விட்டான். அவன் போனபிறகு, பின்னும் யார்யார் வந்து என்ன செய்வார்களோவென்று பயந்து

கிடந்த இவனை யுத்தகளத்தினின்றும் தப்பியோடிய ராணு கான் என்னும் ஜலங்கொண்டுபோவான் ஒருவன் தனது குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டு பத்திரமானவோரிடத்தில் கொண்டுசேர்த்தான். பின்பு இவனுக்கு விரோதமாய் பூனாவில் ஸிந்தியாபட்டத்தைக்குறித்து விவாதமாயிருக்கும்போது, ஆமதுநகருக்கருகிலுள்ள 'ராயமோகோ' என்னுமூரில் சிலநாள் இவன் வசிக்க, அங்குள்ள மன்ஸூர்ஷா என்னும் பக்கிரியொருவன் இவனை யாதரித்தான். பிற்பாடு ஸிந்தியாவானதும், தனக்குக்கிடைத்த பாக்கியம் அந்தப்பக்கிரியின் ஆசிர்வாதமென நினைத்து, அவனுக்குச் சில நிலங்களை மானியமாக விட்டுவிட்டான். இவனைச் சமயத்தில் உதவிசெய்து உயிர்கொடுத்த ராணுகானே, மாதவராவின் சகோதரன்போலாயினன். அவன் சயினியத்தின் தளகர்த்தனுனதுமன்றி, அனேக வெகுமானங்களையும் பெரும்பதவிகளையும் பெற்றான். அவனுடைய சந்ததியார் இன்னும் ஸிந்தியாவால் விடப்பட்ட மானியங்களை அனுபவித்து வருகின்றனர்.

1761-ல் பானிப்பட்டில் இழந்த ராஜ்யங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் மகாராஷ்டிரர்கள் திரும்பவுமடைந்தனர். மாதவராவ் ஸிந்தியா, துகாஜி ஹோல்கார் இன்னும் சிலர் சேர்ந்து வடஇந்தியாவில் இழந்த நாட்டையும் கீர்த்தியையும் திரும்பப்பெறுவதிலேயே கண்ணாயிருந்தனர். மொகல் போலிச்சக்கரவர்த்தியான ஷா அலம் ஆங்கிலேயருடைய பாதுகாப்பின்கீழிருந்தான். அவனை 1771ல் மகாராஷ்டிரர்கள் டில்லியில் முன்போலவே சிங்காதனமேற்றினார்கள். இருந்தும் ஒருவரிடத்திலிருந்து மற்றொருவரிடத்துக்குப் போனதினால் ஷா அலத்துக்கு ஒருவிதமான சந்தோஷமும் திருப்தியுமில்லை.

பேஷ்வா மாதவராவ் 1772-ல் இறந்தான். இளவயதிலேயே இறந்ததினால் மகாராட்டியர்களுக்குப் பானிபட்டு விபத்துப்போதாமல் இதுவும் சேர்ந்தது. இந்த க்ஷணம் முதற்கொண்டு, மகாராஷ்டிரர்களுக்குள் உட்கலகமுண்டாகத்தலைப்பட்டது. மகாராஷ்டிரராஜ்யம், ஆரம்பமாகி ஐம்பதுவருஷங்களுக்கெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போகும்படி மகாராஷ்டிரர்களே செய்துவிட்டனர்.

பேஷ்வா இறந்த சமாசாரம் மாதவராவ் ஸிந்தியாவுக்குத்தெரிந்ததும், அவன் உடனே பூனாவுக்குச் சென்று, அங்குப் பேஷ்வாவாகச் சூழ்ச்சிசெய்துகொண்டிருந்த ரகுநாதராவைத் தூரத்திவிட, அவன் ஆங்கிலேயருடைய உதவியைத் தேடுவானானன். ஆங்கிலேயரும் உதவியாகச் சண்டைக்குவரவே, முதல் மகாராட்டிரயுத்தமாரம்பித்தது. அதில் ஆங்கிலேயருக்குத் தோல்வியே மேலிட்டதினால் சமாதானஞ்செய்துகொண்டனர். ரகுநாதராவை, நானா பர்னவிஸ் என்பவன் சிறையில் வைத்துவிட்டான். இந்தச் சமாதானம் நீடு வாழவில்லை. உடனே சண்டை மறுபடியும் ஆரம்பித்துவிட்டது. ஆங்கிலேயர் குவாலியரைப் பிடித்துக்கொண்டு வெற்றியடைந்தபோதிலும், லாபம் ஒன்றையுமடையவில்லை. மறுபடியும் 1782-ல் சமாதானமுண்டாயிற்று. அதன்படி, ஆங்கிலேயர் ரகுநாதராவுக்கு இனிமேல் உதவிசெய்வதில்லையென்றும், கோகாட் ராணாவுக்கு விரோதமாகச் சண்டைசெய்துகொண்டிருந்த ஸிந்தியாவுக்கு எதிராக அனுப்பப்பட்டிருந்த ஆங்கிலப்படையை திருப்பிக் கூப்பிட்டுவிடுவதென்னும் ஏற்பாடாயிற்று. பரோச், அதைச் சுற்றியுள்ள கிராமங்கள், இவைகளை ஸிந்தியா ஆங்கிலேயரிடமிருந்து வாங்கிக்கொண்டான். இந்தச் சண்டையில் மிகுந்த லாபத்தையடைந்த மாதவராவ் ஸிந்தியா இப்போதுதான் பேஷ்வா அதிகாரத்தி

னின்றும் நீங்கி, வேறுக ஒரு ராஜ்யம் வடக்கே ஸ்தாபித்துக்கொள்ளவெண்ணினுன்.

1782-ல் குவாலியர்கோட்டையை ஸிந்தியா பிடுங்கிக்கொண்டு, கோகாட்ராணுவைச் செயித்து, அவன் சேனையைச் சின்னுபின்னமாக்கி, நேராக டில்லிக்குச்சென்று, அங்கு சிறையில் வைக்கப்பட்டிருந்த மொகல் சக்கரவர்த்தியை விடுதலைபண்ணினுன். டில்லியும், ஷா அலமும் இவன் கைக்கு வந்துவிட, பேஷ்வாவே மொகல்மந்திரியென்னும் தான் அம்மந்திரியின் அதிகாரியென்றும், மொகல் சக்கரவர்த்தியிடமிருந்து ஸன்னது வாங்கிக்கொண்டான். இவை போதாமல், டில்லி, ஆக்ரா முதலியவைகளையும், அறுபத்தைபாயிரரூபாயையும் மொகல்சக்கரவர்த்தி ஸிந்தியாவுக்குக்கொடுத்தான். டில்லியில் தன்னதிகாரம் நிலைபெறவே கங்கைக்கும் யமுனைக்குமிடையிலுள்ள நிலங்களையும் அலிகர், ராகவகர்முதலிய கோட்டைகளையும் கவர்ந்து தன்னுட்டுடன் ஸிந்தியா சேர்த்துக்கொண்டான். இவ்வாறு சர்வாதிகாரமும் பெற்று விளங்குபவன் ஒரு சமயத்தில் பூனவுக்குச்சென்றபோது ஒரு ஹாஸ்யமான காரியம் செய்தான். ஹிந்துஸ்தானத்தில், ஸத்லஜ் நதிமுதல் ஆக்ராவரையிலுள்ள பூமியைச் செயித்தவனும், ராஜபுதனத்து அரசர்களை வென்றவனும், பதினறு பட்டாளங் காலாட்படைகளையும், ஐந்நூறு பீரங்கிகளையும், ஆயிரங்குதிரைப்படைகளையுடையவனும், மாளவதேசத்தில் பெரும்பான்மையும், தெக்ஷிணத்தில் சில பாகங்களையும் சொந்தமாகவுடையவனுமான ஸிந்தியா பூனவுக்குச்சென்று, அங்கு பேஷ்வாவாயிருந்த குழந்தைக்கு வந்தனஞ்செய்யவந்தவன் அந்நகர் வாயிலிலேயே. தன் யானையினின்று மிழிந்து, அரண்மனைக்கு நடந்துபோய், பிரபுக்கள் வீற்றிருக்கும் சபையில்போய் நின்றுகொண்டிருந்தான். பேஷ்வா வந்த

வுடன், மற்றையோருடன் அவனை உட்காரும்படி சொல்ல அதற்கு அவன் அருகனல்லனென்று சொல்லி, அக்கிளி லிருந்த ஒரு மூட்டையையவிழ்த்து அதினின்றும் ஒரு ஜோடி பாதரக்ஷையை யெடுத்து, பேஷ்வாவின் முன் வைத்து, "இதுதான் என் தொழில்; இதுதான் என் தகப்பனாரது" என்று சொன்னான். உடனே மறுபடியும் அப்பாதரக்ஷைகளை யெடுத்துப் பத்திரமாய் முடிந்து அக் கிளின்கீழ் வைத்துக்கொண்டே நின்றான். பேஷ்வா மறு படியும் உட்காரும்படி சொன்னதின்பேரில், வேண்டா வெறுப்புடன் உட்காருபவன்போல் நடித்து உட்கார்ந்த னன். இந்த வஞ்சகம் பிறருக்குத் தெரியாமற்போகவே, ஜனங்களெல்லோரும் இவனைக்கொண்டாடினார்கள். பேஷ் வாவுக்கும் ஆங்கிலேயருக்கும் வருத்தம் வந்தபோதெல் லாம் இவன்தான் சமாதானஞ்செய்துவந்தான். இப்படி யாக ஸிந்தியா வரவர பலமடைவதைக்கண்டு பயந்து நானு பர்நாவிஸ் என்னும் மந்திரி ஆங்கிலேயரைத் துணைகேட்க, அவர்களும் சம்மதித்து ஒரு ரெஸிடெண்டை பூனுவில் இதுமுதற்கொண்டு வைத்தார்கள். இந்தச் சமாசாரம் மாதவராவுக்குத் தெரிந்ததும், அவன் பிரஞ்சுக்காரரைத் தன்னருகிலிருத்தி, ஜெனரல் டி பாயன் என்னும் பிரஞ்சு தளகர்த்தனைக்கொண்டு தன் சேனைகளையெல்லாம் சீராக்கு வித்தான். இந்த சயின்யங்களுடன் ஸிந்தியா ஜெய்பூர் ராஜ்யத்தின்மேற் படையெடுத்தான். உடனே மார்வார் தேசத்தரசனும், ராஜபுதனத்தரசர்களும் ஜெய்பூரானுக்கு உதவியாக வர ஜெய்பூர்ராஜா பிரதாபஸிங் ஸிந்தியாவை தாங்கா என்னுமிடத்தில் 1787-வ் எதிர்த்து, அவன் சே னையைச் சினுபின்னமாக்கிவிட்டனன். இதனல் மனந் தளராமல் நான்கு வருஷங்களுக்குப்பிறகு ஸிந்தியா மறு படியும் ராஜபுத்திரர்களைச் சண்டைக்குக் கூப்பிட்டு, அவர்

களை பாட்னு, மர்தா என்னுமிடங்களிலும் நன்றாக முறி யடித்துத் தன் பழியைத் தீர்த்துக்கொண்டதுமன்றி, அவர் களை வருஷாவருஷம் கப்பங்கட்டும்படியுஞ் செய்தான்.

ஈங்கு ஸிந்தியா சண்டைசெய்துகொண்டிருக்குஞ்சம யத்தில், டில்லியில் குலாம்காதர் என்னும் ஒருகலகக்காரன் மொகல் ச்சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கிளம்பி, அவனைச் சிறையிலடைத்ததுமல்லாமல், அவனது இரு கண்களையும் இருப்புச்சலாகைகளினால் கொளுத்திவிட்டான்! இந்தச் சேதி ஸிந்தியாவுக்கு எட்டியதும், டில்லிக்கு உடனே ஓடி வந்து மொகல் சக்கரவர்த்தியைச் சிறைமீட்டு, குலாம்காத ரைச் சிறையிலடைத்துக் கலகத்தையடக்கினான்.

கலகமடங்கியதும், ஜோதிபூருக்குப்போய் ஆஜ்மீர் கோட்டையை முற்றுகைபோட்டுப்பிடித்து, அவ்வரசனை யும் தான் சொல்லிய சமாதானங்களுக்கு ஆளாகும்படி செய்தான். சென்றவிடங்களெல்லாம் ஸிந்தியாவுக்கு ஜயந்தான். கொஞ்சநாளாக ஸிந்தியாவின்மேல் கோபங் கொண்டிருந்த ஹோல்கார் ஆஜ்மீரைக் காக்கவந்ததும், ஸிந்தியா அவன் சேனை முழுவதையும் பஞ்சாய்ப்பறக்க வடித்தான். இதனால் ஸிந்தியா அலகபாத்துக்கு வடக்கி லும் மேற்கிலுமுள்ள நிலங்களில் அநேகவற்றிற்கு எஜமான னானான். 1792-ல் இங்கிலீஷ் அதிகாரம் பூனவில் வலு வடைவதைச்கண்டு, அதைக்குறைத்துச் சூனியமாக்கிவிட வேண்டுமென்னும்எண்ணத்துடன் அங்குச்சென்றான். இப் போது ஸிந்தியாவுக்கு எட்டுகோடிரூபாய் வரும்படியுள்ள நிலங்களும், அநேக சிற்றரசர்களிடமிருந்து கப்பம் வாங் கும் அதிகாரமும் இருந்தன. மொகல் மந்திரியென்று பேஷ்வாவுக்காகமொகல்சக்கரவர்த்தியிடமிருந்து ஸிந்தியா வாங்கிய பட்டத்தைத் தகுந்த மரியாதையுடன் இப் போது பேஷ்வாவுக்கு ஸிந்தியா கொடுத்தான். 1794-ல்,

மகாராஷ்டிரர்களுக்கும் நிஜாமுக்கும் 'சௌத்' என்னும் வரியைப்பற்றி விவாதம் வந்தபோது அதைத் தீர்க்க இல்லாமல், ஸிந்தியா திடீரென்று பூனாவுக்கருகிலுள்ள வனவாடியென்னும் கிராமத்தில் இறந்துவிட்டான் அவனுக்குக் குழந்தைகளில்லாமற்போகவே, அவன் சகோதரன் மகனான டௌலத்ராவ் ஸிந்தியாவைச் சுவீகாரஞ்செய்து கொண்டான். இந்தப்பையனுக்கு இப்போது வயது பதினாறு. உடனே இவனும் சிங்காதனமேறினான்.

வழக்கமாய்க் கொடுத்துவந்ததிறைப்பணத்தை நிஜாம் கொடுக்கமாட்டேனென்று சொன்னவுடன், மகாராஷ்டிர சேனைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து நிஜாமிராஜ்யத்தின்மேற் படையெடுத்து, கார்டா (1795) என்னுமிடத்தில் அவன் சேனையை நிர்மூலப்படுத்தி அநேக செழிப்பான நிலங்களையும் மூன்றுகோடி ரூபாயையும் பெற்றுச் சமாதானஞ் செய்தனர். இந்தச்சண்டையில் வாலைப்பருவம் நீங்காத ஸிந்தியா அபூர்வமான அஸ்தலாகவங்கள் காட்டிச் சண்டைசெய்தனனும். இதேவருஷத்தில் (1795) நானா பர்னவிஸினால் மிகவும் தாழ்ந்த ஸ்திதியில் வைக்கப்பட்டு மனம் வருந்திய பேஷ்வா மாதவராவ், வாழ்க்கையில் பயனில்லையெனக்கண்டு, மேல்மெத்தையினின்று கீழே வேண்டுமென வீழ்ந்து உயிர்துறந்தனன்.

மாதவராவ் இவ்வாறு இறந்ததும், அதற்கு அடுத்தாற்போல் பேஷ்வாஸ்தானத்துக்கு ரகுநாதராவின் குமாரனை பாஜிராவ் என்பவன் வந்தான். ஆனால் அவனுக்கு நானாபர்னவிஸால், இடைஞ்சல்கள் நேரிடும்போலிருந்தபடியால் டௌலத்ராவ் ஸிந்தியாவினுதவியால் பேஷ்வாவானன். ஆகையால் இதுமுதல் நானாவுக்கும் டௌலத்ராவுக்கும் வைஷம்யமுண்டாயிற்று.

மிகுதியும் கோபங்கொண்ட ஸிந்தியா, தன் கோபத்

தையடக்கிக்கொள்ளமாட்டாமல் பூனாநகரத்தை முழுவதும் கொள்ளையடித்துச் சூறையாடினான். ஒரு நாள்முழுவதும் நடந்த லூட்டியில் ஒன்றுமறியாமாந்தர் அநேகர் உயிர்துறந்தனர். நானாபர்னாவிஸ் கைதியாக்கப்பட்டு ஆமதுநகரக்கோட்டைக்கு அனுப்பப்பட்டான். பேஷ்வாவின் ராஜ்யம் கேடுகெட்ட நிலைமையில் போய்விட்டது. ஜனங்களையெல்லாம் மேலதிகாரிகள் சித்திரவதை செய்யவாரம்பித்தனர். சேனையோ சம்பளங் கொடுக்கவில்லையெனக் கலகத்துக்குக் கிளம்பிற்று. ஊராரெல்லாம் கனகோபத்துடனிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பாஜிராவுக்கு நானாவை விடுதலை செய்து முன்போலவே மந்திரிஸ்தானத்தில் வைக்கவேண்டியிருந்தபடியால் அவ்வாறே செய்தான்.

இப்போது ஸிந்தியா, வடக்கே சண்டை செய்துகொண்டிருந்தான். 1800-ல் ஹோல்காருக்கும் ஸிந்தியாவுக்கும் நடந்த சண்டையில் ஹோல்கார் தோற்றுப்போனான். இருதிறத்தார் சேனைகளும் பாழாயின. பேஷ்வா தன் துணைவனான ஸிந்தியாவிஷயத்தில் அனுதாபப்பட்டதற்கு ஹோல்கார் மனம்பொறாதவனாகி, பூனாவுக்குச் சென்று அதைத் தகர்த்தான். பேஷ்வா பயந்து பூனாவை விட்டு பேஸின் என்னும் கோட்டையில் புகுந்துகொண்டான். ஹோல்கார் பூனாவைக் கொள்ளையடித்தான்.

1802-ல் பேஸின் என்னுமிடத்தில் பாஜிராவ் ஆங்கிலேயரோடு உடன்படிக்கையொன்று செய்துகொண்டான். அதன்படி, பேஷ்வா ஆங்கிலேயருக்கு இருபத்தாறுலக்ஷ ரூபாய் வரும்படியுள்ள பூமிகளைக் கொடுக்கவேண்டுமென்றும், ஆங்கிலேய சைனியமொன்றை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவனுடைய சேனையில் ஆங்கிலேயரல்லாத ஐரோப்பியர்களை வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், தனக்கும் பிறருக்கும் உண்டாகும் விக்குவாதங்களை

யெல்லாம் பூனுவிலிருக்கும் ரெஸிடெண்டின்மூலமாய்த் தீர்த்துக்கொள்ளவேண்டியதென்றும் ஏற்பாடுகளாயின. உடனே ஆங்கிலப்படையொன்று பூனுவை நோக்கி, பாஜி ராவைப் பட்டத்தில் வைப்பதற்கென்றே வந்தவுடன், ஸிந்தியாவும் ஹோல்காரும் வடக்கே ஓடிவிட்டார்கள்.

பாஜிராவைப் பட்டத்தில் வைத்ததும் ஆங்கிலேயர், ஸிந்தியாவையும், மற்றுமுள்ள மகாராஷ்டிரத்தலைவர்களை யுப் தங்கள் தங்கள் நாடுகளுக்குள்ளேயே யிருக்கவேண்டுமெனக்கேட்க, அவர்கள் மறுதளித்ததின்பேரில் இருதிறத்தாருக்கும் யுத்தம் உண்டாயிற்று. டௌலத்ராவ் ஸிந்தியாவும் ராகோஜி பான்ஸ்லேயும் சேர்ந்து நடத்திய பெருஞ்சேனையானது 1803-ல் அஸ்ஸே என்னுமிடத்தில் ஆங்கிலேயரால்தோல்வியடைந்து சின்னபின்னமாய்ப்போயிற்று. ஆங்கிலேயர் அநேக கோட்டைகளைப் பிடித்துக்கொண்டனர். ஸிந்தியா மறுபடியும் டில்லிக்கருகே தோற்றுப்போய், டில்லி, ஆக்ரா என்னுமிரண்டு கோட்டைகளையும் இழந்தான். இனித் தன்னாலாவதொன்றுமில்லையெனக் கண்டு ஸிந்தியா சமாதானத்துக்கு வந்தான். அதன்படி ஸிந்தியாவுக்கு இருந்த அதிகாரமெல்லாம் போய்விட்டன. ஆங்கிலேயருக்குச் சில நாடும், பேஷ்வாவுக்கும் நிஜாமுக்கும் சில நாடும் கொடுத்துவிடும்படியிருந்தது. ஆங்கிலப் படையொன்றையும், ரெஸிடெண்டு ஒருவரையும் ஸிந்தியா வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டான். இதனுல் ஸிந்தியா அடைந்த நஷ்டத்துக்கு அளவேயில்லை.

ஆனபடியால், இந்தச் சமாதானவுடன்படிக்கையின் படி நடக்கச் சம்மதியில்லாமல், பரதபூர் ராஜாவுடன் சினேகம்பண்ணிக்கொண்டு, ஸிந்தியா கோகாட் ராணுவின் வசமிருந்த குவாலியரைப் பிடித்துக்கொள்ள முயன்றான். இப்போது இவனுக்கு அநுகுணமாக கவர்னர்ஜனரலான

கார்ன்வாலிஸ்பிரபு ஸிந்தியாவுடனும் ஹோல்காருடனும் சண்டையே கூடாதென்று தம் தளகர்த்தருக்கு உத்திரவனுப்பினர். மறுபடியும் ஸிந்தியாவுடன் சமாதானவுடன்படிக்கையொன்று நடந்தது. அதன்படி குவாலியரும், கோகாட்ஜில்லாவும் ஸிந்தியாவுக்குச் சேரவேண்டியது; ஆங்கிலேய ராஜ்யத்துக்கும் ஸிந்தியாராஜ்யத்துக்கும் எல்லையாக சம்பல்நதி யிருக்கவேண்டியது; முன் உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்குக்கொடுக்கப்பட்ட நாடுகளின் மீது ஸிந்தியா பாத்தியதைகொண்டாடக்கூடாது; இதற்கீடாக ஆங்கிலேயர் ஸிந்தியாவுக்கு வருஷமொன்றுக்கு முப்பதுலக்ஷரூபாய் கொடுக்கவேண்டியது; ஸிந்தியாவின் மனைவிக்கும் பெண்ணுக்கும் ஜாகிர் விடப்படவேண்டியது; ஸிந்தியாவுக்குக் கீழடங்கிய நாடுகளில் ஆங்கிலேயர் தலையிடக்கூடாது; என்று நடந்த ஏற்பாட்டின்படி குவாலியரை ஸிந்தியா தலைநகராகக்கொண்டு ஆளத்தொடங்கினன். கோகாட்தேசத்து ராணுவுக்கு தோல்பூர் முதலிய சில நாடுகளைக் கொடுக்க, அவனும் தோல்பூர் அரசனாகி வாழ்ந்துவந்தான்.

1817-ல் ஆங்கிலேயர் "பிண்டாரிகள்" என்று சொல்லப்பட்ட ஆறலைக்கும் கொலைபாதகர்களை நிர்மூலம் செய்யவெண்ணிப் படைசேர்த்தபோது ஸிந்தியாவும்தன்னாலான உதவி செய்து, அவர்களையிருந்தவிடந்தெரியாமல் செய்துவிட்டனன். பிண்டாரிகளின் தலைவனான அமீர்கான் என்பவன் டாக் என்னும் ஜில்லாவைப் பெற்று ஆண்டுவர, அவன் சந்ததியார்வசத்தில் அது இன்னுமிருந்துவருகிறது.*

*பிண்டாரிகள் 1689-ம் வருஷத்திலேயே யிருந்ததாகத் தெரிகிறது. ஆனால் 18-ம் நூற்றாண்டினிறுதியிலும் 19-ம் நூற்றாண்டின் முதலிலுமே அவர்கள் விளங்கிவந்தனர். கொள்ளையடிப்பதேயவர்

1817-ல் பேஷ்வாவின் ராஜ்யங்களையெல்லாம் ஆங்கிலேயர் தங்கள்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு, அவனுக்கு வருஷம் ஒன்றுக்கு எட்டுலக்ஷரூபாய் கொடுப்பதாகவொப்புக்கொண்டு, அவனை பீதூர் என்னுமிடத்தில் வசிக்கச்செய்

தொழில். அவர்களுடைய உதவியை மகாராட்டியர்கள் அடிக்கடி பெற்று, அதற்கீடாக சில நிலங்களையவர்களுக்குக்கொடுப்பது வழக்கம். இவர்கள் ஒரு மதஸ்தர்களல்ல. கொலை செய்வதும் கொள்ளையடிப்பதுமே யிவர்களுக்குப் பிரதானம். எதாவது ஒரு நாட்டுக்கு வந்தால் அதை ஜயித்து ஆளவேண்டுமென்னுமெண்ணமில்லாமல் வேண்டியவரையில் கொள்ளையடித்துக்கொண்டு வீடுகளைக்கொளுத்திவிட்டு ஊரை நிர்மூலமாக்கிவிட்டுப்போவது அவர்களுடைய குலதர்மம்போலும்! அதிருப்தியடைந்த போர்வீரர்களும், சிறையினின்றும் தப்பிவந்த கைதிகளுமே இந்தப் படையிற்சேர்ந்தனர். இவர்களுடைய ஓட்டத்தைப் பிடிப்பது முடியாத காரியமாகும். கூடாரமும், மற்றுஞ்சில சாதனங்களையும் கையில் எடுத்துக்கொண்டு அவஸ்தைப்படுவது இவர் வழக்கமல்ல. ஒவ்வொரு குதிரைவீரனும் தனக்கு ஆகாரத்துக்காக இரண்டுமூன்று பக்ஷணங்களும் தன்னுடைய குதிரைக்காக கொஞ்ச தான்யமும் கொண்டுபோவான். சத்துருக்கள் தொடருமிடத்துக் கூட்டமாய்ப்போகாமல் தனித்தனியாய்ப் பிரிந்து, 60 மைல் 70 மைல் சைன்யங்கள் தொடர்ந்து வரமுடியாத பாதைகளின்வழியாய்ப்போய் மறுபடியும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள். ஆகவே யிவர்களைத் தொடர்ந்து பிடிப்பது அசாத்தியமான காரியமாயிற்று. அதற்காகச் செலவழித்த பணமெல்லாம் வீணானது ஒரதிசயமல்ல. இதையெல்லாமறிந்த ஆங்கிலேயர் இவர்களை நான்கு பக்கங்களிலேயும் வளைத்துப்பிடித்துக்கொண்டு துரத்தியபடியால் இலகுவாய் அகப்பட்டுக்கொண்டனர். தங்கள்தங்கள் கொலைத்தொழிலையும் கொள்ளைத்தொழிலையும் விட்டுவிட்டு, பயிரிடுதல்முதலிய தொழிலை யாரம்பித்தனர். பிண்டாரிக்கூட்டமென்பது யிருந்தவிடந்தெரியாமல்போய்விட்டது. அவர்கள் தலைவர்களில் இறந்தவர்கள்போக இருந்தவனுக்கு ஜாகீர் கொடுத்தனர். இவர்களைப்பற்றிப் பின்னால், சமயம் வரின், விரிவாய் எழுதுவோம்.

தனர். பாலாஜி விசுவநாதருடைய சந்ததியார்கள் இந்த தாழ்ந்த நிலைமைக்கு வந்ததைக் கண்கொண்டுபார்த்தவன் தௌலத்ராவ் ஸிந்தியாவே. செல்வம் சகடக்கால்போல வருமென்பதற்கு இதுவே ஒரு அரிய உதாரணமாயிற்று.

1827ம் வரு மார்ச்சுமீ 21வ தௌலத்ராவ் ஸிந்தியா, தனக்குப்பின் பட்டத்துக்குவருவதற்கும், தனக்குக் கருமஞ்செய்வதற்கும் ஒருவருமில்லாமல் பரலோகப்பிராப்தியடைந்தான்.

நாதனிறந்தபிறகு ராஜ்யத்துக்கு ஒருவருமில்லையே யென்று நினைந்து, தௌலத்ராவ் ஸிந்தியாவின் மனைவியான பைஜாபாய், தன்னுற்றவினனொருவனைச் சுவீகாரஞ் செய்துகொள்ள, மூகத்ராவ் என்னும் அவன் ஜென்கோஜி ராவ் என்னும் பேருடன் பட்டத்துக்கு வந்தான். ஆனால் அவன் இளம்பிராயத்தானாகவிருந்தபடியினால், பைஜாபாயே ராஜ்யபாரம் வகித்துவந்தாள். அதற்குவேண்டிய சாமர்த்தியமும் தந்திரமும் அவளிடத்து இருந்தபடியால், அவள் நீதியுடனாண்டது நெடுந்தூரம் பரவியது. ஆனால் ஜென்கோஜி தன்னைத் தாழ்ந்தநிலையிலிருந்து அரசனாக்கினதற்கு நன்றியறிவோடிராமல், பைஜாபாய்க்கு விரோதமாக, சில துஷ்டச்சினேகிதர்களின் துர்ப்போதனைகளினால், இது முதல் தானே சர்வாதிகாரியாய்விட்டானென்றும், ஒருவரும் ராணியின் உத்தரவுப்படி நடக்கவேண்டியதில்லையென்றும் விளம்பரப்படுத்தினான். உடனே ராஜ்யத்தில் கலகமுண்டாயிற்று. சைன்யங்களில் பல ராணியின்பக்கற்போயின; சண்டையும் சில நடந்தபின்பு, ரெஸிடெண்டு வந்து தலையிட்டு, இருதிறத்தாரையும் சமாதானப்படுத்தினர். அதன்படி பைஜாபாய் வருஷமொன்றுக்குப் பத்து லக்ஷரூபாய் பெற்றுக்கொண்டு, ராஜ்யவிஷயங்களில் தலையிடாமல், தோல்பூர் என்னுமிடத்தில் வசிக்க உடன்பட்டாள். ஜென்கோஜியே ஆண்டுவந்தான்.

(இன்னும் வரும்)

ஸ்ரீசைலர்.

அன்பில்.

அன்பில் என்பது நூற்றெட்டுத்திருப்பதிகளி
லொன்று. இவ்வண்ணமே இதனருகே
யுள்ள அன்பிலாலந்துறை யென்பதும் ஆயி
ரத்தெட்டு சிவஸ்தலங்களி லொன்றாகும்
இவ்விரண்டினுள் சற்று மேற்கேயுள்ள விஷ்
ணுஸ்தலத்திற்கு மேலன்பிலென்றும், அதற்
குக்கால் நாழிகை வழி கிழக்கேயுள்ள சிவஸ்த
லத்திற்குக் கீழன்பிலென்றும் பெயர். இவையிரண்டும், கோயிலென்
றே வழங்கப்படுகின்ற மஹாக்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்துக்குப் பதி
னான்குமைல் கிழக்கே வடதிருக்காவேரியாற்றின் வட கரையில்
இராஜமார்க்கத்திலிருக்கின்றனவாதலால், அடியார்கள் அங்கு எளி
திற்சென்று கண்டு களித்து வந்தனை வழிபாடுகளை நியமத்துடன்
அழகுபெறச்செய்து இன்புற்றுப் பரகதிக்குவேண்டுஞ் சாதனங்களை
யெல்லாம் குறைவறப்பெற்றுவரலாம்.

அன்பில் என்பது பிரேம்புரி என்னும் வடமொழியின் திரிபு.
பிரேமை—அன்பு; புரி—ஊர். அன்பு குடிகொண்டிருக்கும் ஊர்
என்பது இதன்பொருள். இவ்விரண்டு ஸ்தலங்களும் பாண்டவர்கால
த்திற்கும் முன்னேயே உண்டான பாடல்பெற்ற ஸ்தலங்களேயன்றி
ஸாதரணமான ஊர்களல்லனவாம். இக்காலரீதியின்படி பார்ப்பின்,
கிறிஸ்து பிறப்பதற்கு 4202 வருஷங்களுக்குமுன்னே அவதரித்தவ

ரும், ஆழ்வார்கள் பதின்மருள் பழமையும், நான்காவதானவருமான (மழிசைவந்தசோதி) என்னும் திருமழிசைப்பிரானல் பாடல்பெற்ற துமாதல்பற்றி, திருவன்பிலென்னுந் திருப்பதி 6105 வருஷங்களுக்குமுன்பே உண்டாயிருக்கவேண்டுமென்றுசொல்லவேண்டும். இவ்வண்ணமே கீழன்பிலென்னும் சிவஸ்தலமும், விஷ்ணுஸ்தலமாகிய மேலன்பிலினும் சற்று முற்பட்டதாக இருக்கவேண்டுமேயல்லாது, அதனை அதற்குப்பின்னிட்டதென்று சொல்லவொண்ணாது.

இவ்வாறாக இவ்விரண்டுக்ஷேத்திரங்களும் பண்டைக்காலந்தொட்டு பிரஸித்திபெற்ற வைநகர்களெனலாம். இந்தச் சோழமண்டலத்தில் ஆதிகாலந்தொட்டே இவ்விரண்டு நகரங்களிலும் அப்போழ்தைக்கப்போழ்து அரசாண்ட சோழன் முதலான மன்னர்களால் அவ்வாலயங்களின் கல்வரிசளிலும், ஸ்தம்பங்களிலும், மதில்களிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்ற சிலாசாசனங்களாலும் இவை பூர்வீகமானவையேயென்னலாம். அன்பிலாலந்துறையைப்பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி பதிகம் பாடியிருக்கிறார்:—ஒருகால விசேஷத்தில் ஆற்று வெள்ளப்பெருக்கால் நதியைக்கடந்து செல்லமாட்டாமல் இவர் சடையார்கோவிலிலிருந்தபடியே பதிகம் பாடியதை அதன் எதிரே காவிரியாற்றின் இக்கரையிலிருந்த விநாயகக்கடவுள் உற்றுக்கேட்டதனல் அவருக்குச் செவிசாய்த்த விநாயகரென்னும் பெயர் இன்றைக்கும் வழங்கிவருவதைக் காணலாம். இவ்விநாயகர் இன்றைக்கும் தென்பக்கமாய்ச் செவியைச் சாய்த்துக்கொண்டு அப்பதிகத்தை ஆவலோடு உற்றுக்கேட்டுக்கொண்டிருப்பதையும் பார்க்கலாம். இங்குள்ளார் அன்பிலாலந்துறையைத் தென்காசியெனக்கொண்டே, காசிக்குப்போகிறவர்கள் கங்கையில் நீராடிக்கயையில் சிரார்த்தஞ்செய்யும்வண்ணமே இங்கேயும் சிரார்த்தஞ் செய்துவருகிறதை யாருங்காணலாம்.

நெடுநாளாய் இடிந்துபோய்முற்றிலுமே பாழ்ங்கோயிலாய்விட்டதைக்கண்ட நாட்டுக்கோட்டை நகரத்தார் என்னும் செட்டிமார்களுள் ஒருவரும், தர்மஞ்செய்வதிலேயே மிகச்சிந்தையுள்ளவருமாயிருந்த ஸ்ரீமான் இராமசாமிசெட்டியாரவர்கள் இந்த ஆலயத்தைப் புதுப்பிக்கத் தலைப்பட்டார். இப்புண்ய புருஷன்விடா முயற்சியினல்மிக்க ஊக்கத்தோடு மற்றச்செட்டிமார்களின் பொருளுதவியையும்பாராது தமக்குள்ள நிதியிலிருந்து உசிதமான திரவியங்களைச்செலவிட்டும்,

முன்வைத்தகாலேப் பின்னெடாமலும், இந்த ஆலயமானது முன்னிருந்ததுபோலல்லாமல் பார்ப்போர் கண்களைக் கவரும்படியாகவும், கேட்போர் செவிக்கு இன்பந்தாக்கூடியதுமானதாகவும், அடியார்களும் அன்பர்களும் ஒவ்வொருவேலைப்பாட்டின் விசித்திரங்களை நோக்கி, இந்த அரிய பெரிய வேலைகளை தேவதச்சஞகிய விச்வகர்மாதான் செய்தனரோ, அன்றேல் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளே முற்காலம்போல் இக்காலத்திலும் திருவிளையாட்டாகச்செய்தனரோ என்று ஐயமுற்று ஆனந்திக்கத்தக்கதான சிறப்புவாய்ந்தவேலைகளைச் செய்யப்பெற்றுள்ள மதுரை, திருவானைக்கா, சிதம்பரம், காஞ்சீபுரம், கருவூர் முதலிய ஸ்தலங்களைக் கட்டினவண்ணமே, இந்த அன்பில் ஆலயமும் கர்ப்பக்கிருகமுதல் எல்லாப்பாகமும் அடியோடு அஸ்திவாமுதற்கொண்டே தேர்ண்டியெடுத்தெறிந்துவிடப்பட்டுச்சென்ற ஐந்தாறுவருஷகாலமாகவேலையைசெய்யத்தொடங்கி, இப்பொழுதகர்ப்பகிருகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் ஆகிய இவற்றின்வேலை முக்கால்பங்குக்குமேலேயே ஆய்க்கொண்டுவருகிறது. இந்தத் திருப்பணி இன்னுஞ்சிறிதுநாட்களுக்குள்ளே, குறைந்தது இரண்டுமூன்று லக்ஷம்ரூபாய் செலவோடு கும்பாபிஷேகத்தடன் முற்றுப்பெறலாமெனக் காண்கிறது. இந்தக் கலியின் கொடுமையினல் இப்பொழுது இந்த க்ஷேத்திரங்களிரண்டும், ஆதியிலிருந்த பெருமை குன்றி, பார்ப்பவர்கண்ணுக்குப் பரிதாபமாயிருக்கின்றனவெனினும், ஆதியிலிருந்தபடியே எல்லாப்பெருமையையும் இன்னுஞ் சிறிதுகாலத்திற்குள்ளேயே பெற்றுக் கண்டோர் கேட்டோர் எல்லோராலுங் கொண்டாடப்படும்படியாகுமென்று காண்கின்றது.

இங்குள்ள பூமியெல்லாம் சிறந்த வளப்பமுற்றிருக்கின்றமையால், சிறிதுகாணி பூமியையுடையவர்களும், தங்கள்தங்கள் கைப்பாட்டினுல் அன்னவஸ்திரத்திற்குக் குறைவின்றிச் சம்பாதித்துச் சுகமாய் வாழ்ந்திருக்கிறுர்கள். இந்த க்ஷேத்திரங்களின் தெற்கே காவேரியென்னும் பொன்னிமாநதியும், அருகே ஸாவித்திரிநதியும், சற்றுவடக்கே (பல்குனி) பங்குனி நதியும் ஆகிய இம்மூன்று நதிகளுமிருக்கின்றன. இவற்றுள் பிற்கூறிய இரண்டு புண்ணியநதிகளும் இந்த ஸ்தலங்களின் அருகே காவிரியாற்றில் வந்து ஸங்கமமாகின்றதனுல், இந்த இரண்டு க்ஷேத்திரங்களையும் ஒவ்ருவப்பாவித்து பிரேமபுரிதிருமுக்கூடல் என்று பொதுப்படச்சொல்லுகிறுர்கள்.

சின்னாட்களுக்குமுன்னே தஞ்சைமாநகரிலிருந்த சரபோஜி மகாராஜாவானவர், தாம் காசியாத்திரை செய்துவிட்டுத் திரும்பிவருகையில் இந்தத் தக்ஷிணகாசியில் தமது பிதிருக்களை யுத்தேசித்து சிரார்த்தஞ்செய்ததுமுண்டு. முற்காலத்திலுள்ளோர், இக்காலத்தவரைப்போல வீணே சைவம் வைஷ்ணவமென்ற பேதம் பாராட்டி எப்போதும் எலியும் பூனையுமாய்ச் சண்டையிடுவதுபோல இருந்திராரென்பதற்கு இங்குள்ள மண்டூகபுஷ்கரணியானது இவ்விரண்டு ஆலயங்களுக்கும் பொதுவாயிருப்பதே சிறந்த சான்றாகும். இவ்வாறே அன்பில் (பிரேமபுரி) யென்னும் பேர் இவ்விரண்டிற்குமே பொதுவாக இடப்பட்டிருக்கின்றதையுங் காண்கலாம்.

சில நாட்களுக்குமுன்னே கீழன்பில் சிவாலயத்திலிருந்த சிலாசாசனங்கள் பலவற்றுள் எடுக்கக்கூடிய சிலவற்றைமட்டும் எடுத்துப் பார்த்தில், இது நெடுங்காலமாகவுள்ளதென்றே நிச்சயமாகக் காணலாம். கிறிஸ்துப் பிறந்த 1070-வது வருஷத்தில் அரசாண்ட இராஜகேசரிபரன், குலோத்துங்கச்சோழதேவன் மேலன்பில் சுந்தரராஜப்பெருமாளுக்குக் காணி பூமிகளை விட்டதாக அங்குள்ள சிலாசாசனங்களுள் ஒன்றினால் அறியலாம். 1063—75 இந்த வருஷங்களுக்கிடையே அரசாண்ட வீரராஜேந்திரனென்பவனும் சுந்தரராஜப்பெருமாள் ஆலயத்திருப்பணிசெய்ததாகவுந் தெரியவருகின்றது. 1224-வது வருஷத்தில் துங்கபத்திரைநதிதீரத்திலுள்ள விஜயநகரத்தில் அரசாண்டு மிகுந்த கீர்த்திபெற்ற கிருஷ்ணராஜதேவராயர், அன்பில் சுந்தரராஜப்பெருமாளுக்கு பூமிதானஞ்செய்தாரென்று அங்குள்ளவோர் சிலாசாசனத்தால் தெரியவருகிறது இவர்கள்காலத்திலேதான் இராயகோபுரங்கள் திவ்யதேசங்கள் தோறுங் கட்டப்பட்டன. கீழன்பில் பிரேமபுரீசுவரருக்கு 1268-வது வருஷத்தில் அரசாண்ட பாண்டியராஜாவாகிய குலசேகரன் என்பவன் பூமிதானஞ்செய்திருக்கிறான். இவ்விரண்டு ஸ்தலங்களும் பாடல்பெற்றனவாதல்பற்றி, இவை இந்தச் சிலாசாசனங்களேற்பட்டகாலத்தக்குமுன்பே கட்டப்பட்டிருக்கவேண்டுமென்பதும் நிச்சயமேயாம். இப்பொழுது சிவன்கோயில் முற்றிலுமே பேர்த்துவிடப்பட்டிருப்பதனால், அதிலிருந்த சிலாசாசனங்கள் பெரும்பான்மையாய்ப் பெயர்த்து எழுதப்படாமலே போய்விட்டன. புதிதாகச் செட்டிமார்கள் இந்தக் கோயிலைக் கட்டுவதற்காரம்பித்து அந்தச்

சாசனங்கள் வெட்டப்பட்டிருந்த கற்களெல்லாம் மூலைக்குமூலை சிதருண்டுபோய்விட்டபடியால் இனிமேல் அவற்றைக் கண்டெடுத்துப் பொருந்தச்சேர்த்துவைத்து வரிசைப்படுத்திக் கல்வெட்டுகளை யெல்லாம் உள்ளபடி யெடுத்துச்சேர்ப்பது சிறிதும் ஸாத்தியமன்றே யாம்.

இந்த அன்பிலாலந்துறைக்கு நேர் தெற்கே வட திருக்காவிரியின் தென்கரையில் இருக்கிற கோயிலடிக்குச் சற்றுத் வடகிழக்கேயுள்ள 'சடையார்கோயி'லென்னும் சிவாலயமும் அதிக பழமையானது தான். அந்த ஆலயமானது மற்ற ஆலயங்களுக்கெல்லாம் முற்பட்டதென்பதை அதில இன்றைக்குமுள்ள புராதனமான சிலா சாசனங்களினுல் எளிதிலறிந்துகொள்ளலாம். "பொன்னித்தென்பால்" என்றிருக்கிறதினுல் கோயிலடி பொன்னியென்னும் காவிரியாற்றின் தென்கரையிலிருக்கிறதென்றும், அக்காலத்தில் இப்பொழுது அதன் தெற்கே செல்லுகின்ற காவிரி இல்லையென்றும், பின்பு அது தஞ்சாவூர் அரசர்களால் புதிதாக வெட்டப்பட்டிருக்கவேண்டுமென்றுங் காண்கிறது. கோயிலடியென்னும் திருப்பேர் நகரமும், அதனருகேயுள்ள சடையார்கோயிலும், இப்பொழுதும்வட திருக்காவேரியென்றவழங்கப்பட்டுவருகின்ற ஸ்வயமான பொன்னி என்னும் காவேரி நதியின் தென்கரையிலுள்ளன:— வைணவ ஆழ்வார்கள் பதின்மருள் முதல்வரும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கே ஆதிகுருவும், கலியுகமுண்டானபோது தோன்றியவருமான நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய பத்தாம்பத்து ஏட்டாவதுதிருவாய்மொழியானது அவ்வாழ்வாரால் திருமாலிருஞ்சோலைமலை எம்பெருமான் விஷயமாக ஆரம்பிக்கப்படுகையில், திருப்பேர் என்கிற கோயிலடி எம்பெருமான் அவரை அதற்குமேலே பாடவொட்டாமல் அவர் நெஞ்சினுட்புகுந்து தொண்டையை அடைத்துக் கொண்டு அவர் திருவாயால் தம்மைப்பாடும்படி ஆசைப்பட, அவரும் அவர் மகிமையைக்கண்டு அப்படியே பாடியருளிய தசகத்தின் முதற்பாட்டில் கோயிலடி அக்காலத்தில் திருக்காவேரியின் தென்கரையிலேதான் இருந்ததென்பது நிச்சயம்:—

"திருமா லிருஞ்சோலை மலையென்றேன் என்னத்
திருமால்வந் தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்

திருமா மணியுந்து புனல்பொன்னித் தென்பால்
திருமால் சென்றுசேர் விடம்தென் திருப்பேரே.
பேரே யுறைகின்ற பிரான் இன்று வந்து
பேரேனென் றென்னெஞ்சு நிறையப் புகுந்தான்
காரேழ் கடலேழ் மலையே ழுலகுண்டும்
ஆரா வயிற்றானை யடங்கப் பிடித்தேனே.
பிடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணிசாரேன்
மடித்தேன் மனைவாழ்க்கை யுள்நிற்பதோர் மாயையைக்
கொடிக்கோ புரமாடங் கள்சூழ் திருப்பேரான்
அடிச்சேர் வதெனக் கெளிதா யினவாறே."

திருவன்பிலில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமாள் வடிவழ கியநம்பி. தாயார் சுந்தரவல்லி யென்னும் அழகியவல்லி. தாரக விமானம், மண்டூகபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், போக சயனம், பிரம்மாவுக்கும் வால்மீகிமகரிஷிக்கும் பிரத்தியக்ஷம், திரு மழிசைப்பிரான் மங்களாசாசனம். இந்தத் திவ்யதேசம் மிகவும் ஏகாந்தமானது. முற்றந்துறந்த முனிவர்கள் தங்கி வசிப்பதற்கேற்ற இடம்.

இப்பொழுது இவ்வன்பில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்க ளால் அற்புதமாகக் கட்டப்படுகின்ற "சிவாலயத்தைப்போலப் பெரி தாகக்கட்டாவிட்டாலும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுள் வைணவத்தில் பற்றுள்ள அரியக்குடிபோன்ற இடங்களிலுள்ள தனி கர்களுள் யாரேனும் இந்த ஸன்னிதித் திருப்பணியைச் செய்யத் தொடங்கிச் சிறிது புதுப்பித்தாலன்றி, இங்குள்ள பெருமாள் சன் னிதியும், தாயார் சன்னிதியும், திருமடப்பள்ளியும், திருமதிலும் சீக் கிரத்தில்இடிந்தபோகும் ஸ்திதியிலிருக்கிறதைக்காணலாம். இல்லை யாயின் தர்மசிந்தையுள்ள வேறு இன்னும் யாரேனும் ஒன்றுசேர்ந்து இந்தக் கைங்கரியத்தைச்சீக்கிரத்தில் செய்துமுடிக்காவிடில், சன்னி திக்கே கெடுதியுமுண்டாவது நிச்சயமாதலால், பகவத்பக்தர்கள் எல்லோருமே தம்மாலியலுதவிபுரியின், இந்தக் கைங்கரியம் இறை வனருளால் எளிதில் முற்றுப்பெறலாமென்பதும் நிச்சயம். இந்தச் சன்னிதி ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்திற்கு உட்பட்டதாதலின், கைங் கரியத்திற்கென்று உபகரிக்க விரும்புவோர் அந்தத் தேவஸ்தானத் தின் மானேஜர்களுக்கும் எழுதிக் கேட்டுக்கொண்டு செய்யலாம்.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தார் இதற்கென்று பதினாயிரம் ரூபாய் செலவிட்டு இதைப்புதுப்பிப்பதும் அவர்களைப் பொறுத்தகடனே யாம். இந்த இரண்டு தேவாலயங்களுக்கென்று விடப்பட்டிருக்கிற பூமிகளெல்லாம் இப்பொழுது கேட்பவாற்றுக்கழுதைமேய்பாழாயும், தரிசைகளாகவும், நன்செய்கள்புன்சைசெலுங்கெட்டும், இருக்கின்ற தோப்புகள் கோயில்களுக்குச் சிறிதும் உபயோகப்படாமல் அநாதர வாயிருப்பதையும் யாருமே காணலாம்.

நெடுங்காலமாக எம்பெருமானுக்குத் தைலக்காப்பில்லாதிருந் தமையால் ஸ்ரீரங்கம் தேவஸ்தான மானேஜர்கள் அன்புகூர்ந்து ஸ்ரீரங்கநாதசுவாமிக்கு வருஷந்தோறும் ஜேஷ்டாபிஷேககாலத்தில் தைலம் சாத்துவதைப்போலவே, அந்த அளவின்படியே சென்ற குரோதிஹூ ஆவணிமீ 13உ வெள்ளிக்கிழமையன்று தைலக்காப்பு மட்டும் சாத்தினார்கள். இதற்கென்று ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தி லிருந்து தைலமெடுத்துக்கொடுக்கப்பட்டதுமன்றி வஸ்திரமுதலி யனவற்றையுங் கொடுத்தார்கள். அன்று விமரிசையாய்த் ததியாரா தனஞ்செய்யுங் கைங்கரியத்தையும் ஒருவர் தாமே செய்வதாகவும் ஒப்புக்கொண்டு அநேகம் பிராமணர்களுக்கு அதிஸம்பிரமமாகச் செய்தார். இதனைக் கீழன்பிலுக்குஞ் சரியாகக் கொண்டுவரவேண் டும்.

கீழன்பிலுள்ள பிரமபுரீசுவரரென்னும் சிவபெருமான் முன் னொருகாலத்தில் ஓர் அசுரனைச் சங்கரிக்கும்பொருட்டுத் தமது திருக்கரத்தினின்றும் மழுவை யெறிய, அம்மழு அதற்குக் காதவழி தூரத்துக்குக் கிழக்கே திருவையாற்றுக்கு எதிர்த்துறையில் வட திருக்காவிரிக் கரையோரமாயுள்ளதொரு ஸ்தலமளவுஞ் செல்ல, அதற்கு அக்காரணம்பற்றித் திருமழுவாடி யென்ற பெயர் இடப்பட் டிருக்கிறது. இப்படிக்கு அம்மழுவானது அவ்விடம்போய் விழுந் ததனால், அதற்கு 'சரபாதஸ்தலம்' என்று சொல்லுவது தகும். சிலர் இதனை மறந்து, அன்பில் என்பதற்கு (அம்பு + இல்) அம்புக்கு இருப்பிடம் 'அம்பில்' என்று மாறுபடக் கூறுவதுமுண்டு. இக்கா லத்தில் சாதாரணமாய் எல்லோருமே இதனை அம்பில் என்றே வழங்குகிறார்கள். "அம்பல்" என்னுமூர் தஞ்சை ஸமஸ்தானத்தி லுள்ள பாடல்பெற்ற ஓர் சிவக்ஷேத்திரம். திருக்குடந்தை, திரு வெஃகா, திருவெவ்வளூர், திருவரங்கம், திருப்பேரை என்கிற

கோயிலடி ஆகிய இவற்ரேடு திருமழிசைப்பிரான் பிரேமபுரியென்னும் அன்பிலேயுஞ் சேர்த்துப் பாடிய பாசுரத்தில் 'அன்பில்' என்றே பாடியிருக்கிருர்.

"நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடற்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனு வான்"

—நான்முகன் திருவந்தாதி 36-ம் பாட்டு.

மகாவித்துவானுகிய பிள்ளைப்பெருமாளய்யங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியிலும் அன்பில் விஷயமாய்ப் பாடியிருக்கிருர்.

"போற்றிசெய் வோர்குடைக்கீழ் பொன்னுடு மின்னுடும்
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை—தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர்"

அன்பில்விஷயமாகப் பெயர்பெற்ற சைவகுரவராகிய திருஜ்ஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகத்திலும் அன்பில் என்றே பாடியிருக்கிருர். திருவன்பில் திருப்பதியானது சோணுட்டில் தொன்றுதொட்டு மாப்பெருஞ்செல்வமுள்ள வளநகரென்பதற்கு மற்றுமோர் உதாரணமென்னவெனின், ஒருகாலத்தில் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் அன்பிலுக்குச்சென்றதில், அக்காலத்தில் அங்கிருந்த தாசியான சிலம்பியென்பாள், அவரால் தானுமோர் பாடல்பெறவிரும்பி அவரைக் கண்டு வணங்கித் தன்மீதோர் பாட்டைப் பாடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ள, அதற்கு அவர் தாம் பாடும் பாட்டொன்றக்கு ஆயிரம்பொன் பரிசாகக்கொடுத்தாலன்றிப் பாடமாட்டோமென்ன, அவள் தன்னிடம் ஐந்நூறுபொன்ருன் இருக்கிறதென்றும், அதற்குமட்டுமாவது பாதிப்பாட்டைப் பாடித்தரவேண்டுமென வருந்திக்கேட்க அவர்:—

"தண்ணீருங் காவேரி தார்வேந்தனுஞ் சோழன்
மண்ணுவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணுவாள்"—

என்று பாதிப்பாட்டைமட்டும் பாடிக்கொடுத்துவிட்டுச் சென்ருர். பின்பு வெகுநாட்கழித்து ஒருநாள் அவளது அதிர்ஷ்டவசத்தால், உலகம்புகழும் ஔவையார் அன்பிலுக்குச்சென்று அங்கே பட்டினியாயிருக்கையில், ஔவையின் பெருமையைச் 'சிறிதுமறியாதவளும்

தன்னிடமிருந்த பொருளையெல்லாங் கம்பரிடங் கொட்டிக்கொடுத்துவிட்டு வறுமையுற்றிருந்தவளுமான அந்தச் சிலம்பி யென்னும் தாசி எப்பொழுதுமே இயல்பாக யாரிடத்தும் அன்பு உடையவளாதலின், தனது பிறவிக்குணமாகிய ஈகைத்தன்மையால் கட்டுண்டு அவளது பசியினை யாற்றவிக்குமாறு நகைமுகங்கொண்டு அவளுக்குச் சிறிது கூழை வார்க்கவே, அவளும் அதனால் தன் பசியை யாற்றிக் கருணைகூர்ந்து, அவளுடைய வீட்டின் சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்த அரைப்பாட்டைக் கண்டானந்தங்கொண்டு, அதனோடு:—

"அன்பிற் சிலம்பி யாவிந்தத் தாளடியாள்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று தான் மறுபாதியைப் பாடி அந்தப் பாடலைப் பூர்த்திசெய்தாள். இக்காரணம்பற்றித்தான் ஔவையாருக்குக் கூழுக்குப்பாடினவளென்னுங் காரணப்பேரொன்று அன்றுதொட்டு எங்கும் வழங்கத் தலைப்பட்டது

இவ்வாறாகப் பிரேமபுரி யென்னும் அன்பில் க்ஷேத்திரம், ஸ்ரீயப்பதியினாலும், உமாபதியினாலும் ஒன்றுசேர்ந்து நித்தியவாஸஞ்செய்யப்படுகின்றதும், பண்டைக்காலத்துப் பக்தர்களைப் புனிதமாக்கினதுமான மூதூர் என்பதற்கு இதுபோன்ற இன்னும் பல காரணங்களுமுள.

எல்லோரும் இதற்கு அம்பிலென்று பெயர்வழங்குவதுசரியான மொழியன்று. இப்பொழுது புதிதாக அன்பிலில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தபாலாபீசின் முத்திரைகளிலும் அம்பில் என்று முத்திரித்திருப்பதுங் குற்றமேயாம். அம்பல் என்பது தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள ஓர் சிவஸ்தலம். இதுவும் பாடல்பெற்ற 1008 சிவாலயங்களுள் ஒன்று. ஆதலினால் இதை ஆதிகாலந்தொட்டு ஸ்தலபுராணங்களிலும், சிலாசாசனங்களிலும், பதிகமுதலிய பல பாடல்களிலுமிருக்கிறபடி அந்தப் பழைய அன்பில் என்று உள்ளபடி மாற்றி வழங்குவதே நியாயமாகும். சோழன்மார்களைச்சேர்ந்த ஸந்ததியார்கள் பலர் இன்னும் இந்த இடத்தை விட்டுவிடாமலே இங்கேதானே இருந்துகொண்டு, கஸ்தூரிவைத்த செப்புப்போல ஒருவாறு மணங்கெடாமல் சுகமாகக் காலக்ஷேபஞ் செய்துகொண்டுவருகிறதையும் நாம் காணலாம்.

தெற்குப்பந்தடித்தான்பள்ளி, வடக்குப்பந்தடித்தான்பள்ளி, அரண்மனைமேடு, யானைகோந்திமேடு, கோட்டைமேடு, ஜங்கமராஜபுரம், மங்கம்மாள்புரம், இராமாநுஜகூடம், ஸப்தரிஷிநாதன் பட்டவர்த்தி, கோட்டைமேடு, மும்முடிசோழமங்கலம் என்று அந்தந்த ஸ்தானத்திலேயிருந்த மன்னற்கேற்றபடியான வேறு வேறு அழகான பேர்களையுடைய இடங்களிங்கேயிருக்கின்றதை இன்னமும் பார்க்கலாம். அன்றியும் அன்பிலைச்சுற்றி நெடுந்தூரமளவும் அழகான பெரிய செங்கற்கட்டுக்கிணறுகள் பல பூமிக்குள்ளே இரண்டுமூன்று அடி ஆழத்திற்குள்ளேயிருந்து அடிக்கடி உழுபவர் உழுபடையில் தட்டுப்பட்டு வெட்டியெடுக்கப்பட்டுக்கொண்டே வருகிறதனாலும், நெடுங்காலமாக வழங்கப்பட்டுத்தேய்ந்திருக்கின்ற அம்மிகுழவி முதலிய வீடுகளில் வழங்கப்படும் பண்டங்களும், பாத்திரங்களும் அவற்றுளிருந்து கண்டெடுக்கப்படுவதனாலும், முற்காலத்தில் இது ஒரு பெரிதான இராஜதானியாகவேனும், அன்றேல் பெரிதான பட்டணமாகவேனும் இருந்திருக்கவேண்டுமென்றே நிச்சயிக்கும்படியாகவுமாகின்றது.

பாடல்பெற்ற ஸ்தலங்களுள், பதிகம் பாடப்பெற்ற ஸ்தலங்களுக்குப் பாடல்பெற்ற ஸ்தலங்களென்றும், அன்பில் விஷ்ணு ஸ்தலத்தைப்போலத் தனியே அதன் பெயர்மட்டும் ஒருபாட்டிற்குள்ளே ஒட்டி வந்திருப்பதற்கு வைப்புஸ்தலமென்றும் பெயர். இவ்வாறு பார்ப்பின், கீழன்பில் ஸ்தலத்தைப்பற்றி, அப்பர், ஸுந்தரர், திருஞானஸம்பந்தர் என்னும் பதிகம்பாடிய சைவகுரவர் மூவருள் இருவரால் இது பாடப்பெற்றது.

திருஞானஸம்பந்தமூர்த்திகள்.

"கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
விணையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணைமாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. 1.

சடையார்சதிரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைகிள்ளை
யடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. 2.

ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே." 3.

என்றும்,

திருநாவுக்கரசுஸ்வாமிகள்.

"வானஞ்சேர்மதிசூடியமைந்தனை
நீநெஞ்சேகெடுவாய்நினைகிற்கிலை;
யானஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனஞ்செல்வனைக்கூறிடக்கிற்றியே. 1.

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளனா
ராரணப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானொருநம்பியே. 2.

அன்பினானஞ்சமைந்துடனாடிய
வென்பிலானையுரித்துக்களைந்தவ
னன்பிலானையம்மானையள்ளூறிய
வன்பினானினைந்தாரறிந்தார்களே." 3.

என்றுந்தொடங்கிப் பாடியிருக்கிறார்கள்.

மேலன்பில் ஸுந்தரராஜப்பெருமாள்கோயில் மூலஸ்தானத்தின் பின்புறம் மதிளில் வெட்டப்பட்டிருக்கிற சாசனமானது கி. பி 1063-ம் வருஷத்துக்கும் 1075-ம் வருஷத்துக்கும் இடையே ஆண்ட முதலாவது சோழனான வீரராஜேந்திரன்காலத்தில் என்றிருப்பதனாலும், அக்காலத்தில் அரசர்களுக்குள்ள வழக்கப்படி வித்துவான்களால் பாடப்பெற்ற அவ்வவ்வரசனின் மெய்க்கீர்த்தியினுள் 'திருவளர்' என்று தொடங்கிவருவது அவ்வரசனுக்குரியதாதலாலும், அவன்காலத்திலே அக்கோயிலில் முதலிலே அந்தச் சிலாசாசனமெழுதப்பட்டதாகவேண்டும். மெய்க்கீர்த்தியென்றால், இன்னதென்று யார்க்குமெளிதிற்புலப்படுமாறு அந்தந்த அரசனின்பெருமையையெல்லாம் யாரும் அறியும்படி விரித்துக்காட்டப்பட்டிருப்பது என்பதற்கு அதன் முதலிலுள்ள சிறிது அடிகளை மட்டும் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது:—

வீரராஜேந்திரதேவன்.

"திருவளர் திரள்புயத் திருநில வலையந்
தன்மணிப் பூணெனத் தாங்கப் பன்மணிக்
கொற்றவெண் குடைநிழல் குவலயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி மற்றுள
வறைசூழ லரையர்த னடிநிழ லொதுங்க
வுறைபிலத் துடைகலி ஒதுங்க முறைசெய்து
விரைமலர்த் தெரியல் விக்கலன் றன்னொடு
வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக்
கங்க பாடிக் களத்திடை நின்றுந்
துங்கபத் திரிபுகத் துரத்தி யாங்கவர்
வேங்கைநன் னாட்டிடை மீட்டுமவர் விட்ட
தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்
செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ
னொருமக ளாகிய இருகையன் றேவி
நாகலை யென்னுந் தோகையஞ் சாயலை
முகத்தொடு மூக்குவே றாக்கிப் பகைத்தெதிர்
மூன்றாம் விசையினு மேன்றெதிர் பொருது
பரிபவந் தீர்வனஎனக் கருதிப் பொருபுனல்
கூடல் சங்கமத் தாகவ மல்லன்
மக்க ளாகிய விக்கலன் சிங்கண
னென்றிவர் தம்மொடு மெண்ணில்சா மந்தரை"

இந்த முதல் சாசனத்தின் துவக்கத்தில்,

"அன்ன வயல்சூழ் அன்பிவர்கள் நீடி யழகெய்தி
முப்பொழுதங் கண்டு போற்ற
மன்னு மழகிய பெருமாள் இளையகோவை மலர்மகளை
மாருதியை யெழுந்தருளுவித் தோங்
கன்னைய குடைத் தடக்கைப்பட் டாணதிதி காண்டகுசீர்க்
கிளைதாங்கிக் கலைகள் ஓதிச்
செந்நெல் வயல்சூழ் வீரசிங்கம் எங்கள் சீர்க்குருகூர்
நம்பியெனுஞ் செழுமறையோன் தானே."

என்றதனுள், "அழகியபெருமாள்", "இளையகோவை", "மலர்மகளை" "மாருதியை" என்றிருப்பதைக் காண்கையில், இக்கோயில் ஸ்ரீராம பிரானுக்குரியதென்று நிச்சயிக்கவேண்டும். ஆனால், இங்கேயுள்ள விக்கிரகங்களெல்லாம் வேறாகவிருக்கின்றன. சற்று ஊன்றிப்பார்ப்பின், அன்பிலுக்கும், கீழன்பிலுக்கும் சுமார் மூன்றுமயில் கிழக்கே காவிரிக்கரையோரமாகவுள்ள 'நத்தம்' என்னும் சிற்றூரிலுள்ள புராதனமான ஆலயத்தில் இந்த விக்கிரகங்கள் நான்கும் அழகாய் அமைத்துவைக்கப்பட்டிருப்பதைக் காண்கையில், இவைதாம் அவையோவென்று ஐயுறும்படியாகின்றது. அங்குள்ள கள்ளஜாதியார் இந்தக் கோயிலைக், கண்ணை யிமைகாப்பதுபோல் நெடுங்காலமாகக் காப்பாற்றிவருகிறார்கள். இதன் உண்மை நன்கு புலப்படவில்லை. அங்குள்ள சிலாசாசனங்களைப்பார்த்தால் என்னாகுமோவென்று இன்னுந் தெரியவில்லை. ஒருவேளை அன்பிலில் ஆதியிலே ஏற்பட்டிருந்த விக்கிரகங்கள் நத்தத்திற்குக் கொண்டுபோகப்பட்டிருப்பினுமிருக்கலாம்.

ஸுந்தரராஜப்பெருமாள் மண்டபத்தின் வடவண்டைச் சுவரிலுள்ளது சகாப்தம் ஆண்டு 4408. (1446)ல் எழுதப்பட்டது. அது ஸாளுவமகாராஜா ஆண்டகாலம். அப்பொழுது பிர்ம்மதேசம் அன்பில் ஜலசயனப்பெருமாளுக்கு ஸ்ரீஜயந்தி புண்ணியகாலத்திலே திருவிடையாட்டமாக சந்திராதித்தியர்வரையும், செய்யாமங்கலம் எல்லைவரையில, பார்க்கவகோத்திரம், ஜயிமினிஸூத்திரம் புன்னமங்கை அருளாளபட்டர் ஸர்வமானியஞ் செய்திருக்கிறாரென்று கண்டிருக்கிறது. இதுதான், ராயர் அப்பாச்சி ஆண்ட காலம்; (1445).

கோடி கன்னிகாதானம் தாதாசாரியர் இந்த ராஜவம்சத்தாருக்குக் குருவாகவிருந்தார்கள். இவர்களுள் அநேகர் வெகுகாலமளவும் அன்பிலிலுள்ள துறையூர் ஜமீன்தாரின் ஸத்திரத்திலே வாழ்ந்திருந்தவர்கள். இவர்களுடைய குடும்பத்தில் முதற்பிறந்தவர்களுக்கு ஸுந்தராசாரியரென்று பேரிடுவது வழக்கம். இன்றைக்கும் இவர்களுக்கு அங்கே தங்கள் சிஷ்யராயிருந்த துரையூர் ஜமீன்தாரால் விடப்பட்டிருக்கிற மானியமுண்டு. விஜயநகரத்து அரசர்களுக்குப் பிறந்தகமாயிருக்கும் யானைக்குந்தி அரசர்கள் இன்றைக்கும் தாதாசாரியர்களின் சிஷ்யரேயாம். அன்பிலுக்கு நேர்மேற்கே மூன்று

மயில் தூரத்தில் ரஸ்தாவின்மேலிருக்கிறது மணக்கால் கிராமம். இது விசிஷ்டாத்வைத ஆசாரியர்களுள் ஏழாவதான மணக்கால் நம்பிகளின் அவதாரஸ்தலம்:—

"என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம்புக்கி
யானடைவே யவர்குருக்க ளிரைவணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரைமுன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின்றேனே."

இதேகாலத்தில் அன்பில் பெருங்குறி மகாஸபையோர், திருவாலந்துறையுடைய நாயனருக்குவிட்ட நிலத்தின் ஓர் பகுதியின் நான்கெல்லையைக்காண்க:—மதுராந்தகவதிக்குக் கிழக்கு, முதற்கண்ணாறு முதற்சதிரத்துச் சங்கரன் சந்திரசேகரபட்டன் நிலமான தெங்கஞ்செய் இதற்குக் கீழெல்லை, ஆவேணி அங்கிச்சிராவபட்டன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை, இராஜேந்திர வாய்க்காலுக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை, ஆவேணி அங்கிசிராகவபட்டன் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை, உடையார் திருமாலினது உடைய நாயனர் தேவதானத்துக்கும் திருவுடையார் நிலத்துக்கும் தெற்கும், இசைந்த பெருநான்கெல்லை நடுவுப்பட்ட நிலம் இரண்டுமா; இந்த இரண்டுமாவும்."

1689-வது வருஷமுதல் 1704-வது வருஷம்வரையிலும் பதினைந்து வருஷகாலம் தென்னிந்தியாவில் செங்கோல் செலுத்தி உத்தமியென்று பெயர்பெற்ற மங்கம்மாள் யென்பவள் செய்திருக்கிற சாசுவதமான தருமங்களை யாருமே கேட்டிருக்கலாம்.

இந்த உத்தமியானவள் தானரசாண்டகாலத்தில் காசிமாநகரத்திலிருந்து இராமேசுவரம் வரையிலும் நிலையான மார்க்கமொன்றைச்செய்வித்து, அதன் இடையிடையே யாத்திரை செய்பவரின் நன்மைக்கென்று பல அன்னசத்திரங்களையுங் கட்டுவித்தாள். அன்றியும் பற்பல ஆலயங்களையுங் கட்டுவித்தாள். பல அக்கிரகாரங்களையுங்கட்டிப் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து, அவற்றோடு

அவர்களுக்குப் பூமிதானமுஞ் செய்தாள். இந்த அரசி அன்பிலில் சிலகாலம் வசித்தாளென்பதற்கு இவள் அவ்வூரிலிருந்து காவிரியாற்றுக்கு நீராடப்போகும் வழிக்கு இன்றைக்கும் மங்கமமாள்வெட்டி என்ற பெயர் வழங்கப்படுவதையுங் காணலாம். இந்த அரசியாரால் எந்தைதந்தை, தந்தைதந்தை, தந்தைக்கு மூத்த தந்தையாகிய ஸ்ரீமான் த்விவேதி இராஜகோபால தீக்ஷிதருக்கும், அவ்வாறே மாத்துவர்களுக்கும் ஸ்மார்த்தர்களுக்கும் பொதுவாகச் சிறிதும் பக்ஷபாதமின்றி, ஓர் ஸ்மார்த்தருக்கும் ஓர் மாத்துவருக்கும் ஆக இப்படி திரிமதஸ்தருக்கும் பொதுவாகத் தானஞ்செய்யப்பட்ட மங்கம்மாள்புரமென்னும் பெரியகிராமமும் இதனோடு ஒட்டினாற்போலச் சேர்ந்திருக்கிறது. முற்காலத்தில் அரங்கமாநகருக்குள் ஒருவருமே குடியிருந்ததில்லை. பின்பு காலக்கிரமத்தில் கோயிலைக் காப்பதற்கெனறே நல்லோர்கள் பலர் அதனுள்ளே சென்று குடியிருக்கத் தலைப்பட்டார்கள். அதற்குமுன்னெல்லாம் அதனையடுத்த, வடக்குத் திருவீதி, தெற்குத்திருவீதி, கீதாபுரம், வீரேசுவரம், மேலூர், ஸ்ரீரங்கராஜபுரம், காம்பனூர், (பிக்ஷாண்டார்கோவில்), முதலான கிராமங்களிலிருந்தார்கள். எங்கள் பெரியோர்கள் மங்கம்மாள் ராணி அரசாண்டகாலத்தில் வீரேசுவரத்திலிருந்தார்கள். இவையனைத்தும் உண்மையென்று காட்டுவதற்குமுன்னே, இவ்வூரில சேரர் சோழர் முதலானோரைச்சேர்ந்தவர்களில், சோழர், பல்லவர், தேவர், களத்தில்வென்றார், பல்லவராயன், நாயக்கர்மார், படையாச்சி, அங்கராயர் ஆகிய எல்லோருமே பல்கிப்பெருகி ஒற்றுமையாய் இன்றைக்கும் வாழ்ந்திருக்கிறதையுங் காணலாம்.

அன்பிலிலுள்ள மாரியம்மன்கோயிலானது சோழநாட்டிலுள்ள மற்றெல்லா மாரியம்மன்கோயில்களுக்கும் முற்பட்டதென்பதற்கு அங்கே பூச்சொரிந்து திருநாள் நடந்தபின்னரே சமயபுரம் மாரியம்மனுக்குத் திருவிழாத் தொடங்கிவருவதே போதுமானது. இந்த மாரியம்மன்கோயில் திருவிழா ஐம்பது வருஷங்களுக்குமுன்னே நான் சிறுவனயிருந்தபோது பார்த்தது முற்றுமே வேறு; அக்காலத்தில், இளங்காடு, துவாகுடி, கிளியூர், மேட்டுப்பட்டி முதலான பதினெட்டுப் பட்டிக்கள்ளர்களும் அந்தக்கோயின் குடிகளாதல்பற்றி அந்த ஊர்முழுமையும் ஒன்றுசேர்ந்து கொம்பு தப்பட்டைகளின் பேரொலி முழங்க கத்தியுங் கேடயமுமேந்தித் தடியுங்கையுமாகச்

செல்லுகையில் பார்த்தால் பார்ப்பதற்கே அச்சமாயிருக்கும். கோயில் வலம் வருமுறைகளில் வழக்கத்துக்கு விரோதமாய் ஏதேனும் சிறிது மாறின் உடனே அது அமர்க்களமாய்ப் பிணக்காடாய் ரக்த வெள்ளமாய்ப் பனங்காய்கள்போலத் தலைகள் வெட்டுண்டு கீழே புரளுவதுமுண்டு. இப்பொழுதும் இந்த அமளி அடங்கினபாடில்லை, ஆதலால் போலீஸாரும், மாஜிஸ்திரேட்டாரும் உற்சவகாலங்களில் ஆயுதபாணிகளாய் ஸர்வஜாக்கிரதையாயிருப்பதைக் காணலாம்.

அன்பில் ஏழூர் சேர்ந்ததாதல்பற்றி இவ்வேழூர்களுக்கும் கிராம தேவதை ஒன்றேயாம். "ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை யோட்டிவிட்டது" என்றபழமொழி இவ்வூரிலேதான் பிறந்தது. ஆதியில் அன்பிலிலிருந்தது ஊமைப்பிடாரி; அது இப்பொழுதுகேட்பாரற்றுக் கீழன்பில் மாரியம்மன்கோயிலினருகே ஓர் மரத்தடி நிழலின் கீழ் நிற்க நிழலுமற்றுத் தள்ளுண்டு கிடக்கிறது:—ஓர் காலவிசேஷத்தில் காவேரியாற்றில் பெரிதான பிரவாகமொன்று வர, அதில் முன் திருவாசியிலிருந்த அம்மன், தன் கோயில் இருந்தவிடந்தெரியாமல் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோகப்பட்டுக் குளிரக்குளிரத் தானும் கட்டைபோல மிதந்துவந்து அன்பில் அம்மனிடம் அடைக்கலம்புக, அது அன்பிலுள்ளதாதலால் அன்புகூர்ந்து, அதற்கு இடங்கொடுக்கப்போக, வந்த பிடாரியாகிய ஆச்சிராமவல்லி அதனை அப்படி ஓட்டிவிட்டதென்று அங்குள்ளோர் கர்ணபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது ரஸ்தாவின் தென்புறமாயிருக்கிற பெரிதான பனந்தோப்பிற்குள்ளே யிருக்கிறது. மண்ணச்சநல்லூர் எண்ணெய்வாணியர்முதலான பலர் இதன் குடிகள். சிறிது காலத்துக்குமுன்னே லக்ஷம்ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டு இதற்கென்று அழகான ஓர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு பூஸ்திதியும் அவர்களால் வாங்கிவிடப்பட்டிருக்கிறது.

இங்குள்ள சிவலிங்கம், ருத்திராக்ஷத் திருமேனி; கண்ணிற்குப் புலப்படாத துவாரங்கள் இதில் எண்ணிறந்தன. நுண்ணிய ஈர்க்குகளை நுழைத்தால் எளிதில் உள்ளே சென்று மறையும். காசியிலிருப்பதுபோலவே, விச்வேசர், பிந்துமாதவர், டுண்டிவிநாயகர், தண்டபாணி, பைரவர், ஆகிய எல்லாருமிருக்கிறார்கள். இங்குள்ள வடவிருக்ஷத்தில் விழுது விடாதிருப்பது ஆச்சரியம்.

அன்பில் ஸ்ரீவேங்கடாசாரியர்.

ஸ்ரீ

ஸீதாகல்யாணம்.

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலை பெறுத்தலு நீக்கலு நீங்கலா
வலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவரன் னவர்க்கே சரணாங்களே.

சென்னை-60

உலகில் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியெடுத்துளார் தாமுய்யவேண்டின் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பயன்களையும் முறைப்படி கொண்டு பின் அவற்றின் பயனாய் இலக்கணவரம்பற்றதாய் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய் உள்ளதோர் அந்தமில் பேரின்பத்தழிவில் வீட்டையடைய முயல்வது அவசியம். அம்முயற்சி பல்லாற்றானும் பக்தியே சிறப்புடைத்து.

பக்தியென்பது ஆதியஞ்சோதியினிடத்தில் தன்னை முற்றும் அடிமைப்படுத்துவதோர் பேரன்பு. ஒருவன் மற்றொருவனுக்கு அடிமைப்படுவதெனின், தன்னினும் அவனிடம் ஒரு ஏற்றங்கண்டாலன்றி அவ்வடிமைத்தனம் நிகழாது. தான் தனக்கு சுவாமியாவானது செல்வம், வீரம், கீர்த்தி முதலவாய உயர்குணங்களை யளந்தபின்னரே யடிமை செய்ய எத்தனிப்பன். சாதாரண மனிதரிடம் மேற்கண்ட குணங்களை வெகு விரைவில் கணக்கிடலாகும். ஏனெனில், மனிதர் அழியுந்தன்மைத்தான பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டானவராதலின் என்க. பின்னை, அப்பூதங்களையும் தாநினைத்தபடி நடத்தவல்ல பெருந்தகையின் பலவாய குணங்களையறிதல் அருமையே. அவரது குணங்களை யொருவாறு விளக்கவல்லது வேதமே. அவ்வேதமும், தன் நாமகுணங்களை யுலகத்தார் அறிந்துய்ய விரும்பிய அப்பரஞ்சோதியால் அருமையின் ஓதப்பட்டதென்ப. அதனாலே தான் வேதத்தினுக்கு மேற்கோள் ஒன்றில்லையென்பர்.

இதனால் வேதத்தை நன்கு ஓதினோர் பரம்பொருளின் உண்மையைத் தெரிவார் என்பது பெறப்பட்டது. அம்மறையும் இரண்டு பிரிவினையுடையதாய், முதலாவதான கன்மகாண்டத்தில் ஆதியை யடைவதற்குரித்தான மார்க்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்மார்க்கங்களாவன கர்மபக்தியோகங்கள். பிரிதொன்றான பிரமகாண்டத்திலோ பரப்பிரம்மத்தின் உண்மையனைத்தும் பரக்க உபந்நியஸிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த வேதத்தினுட்பொருளை நன்கோதியுணர்ந்த வியாஸர்முதல பெரியார், தமக்குப்பின் வருவீர் மறைப்பொருளைப் படித்தறிவது அசாத்தியமெனத்தேர்ந்து அப்பொருளை இதிஹாஸபுராணங்களுள்

நுழைத்து விளங்கச்செய்தனர். அவற்றுள் இதிஹாஸம் பரம்பொருளின் உண்மையை நன்னர் ஓதி வருவதால் மற்றென்றினும் மேம்பட்டதாகும். இதிஹாஸங்களாவன இராமாயண பாரதங்கள். இவ்விரண்டுமவேதத்தின் மறு பிறப்பென்றே பெரியார் கூறியுள்ளார். இவ்விரண்டினும் இராமாயணம் அருட்பெருவள்ளலின் அளவிலாத் திரு விளையாட்டினையே முற்றும் ஓதுவதால் பாரதத்தினும் மேம்பட்டதென்ப.

அழிவிலா மறையை இராமாயணம் அகப்பாகுபாட்டானும் புறப்பாகுபாட்டானும் ஒத்திருக்கும் என்ப. என்னை? வேதமும் காண்டங்களேழான் நிரம்பியது. இராமாயணமும் அங்ஙனமே. வேதம் தனது ஸாரதமமான காயத்திரி என்னும் மகாமந்திரத்தால் சூரியனைச் சொல்வதுபோல் சூர்யமண்டல மத்தியவர்த்தியான நாராயணனைப் போற்றுகிறது. இராமாயணமும் சூரியகுலத்தரசரைப் புகழ்வதுபோல் அப்பெருங்குலத்தவதரித்த நாராயணனையே பிரதிபாதிக்கின்றது.

இவற்றால் ஆத்மோஜ்ஜீவனமார்க்கம் பக்தியென்றும், அந்த பக்தியும் ஒப்புயர்வில்லா நற்பெருஞ் சுடரினிடத்தே வைக்கற்பாலதென்றும், அச்சுடரின் குணங்கள் வேதத்தானறியப்படுமென்றும், வேதப்பொருளையறிய வகையற்றார்க்கு அவ்வேதத்தின் உண்மைப்பொருளை யுட்கொண்டு போதிப்பதாகிய இராமாயணமே பகவத்குணங்களை யறியத்தக்க நூலென்றும் அறியப்பெற்றாம்.

இராமாயணத்தை இராமனுடைய கதை என்று குறிப்பதுமன்றிச் "சிறையிருந்தவளேற்றஞ்சொல்வது" என்றும் ஒரு சாரார் கூறுப. கிணற்றில் தவறி வீழ்ந்த குழந்தைக்காகப் பரிந்து உடன்குதித்து அக்குழந்தையைக் கரையேற்றும் நற்றாய்போல்வாளாதலின், அவள் பெயர்கொண்

டு நிலவுவதே இராமாயணத்துக்கு ஒப்பற்ற சிறப்புமாகும். அன்றியும் அருட்பெருவள்ளலுக்கு, "அடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்று சேதனரிடம் வெறுப்புத்தோன்றுவண்ணம் அவரது குணக்கேடு செயற்கேடுகளையும் பொறுக்கச் செய்பவளாதலானும் ஆம்.

இங்ஙனம் சீதாராமர்களின் அரியபெருஞ் செயல்களையோதிவரும் இராமாயணத்துள், அவ்விருபேரது முதற்சேர்க்கையைப் புலப்படுத்துகிற பாலகாண்டமே பக்தி செய்வதற்குச் சிறப்பமைந்தது. என்னெனின் இரவலனொருவன் தான் ஒன்று பெறுவதற்குச் செல்வனது களிப்புக்காலத்தையே விரும்புவானன்றே? களிப்பின்மிக்கது விவாஹ காலமேயாதலின் என்க.

இப்படி இராமாயணப் பெருமை விரிக்கப்பெருகுமாதலின் இம்மட்டோடு நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்துட்புகுவாம்.

அரக்கர் ஆற்றுந்துயர் பொறாத அமரருக்காக ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்து இவ்விருள் தருமாஞாலத்துத் தயரதன் பெருமதலையாய் அவதரித்த இராமன் அரியநான்மறைகள்போல தமது இளைஞரோடு முப்புரிநூலணிந்து வேதம் முதலிய அருங்கலைகள் கற்று கதிரவன்தன்குலத்திற்கோர் விளக்காய் விளங்கினர்.

அறுபதினுயிரமியாண்டு அருந்தவஞ்செய்து அரிய குலக்கோமக்களைப் பெற்றதயரதன் ஓருடம்பு ஈருடம்பாய்ப்பூரித்துத் தனது அரசியலை நன்கு நடாத்திவருங்கால், அமரர் குலத்து அருந்துயர் நீக்குவான் எண்ணி அருந்தவத்துக் கௌசிகஞ்ராங்குத் தோன்றி மன்னனிடம் வாதாடி இராமவிலக்குவரைத் தன்னுச்சிரமத்திற்கழைத்தேகினர்.

தந்தையினது ஏவலால் முனியைப் பின்பற்றிய அரசிளங்குமரர், அவரால் நல்ல கதைகள் ஓதக்கேட்டு, அருந்

தவத்தர்க்கு அல்லல்புரியும் அல்நிறத் தாடகையை யருஞ் சமரிற்கொன்று, அவளது தனையருளொருவனைக் கொன்றும் ஒருவனை வென்றும் மாமுனி வேள்வியைக் காத்து, அவரோடு மிதிலைக்குப் பயணப்பட்டு வழியில், அமரேசனுல் கற்பழிந்துக் கல்லுருவமைந்திருந்த அகலியைக்குப் பொன்னுருவாம் பெண்ணுரு கொடுத்து, மிதிலாபுரியின் மதிலைக்கடந்துட் புகுந்தனர்.

மிதிலைக்கு மன்னனுன ஜனகன் மக்கட்பேறிலனுய் மலங்கிமாமுனிவரோடு கலந்து உசாவி, அக்குறை நீப்பான் ஒரு வேள்வி தொடங்குவதன் நிமித்தம் நிலத்தையுழுதுவர, தன் பொற்கலப்பையின் உழவுசாலின் அகப்பட்டவோர் பெட்டகத்துள் அழகே உருவெடுத்ததோர் அருங்குழவியிருக்கக் கண்டுத் தன்காரியம் கைகூடிற்றென்று, பகவானுல் தனக்களிக்கப்பெற்ற தந்தைதாயில்லா விந்தை நற்சேயைச் சொந்தமகவெனப் புத்தியிற்கொண்டு பரிவொடு ஏந்தி, அது பெண்ணுருவமைந்திருந்ததானும் உழவுசாலில் அகப்பட்ட பெருமையானும் சீதா என்று நாமமளித்து நன்கு வளர்த்தான்.

பின்னர் தனக்கே பிறந்த ஊர்மிளை என்னும் பெண்மணியோடும் தன்னுடன்பிறந்தான் குசத்துவசன் மகளிரான மாண்டவி, சுருதகீர்த்தி எனும் இரு பெண்சிறுரோடும் மற்றும் சில தோழியரோடும், தன் மாமகள் சீதை மன்னி விளையாட மகிழ்ந்திருந்தான்.

இவ்வரசன் அகத்தில் பழங்காலத்ததாம் பெருவில் ஒன்றுண்டு. அஃது ஆதியில் சிவபிரானுல் எடுத்தாளப்பட்டது. அதனுனே யதற்குத் திரியம்பகமென்றும் பேர் உண்டு. அவ்வில் ஆதியில் மிதிலைக்கிறையான தேவராதனுக்கு அளிக்கப்பட்டு அன்றுமுதல் எடுத்தாள்பவர் அற்று பூஜார்ஹமாய் விளங்கிவந்தது. ஒரு நாள் இப்பெண்மணி

கள் கழற்காயாடிக் களிக்கும்போது, சீதை தனது ஆட்ட முறையில் கையிலுள்ள ஏழு காய்களுள் ஒன்றை மேலெறிந்து மற்ற ஆறினை யிரண்டுகூறுக்கிக் கீழே திரித்துவிட்டனள். திரித்துவிடப்பட்ட காய்களுள் ஒன்று அருகு வைத்திருந்த திரியம்பகமென்னும் வில்லின்கீழ்ப் புகுந்தது. மறுபடியும் மேலெறிந்த காய் கீழ்நோக்குவதற்குள் முன் கீழே திரித்துவிட்டிருந்த இரண்டு பிரிவினையும் இரண்டு கரங்களால் இரண்டு கூறுக வாரவேண்டுவது விளையாட்டு முறையாதலின் அது சீதைக்கு இச்சமயம்முடியாதென்று தோழிகள் கரங்கொட்டிச் சிரித்தனர். அதையறிந்த கோமகள் ஊக்கத்தோடு அந்தப் பெருவில்லை யதன்பக்கம் நீட்டப்பட்டிருந்த தனது காலின் பெருவிரலால் அநாயாஸமாய்த் தூக்கிக் கீழிருந்த காயையும் எடுத்துப் பந்தயத்தைப் பெற்றனள். இதனைக்கண்ட பாங்கியர் பயந்தனர். மாடியிலிருந்து உற்றுநோக்கிய ஜனகன் விந்தைகொண்டு, இவளது பிறப்பு தெரியாதிருப்பதனுலும் இவ்வரிய செயலைச்செய்ததாலும் இவள் இலக்குமியின் மறுபிறப்பென்றே மதித்து, இவளை மணப்பான் திருமாலும் அவதரித்திருக்கவேண்டும். ஆதலின் மனிதர்க்கு அசாத்தியமான ஒரு செயலைப் பந்தயம் வைத்துத்தான் இவட்கு மணாளன் தேடவேண்டுமென்று நிதானித்து அதற்கு ஏற்றது இந்த வில்தான் என்று 'இந்தச் சிவதனுசை நாணேற்றினுர்க்கு என் மகள் உரியவளாவாள்' என்றதோர் விளம்பரமும் செய்திருந்தான். (இக்கதை வான்மீகத்துக்கண்டதன்று. கர்ணபரம்பரையிற் கொண்டது.)

இப்போது ஜானகி முதுச்குறைந்திருந்தனள். சோதரிகளும் அப்படியே. இவரது மணவினையை நினைத்தே மன்னன் ஜனகன் கவின்றிருந்தனன். இவ்விவாக வினையை முடிக்கவேண்டுமென்றே விசுவாமித்திரரும் இராமனை

நாட்டைவிட்டுக் காட்டுக்கழைத்துவந்து, தாடகையைக் கொன்ற கைவன்மையையும், தன் வேள்விகாத்த மெய்வன்மையையும், கல்லைப் பெண்ணுருவாக்கிய கால்வன்மையையும் உலகத்தினுக்குக் காட்டியருளினர்.

இராமலிலக்குவர் முனிவரோடு செழுங்கொடிகள் ஈர்ட்டிய அக்கடிநகரினுட் சென்று பரத்தையர்வீதி, வைசியர் வீதி, மறையவர்வீதி முதலகடந்து அரசவீதிக்குட் புக்கனர். அத்தெருவோ அரசனுலாப்போந்தெருவாதலின், ஏனையவற்றினும் அகன்றும், அலங்கரிக்கப்பட்டும், உபரிகைகள் மிக்குப்பெற்றும், சுத்தமாகவும் இருந்தது. இது எப்படிச் சுத்தமாயிருப்பினும் இராமன் அவற்றை நோக்குறாது மாடிகைகளை நோக்கியே வந்தனன்.

வடகடலிட்ட ஒரு நுகத்தொருதொளையில் தென்கடலிட்ட ஒரு கோல் கோத்துக்கொள்ளுமாறு தெய்வச்செயலாய் அரண்மனை மாடிகையில் தனித்துவந்த கோக்கன்னி மைதிலி கீழ்தெருவிலூடே முனிவன்பின் சென்ற இக்கருமேகத்தைக் கண்ணுற்றனள். நம்பியும் நங்கையை நன்கு நோக்கினன்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

காமுகரின் கண்கள் ஒத்து இருப்பின் வாய்ச்சொற்கள் பயனிலவன்றே? வீரமாதாகிய சீதை தன் பார்வையை இராமன் தோளினும், இங்கிதகுலத்துப்பிறந்த இராமன் தனது நாட்டத்தை யவண்முகத்தும் நிறுத்தினர்கள். நிறுத்தவே யந்நோக்குகள் பாசம்போன்று அவர்களை யிழுத்து உடன்மாற்றஞ்செய்தது. அதாவது இராமன் சீதையாகவும் சீதை யிராமனாகவும் ஆகும்படி செய்தது. என்னெனின், ஒருவர் இதயத்தில் மற்றவர் உறுத்தங்கினதால் என்க. பிறகு பிரேமையின் மேலீட்டாலும் இடைவிடா

நோக்கினும் இருவரும் ஈருடல் ஒருயிராயினர். இவ்விருவரது பிரேமைப்பார்வையை வருணித்தடங்காத கவிச்சக்கரவர்த்தி,

"மருங்கிலா நங்கையும் வசையி லையனு
மொருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேச லாவதோ."—என்று விடுத்தனர்.

இங்ஙனம் ஒரே பார்வையில் நிகழ்ந்தது. ஊமை கண்ட கனவாய் இதனை வெளிச்சொல்லத் துணியாத விராமன், இச்சமயம் கௌசிகமுனிக்கு வயப்பட்டவாதலின் அவரைப் பின்பற்றினர். சீதையோ கட்புலனுக்கெட்டிய வரையும்பார்த்து, அது மறைய உட்புலனால் பார்ப்பாள் போன்று விழி புதைத்து ஓவியப்பதுமை யாங்கு உயிர்ப்பற்று நின்றனள். இவள் மனமும் மெய்க்காவலும் அழகும் அவ்விளங்குமரனுக்கே யளித்தனளாதலின் ஓவியமாயினள். நம்பிரான் சென்று மாமுனியோடு ஜனகர் தம்மாசிரியரான அகலியாபுத்திரர் சதாநந்தரது உறையுள் புக்கனன். அங்கு அன்று அம்முனிவரிருபேரும் அளவளாவியிருந்தனர். அந்தமுனிபால் வந்தமுனியின் கதை கோமகற்குத் தெரிந்தது.

இங்குச் சீதை, திருமாலால் கடையப்பட்ட பெருங்கடல்போலத் திருவிழந்து தனமிழந்து மற்றுண்ணகையிழந்து வறியளாய் நின்றதைப் பாங்கிலுறைந்த பாங்கியொருத்தி இவளது நோய் இன்னதெனத் தெரிந்து, பள்ளியுட்சேர்த்துப் பலவாறு குளிர்ந்த உபசரணைகள் செய்யவும் சற்று விழிகாட்டினள்.

பாங்கி—சீதா! இஃதென்னை நோய்? இங்ஙனம் நினக்கு நிறைபோயது யாங்ஙனம்?

சீதை—இந்நோயா? ஒரு சேயால் வந்தது. என்னிறையை என்னிறைக்குக் கொடுத்தேன்.

பாங்கி—ஜானகீ! இங்ஙனம் அரசகுமாரியாகிய நீ மறுகி லேகுவாற்கு மனமாறுகலாமோ?

சீதை—தோழி; உலகிலென்னுயிரைக் கொள்ளைகொள்ள வந்து அடிவருந்த நடந்துபோனவன் அரசிளங்குமரனேயாகல்வேண்டும்.

பாங்கி—அதனை யாங்ஙனம் கண்டனை?

சீதை—முறுவற்கண்ணினன், முப்புரிநூலினன், எடுத்த தோளினன், ஏந்திய வில்லினன்.

பாங்கி—நங்காய்! உன் குணத்திற்கும் சீலத்திற்கும் வீரச் செயலுக்கும் தக்கவனன்றோ கணவனாகவேண்டும்? அன்றியும் உன் இங்கிதச்செயலை யறிய வல்லவனுமாகவேண்டுமே?

சீதை—பாங்கி! வெற்றுருவைக் கண்டு நான் இவ்வெம்மை கொள்ளவில்லை. அழகினுன்மாத்திரம் உலகம் மயங்கும். நான் அதனுனன்றி இங்கிதத்தானும் மயங்கினேன்.

பாங்கி—தங்காய்! உன்னை இங்கிதத்தில் வென்றவன் உன் கணவனாகவேண்டுவதுதான்.

சீதை—தோழி!

"இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமே யல
முந்தியென் னுயிரை யம்முறுவ லுண்டதே"

பாங்கி—ஆஹா! ஆயின் அவனே யுன்கணவன். இத்துணையழகுவாய்ந்தான் மன்மதனுக்கும் மன்மதனாகவேண்டும். ஆம்! நீ யுத்தமியாதலின் நினக்குக் கணவனாக விதிக்கப்பெறுதாரிடம் காதல்கொள்ளாயன்றோ? இதனை வேந்தனிடம் சொல்லிமுடிப்போமெனின் தனு சொன்று தடையாயிருக்கின்றதே.

சீதை—சகி! என் மனதைத் தனதாக்கினவர் வில்லினைப் புல்லிதாகச்செய்வதோரரிய செயலன்று. அவரே ஒடிப்பர்வில்லை, முடிப்பர்சபதத்தை, பிடிப்பர் என் கரத்தை.

பாங்கி—அஃது எங்ஙன் கட்டுரைக்கப்படும்?

சீதை—சின்னாழிகைபொறு. யான் அறிவிக்கிறேன். அப்படி நிகழாவிடின் எரியுள் வீழ்வேனிது உண்மை.

பாங்கி—தங்காய்! தங்காய்!! இதென்ன? இப்படிச் சபதஞ் செய்யலாமோ? நீ உன் சபதத்தை எப்படியும் முடிக்கவல்லவள் என்று அன்றுக் கார்முகத்தைக் கட்டைவிரலால் எடுத்தமுதல் என் மனதில் முடித்திருக்கிறேன். ஆதலின் நீ சொல்வது உண்மையே நடந்துவரும்.

என்று இப்படிப் பேசிக்கொண்டு ஒருவாறு ஆறியிருந்தனர்.

அங்கு சதாநந்தர் இல்லத்தில் இரவெல்லாம் தன்மனதுற்றமாதுடன் நித்திரையின்றிக்கழித்த விராமபிரான் வைகலில் முனிவரொடும் இளையானொடும் அநுட்டானம் முடித்து அரண்மனைக்குச் சென்றனன். விசுவாமித்திரர் வரவறிந்து ஜனகன் ஆதனம்விட்டிழிந்து உபசரித்துத் தானுமமர்ந்தபின், தன்னை யழகாலிழுத்த அரசிளங்குமரரிருவரையும் கண்களிக்கப்பார்த்து அவரது விருத்தாந்தங்களை கௌசிகரிடம் வேண்டினன்.

மாமுனியும் அரசனைப்பார்த்து, மன்ன! நல்வினையும் அல்வினையும் முறையே யவற்றைச்செய்திருத்தலான் அவற்றுக்குப்பயனாக இவன் தயரதற்குக் கோசலையிடமும் இவனது எழிலும் குணமுமே தன்னதாகக்கொண்ட மற்றொரு பரதனென்பான் கைகேயியினிடமும் இங்குள்ள இவ்விலக்குவனென்பானும் இவனை எழிலாலும் குணத்தா

னும் ஒற்றுமைகொண்ட இன்னொரு சத்துருக்கனென்பானும் மற்றொருத்தியாய சுமித்திரையிடமுந் தோன்றினர். மைவண்ணத்தாடகைவதையால் இக்கடல்வண்ணனது கைவண்ணமும், நல்லெண்ணத்தகலிதன் கல்வண்ணம் நீங்கினதாலிவன் கால்வண்ணமும் கண்டுகொண்டனன். பலபடிச் சொல்வதென்?

"... ... ...
... ...
காத லென்றன் னுயிர்மேலு மிக்கரியோன் பாலுண்டா
லீதிவன்றன் வரலாறும் புயவலியு மென வுரைத்தான்."

இதனைச் செவியுற்ற மன்னன், நலமும் வலமும் குலமும் குணமும் குலவியிருக்கும் இக்குணமகனை மணமகனுக் கொளப்பெற்றிலோமே? என்செய்வாம்? என்றுப் "போதகமனையவன் பொலிவுநோக்குவான், அவ்வேதனை தருகின்றவில்லை நோக்குவான், தன் மாதினைநோக்குவான்" இதனை மனத்திலுன்னிய கோதமன் காதலரான சதாநந்தர்,

"சித்திரமிங் கிதுவொப்ப தெங்குண்டு? செய்வினையால்
வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப,
அத்திருவை யமரர்குல மாதரித்தா லெனவறிஞ!
இத்திருவை நிலவேந்த ரெல்லாருங் காதலித்தார்."

"அரச! கவலாதே சிறுவனென்று மதியாதே பெருமனுகுமிவன். கடல்கடையவந்த கன்னியை மற்றைத்தேவர் மருளவிழிக்கும்படி மாதவன் கொண்டனன். மாமகளும் இக்கோமகனால் கொள்ளப்படுவள். கார்முகத்தைக் கடுகவழை" என்றனர்.

குருவால் தெளிந்த கோப்பெருந்தலைவனது ஏவலால் கல்லெனவளர்ந்த வில்லினிற்கரசும் மல்லராலவைக்குக்கொணரப்பட்டது. ஜனகன்வேண்டினன். சதாநந்தர் தூண்டினர். கௌசிகர் ராமா! காண்டி! என்றனர். அக்கார்முகத்தையும் இக்கார்நிறத்தனையும் கண்டவர் மன்னவனை

யும் வில்லைப்பார்க்கச்சொன்னவனையும் பலவாறு பேசினர். "சங்குசக்கரந்தரித்ததானையச், சிங்கவேறல்லனே வீதனைத் தீண்டுவா, ரெங்குளரொருவரென்" றேங்கினர். நாயகி ஜானகியும் ஓர் பாங்கியை யனுப்பியிருந்தனள். இராமன் நாகமும்நாகமும் நாணநடந்து அவ்வில்லினிடஞ்சென்றனன்.

அவனழகைக்கண்டு அகங்குறைவார் சிலர். நடையைக்கண்டு நாணுவார் சிலவர். வலத்தைக்கண்டுபின் வாங்குவார் சில்லோர். குணத்தையுணர்ந்து முகம்கோடுவார் சிற்சிலர். கடைக்கண்ணால் சிலர் புடைக்கப்பட்டனர். அகன்ற மார்பினால் சிலர் தகர்க்கப்பட்டனர். புன்முறுவலுக்குச்சிலர் என்புருகினர். நீண்ட கைக்கு மணம் வேண்டுமென்றனர். அவன் புயத்திலிருந்து வயமுதித்தது. குறங்கிலிருந்து மறங்குதித்தது. மெய்யினது நலம்பெய்யப்பெற்றது. கையினது இயல் காட்டப்பட்டது. மனத்தில் களிநின்றது. கரத்தில் வில் நின்றது. உடனே சதாநந்தர் வில்லென்றனர். கௌசிகன் ராமா! நில்லென்றனர். இராமன் சுவாமீ! இல்லென்றனன். அதுவும் பட்டென்றது. அவையோர் கல்லென்றனர்.

இங்ஙனம் இராமன் வருத்தமின்றி வில்லேந்தி நாணேற்றினதைக் கம்பர் இரண்டு அழகிய செய்யுளான் எடுபடுகின்றார்.

"ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதையெ னும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை யிதென்ன வெடுத்தான்."

"தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாருங் காண்கிலர் கையால்
எடுத்தது கண்டா ரிற்றது கேட்டார்."

உடனே அவைகளிக்க மன்னன் அகமகிழ்ந்து தனது பேறு நற்பேறுயினவாறறிந்து மாமுனியை நோக்கி, நாளை மணத்துக்கு நல்வேளையாமாதலின் முடிக்கற்பாலதோவென, அவர் தந்தையின்றித் தனயர்மணம் நடப்பதழகன்று என்று அயோத்திக்குத் தூதனுப்பினர்.

அவ்வணணமே யோர்பக்ஷத்தில் சாகேதமன்னனும் ஆசிரியனோடு மனைவியரோடு மைந்தரோடு மற்றுமுளாரொடு வந்தனர். அவர் வரவுணர்ந்த மிதிலைமன்னன் எதிர்கொள்வான் யதிகளோடு சென்றனன். அவரை இராமனும் பின்தொடர்ந்தான். முன் வில்முறித்த செய்தியிலிருந்து இராமனது அழகு குணங்களை நன்கு செவியில் மாந்தியமாதர்பலர் இவனைக் கண்ணுறவெண்ணி வந்தனர்.

ஆங்குத் தெருவில்வந்துற்ற மாதர்களது இடைவிடா நோக்கினல்தான் இராமன் மெய் கறுத்ததோவென்றறையுறும்படி நிறைந்தனர். அவர்களுள் ஒருத்தி, நம்பிமேலார்வத்தால் தனது கலனும் நலனும் தன்னுற்றதைக் கவனியாது தன் மனக்கினியானைநோக்கிய அயன்மாதரை எரியெழநோக்கினள். மற்றொருத்தி ஐயன்மேற் காதல்நிரம்பியதால் எங்கும் அவனகவே கண்டு மற்றொருத்தியைப்பார்த்து 'இவன் தனித்துவந்தனனே'வென்றாள். வேறொருத்தி பித்துக்கொண்டவளாய்த் திரும்பிவருவாளொருத்தியைநோக்கி, 'என் கருத்தை யங்குக்கண்டனையோ' என்றனள்.

இங்ஙனம் இராமனைப்பார்க்கவந்த மகளிரிற்பலரும் ஆனையைக்கண்ட அந்தகரனைய, வாளெனக் கூரியகண்ணினராயினும், தோளினைப்பார்த்தவர்கள் வேறொரு அங்கத்தைப்பார்க்கவும் மனமெழாது மீண்டும் மீண்டும் அதனையே பார்த்து அகங்குளிர்ந்தனர். இவர்கள் அவனது வீரத்தன்மைக்கு ஆசைப்பட்டவர்போலும். அவர்இராம

னது கதையைக்கேட்டு அவற்றுள் பெரும்பான்மை தோளாற்றலை யுணர்த்தினவாதலின் அதனையே நோக்கி மகிழ்ந்தனர்போலும். வேறு சிலர் தாமரையையொத்த காலினைக் கண்டவர் அதனையே நோக்குறுவாராயினர். இவர்கள் அகலிதன் கதைகேட்டு ஆனந்தித்தவர்போலும். அதனாலன்றே யவனது தாளில் வியப்புக்கொண்டனர்! அன்றி,

"யானோக்குங்கால் நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்."

என்ற குறளின் உரையின்படி அவனைக் கணவனாயடைய விரும்பிய இவர், அவன் ஒருகால் தம்மைப் பார்த்தனனோ வென்றையுற்றுத் தமது உண்மையை விளக்குவான் நிலம் நோக்கும்போதும் அவனின் பார்வையை விலக்காது பதுமத்தாளினை நோக்கினரோவெனக்கொள்ளலாம்போலும் நோக்கினர்.

அவனது அகன்ற கையைக்கண்டவரும் அங்ஙனமே இவர்கள் தம்மை நாயகியாக்கொண்டாதரிப்பனோ என்று அவ்வணம்பார்த்தனர்போலும்.

அன்றி இராமனது கதையை யிதுவரையிற் செவியுற்ற இவர்களில் தாடகைவலத்தை நினைத்த சிலர் தோளையும், அகலிநலத்தை எண்ணியவர் தாளையும், இனிச் சீதைநலத்தைக் கருதுவார்கரத்தையும் கண்டனர்போலும்.

இங்ஙனம் பலவாறு கருதும்படி அவனழகை மாந்தினார்பலர். இக்கருத்தினையடக்கிய கம்பர் செய்யுள் வருமாறு.

"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணாரியாரே வடிவினை முடியக்கண்டார்.
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரையொத்தார்."

இன்னணமாக நம்பிரான் வேண்டியார்வேண்டியாங்கெல்லாம் காட்சிதந்து, தந்தையாலும் வசிட்டராலும் ஆசிக

ளும் தாயரால் வாழ்த்தும் இளைஞரால் வணங்கலும் பெற்று அவரோடும் அரண்மனைபுக்கனன். அங்கு மண்டபத்தில் முனிவரரும் இருமன்னவரும் இராமனும் வீற்றிருக்கும்போது, ஜனகர் ஆணையால் ஜானகியும் நற்கோலத்துடன் ஆங்கேகி மாதவரை முற்கொளவணங்கி, தயரதனையும் தந்தையையும் வணங்கித் தாதை யருகமைத்தவாசனத்துவீற்றிருந்து, தோழியர்வாக்கால் வில்முறித்தான் இவன் தானென்று தெரிந்தும், மனத்தினையம் ஒழிக்க இதுவே சமயமென்று நேரில் பார்க்க நாணங்கொண்டாளாயினும் தன் கைவளை திருத்துவாளாய்க்கடைக்கண்ணால் நோக்கினள். இவ்விருவரது சேர்த்தியையும் ஒருங்கேகண்ட வசிட்டர், ஒருவாறு இராமனதுவடி விற்குத் திருட்டிகழிப்பார் போன்று "நச்சுடைவடிக்கண்மலர் நங்கையிவளென்றால், இச்சிலைசிடக்க மலையேழையுமிறாதோ" என்றனர்.

இதுவே விவாஹநிச்சயம்போலும். பின்னர் இருபக்ஷத்தாரும் சம்மதங்கொண்டு அற்றைநாட்குப்பிற்றைநாளே நன்னாளென்று தேறி, மணவினைக்குவேண்டுவவனைத்தும் ஆயத்தஞ்செய்ய ஏவினர்.

மணமக்கள் இருவரும் காதல் மிக்குடையராதலின் இரவில் நித்திரைகொள்ளாது கதிரவன் உதயத்தைக் கருதியிருந்தனர். பொழுதும் புலர்ந்தது. மணத்துக்குரியன யாவும் நடத்து, இராமன் மணவறைக்கு அழைக்கப்பட்டு வீற்றிருந்தனர்.

இந்நல்வினைக்கு முன்வினையாவும் நடந்தேறியபின்னர் கோமகன் ஜனகன் தனது மாதினைத் தன் கரத்திற்பிடித்து மணமேடையில் இருந்த இராமபிரானிடம் பின்வருமாறு சொன்னர்.

इयं सीता मम सुता सहधर्मचरी तव ।
प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृह्णीष्व पाणिना ॥

இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீதவ
ப்ரதீச்ச சைநாம் பத்ரந்தே பாணிம்க்ருண்ணீஷ்வபாணிநா

'இந்த சீதை எனது மகள். உன் இட்டப்படி நடக்கப்பட்டவள். இவள்மேல் நீயும் ஆர்வங்கொண்டு உனது கையினால் அவள் கையைப் பிடித்துக்கொள். உங்கட்கு க்ஷேமமுண்டாகக்கடவது'

இதனுள் இந்த சீதை என்று சுட்டிக்காட்டியது இவளது அழகை நன்கு கவனியென்றும், சீதை என்று பெயரைக்குறித்ததால் இவள் ஒருத்திவயிற்றில் பிறவாத உத்தமி என்று அறிவாய் என்றும், எனது மகள் என்றதால் நற்குலமென்றறி என்றும், எனது எனும் சொல்லாற்றலால் நிஷ்காமபக்தியுடைய எனக்கும் இவளிடத்தில் பிரேமை தோன்றினதற்குக் காரணம் இவளது நல்லியல்பேதான் என்று அறிவாயென்றும், மகள் என்றதால் இவளது இளமையையும் இவளிடம் எனக்குண்டாயிருக்கும் வாத்ஸல்யம் உண்மையையும் தெரிவாயென்றும், உன் இட்டப்படி நடக்கப்பட்டவள் என்னும் பொருளுடைய 'ஸஹதர்மசரீதவ' என்றதால் உலகில் இல்லறத்தில் கணவன்மனைவியார் ஒத்து நடந்தாலன்றி அவரவரது ஆத்மோஜ்ஜீவனமான தர்மம் பயன்பெறாது. அவ்வித தர்மம் உனக்கு யாதுங் குறையாது நடந்தேறும் என்று நீ நன்கு அறிவாய் என்றும், நீயும் ஆசைகொண்டு என்றதால் மணமக்கள் இருவரும் பரஸ்பரம் ஆசைகொண்டாலன்றி அவ்வில்லறம் சரிவர நடந்தேறாது; இவள் முன்னமே உன்னிடம் ஆசைகொண்டவள், மேல் நான் குறித்தபடி இவட்கு அழகு பிறப்பு குலம் விவேகம் ஒழுக்கம் யாவும் ஒத்திருத்தலின் உன் குலம் அழகு வீரம் ஒழுக்கம் இவற்றுக்குமேற்ப நீயும் ஆசைப்படு என்றும், கையால் கைபிடி என்றது இவளுக்குத் துணைசெய் என்றும், பகிரங்கத்தில் இப்பொழுது

கையைத்தான்பிடிக்கவேண்டுமென்றும் கூறி அது அப்படி நிறைவேற இத்தகுந்த தம்பதிகட்கு ஏதேனும் கண்ணெச்சில் வருமோவென்று ஐயுற்று அதுதீரத் தனது மறைபொதிந்த வாக்கால் மங்களமுண்டாக்கக்கடவது என்றும் முடித்தார்.

அன்றியும், அந்த சுலோகத்தில் முதலடியில் வார்த்தைகள் அமைந்த முறையால் ஜானகியினது அழகும் பிறப்பும் குலமும் விவேகமும் ஒழுக்கமும் முறையே சாணப் பெறுமாறு உணர்க.

இதனையே தமிழில் ஒருவாறுமொழிபெயர்த்தவர்போலக் கம்பரும் செய்யுளியற்றியுள்ளார். அதுவரும்—

"கோமகன்முன் சனகன் குளிர் நன்னீர்
பூமகளும் பொருளு மெனநீ யென்
மாமக டன்னொடு மன்னுதி யென்னா
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்."

சுலோகத்துக்கும் இதற்கும் ஒற்றுமையுண்மையாமாறு— "மமசுதா" என்றதனால் என் மாமகள் என்பதும் பூமகளும் பொருளும் என என்றதால் "ஸஹதர்மசரீ" என்பதும் செய்யுளின் நான்கனடியால் "பாணிம்க்ருண்ணீஷ்வ பாணிநா" என்பதும் மன்னுதி என்றதால் "பத்ரந்தே" என்பதும் கொள்ளப்போதரும். அன்றியும் கம்பர் தனது இந்த ஒரு செய்யுளானே வான்மீகி ஒன்றின்மிக்க சுலோகங்களான் சொல்லிவந்த கருத்தை யழகுபெற முடித்துளார். உன் இஷ்டப்படி நடப்பாள் என்று வான்மீகி சொல்லிவிட்ட கருத்தைத் தக்க உவமையால் நன்கு விளக்கினார். அன்றியும் செய்யுளில் கோமகன்முன் சனகன் என்றதனால் குலவொற்றுமையையும் குளிர்நன்னீர்ஈந்தான் என்றதால மன்னனுக்குத் தம்பதியர்மேலுற்ற பிரேமாதிசயத்தையும் செவ்வனே விளக்கினார்.

என்று இவ்வாறாக வடநூலில் வல்ல வான்மீகரும் தென்னூலில் தேர்ந்த தெருளுடை கம்பரும் அருளிச் செய்தவற்றை யவ்விரு நூல்களினும் வல்லார் பலபடி விளங்கவுணர்த்துவர். அதனை விரிவஞ்சிவிடுத்தனன்.

இப்படி மன்பதைகள் மனங்களிக்கவும் சூரியசந்திரர் குலம் செழித்தோங்கவும் இராமபிரான் சீதாதேவியை நல்லோரையில் பாணிக்ரஹணம் செய்தனர். இலக்குவனது குணத்தை இங்கிதத்தால் உணர்ந்த மிதிலைமன்னன் தனது மகள் ஊர்மிளையை யவற்கு அடியாளாக்கினர். அங்ஙனமே தனது இளைஞன் குசத்துவஜன் மகளிரான மாண்டவிசுருதகீர்த்தியரையும் முறையே பரதசத்துருக்கினர்க்கு அளித்தனர்.

இங்ஙனம் நான்மறையனைய நால்வரும் அவற்றின் பொருள் தெரிப்பதான மிருதிகளனைய நால்வரோடு களித்துச்சின்னாள் மிதிலையிலேயே தங்கியிருந்து பின்னர் சாகேதத்துக்குத் தந்தைமுதலவரோடு பயணப்பட்டு, வழியில் சந்தித்த பரசுராமனதுவலம் இராமபிரானால் குறைக்கப் படச் சிறிதும் குறையற்றவராய்ப் போய்ச்சேர்ந்தனர்.

எம். வி. கோவிந்தராஜய்யங்கார்.

சிறுவர்க்கான பக்கங்கள்.

வேளையும் நாழியும்.

நல்ல வேளை வரும்! நல்ல வேளை வரும் !! என்று சொல்லிக்கொண்டேயிருப்பார், தவவிரதியாகிய சோமாசிமகான். அவர் பதரிகாச்சிரமத்தில் தம்பால் மிக்க பக்திபூண்டவராய சீடர் பல்லோர் உபசரிக்கத் தமக்கென்று நன்கமைக்கப்பட்ட பன்னகசாலையிலிருந்து தமது தவநிலைகளில் தவறுதொழுகிவருவார். இவரறியாச் சாத்திரங்களில்லை; வேதங்களில்லை; புராணங்களில்லை; இதிகாசங்களில்லை; கலைக்கியானங்கள் மநுவிக்கியானங்களில்லை; "விண்ணிடையேகுதல்; மீளப் பாதலத்திற்புகல், மீட்டுப் புவியின்மேவல், அண்ணிய பல்காயப்பிரவேசம் செயல், உறையுமவ்விடத்தே எண்ணியவெல்லாம் வரச்செய்திடல்" முதலிய அட்டமாசித்திகளிலும் வல்லவர். யாவரிடத்திலும் சாதுரியமும் நயமும், அன்பும் மிகப் பொருந்தப்பேசுவார். ஒருகாரியம்செய்தலில் ஒன்பான்வழி கொள்வார். யாவரையும் தம்பால் காந்தம்போல் வசீகரித்து இழுத்துக்கொள்ளும் ஆற்றல்சான்றோர். இவரதாச்சிரமம் வெகு ரம்மியமானது. பதரிகாவனம் முழுவதும் கிளைகளும் இலைகளும்தழைத்த

மரங்கள் பல செவ்விதாய் வானுறவோங்கி வளம்பெற வளர்ந்திருக்கும் காட்சிப் பகலவனுடன் பகைகொண்ட இருள் ஆண்டுவந்து ஒளித்திருப்பதுபோலும். அக்கானகத்தில் பல்வித விநோத பட்சி ஜாலங்களும் குடிகொண்டிராநிற்கும். அத்தகையவாச்சிரமத்தில் நமது சோமாசியோகிகளுக்கும் பல சீடர்களிருந்தனராயினும், அவரைச் சதாசார்வகாலமும் ஒரு விஷயத்தைக்குறித்துத் தொந்தரவு செய்துகொண்டிருக்கும் ஒரு முக்கிய சீடனுமிருந்தான். அவன் பெயர் மாணிக்கவீணன் இம்மாணிக்கவீணன் நமது சோமாசிமகானை, மிகவும் உத்தமோத்தமமானதும், பரோபகாரமானதுமான மந்திரமொன்றினைத் தனக்குபதேசித்தருளல்வேண்டுமென்று சதா சார்வகாலமும் இரந்துகேட்பதே மேற்கூறிய மகானுக்குத் தொந்திரவைக்கொடுத்துவாராநின்றது. நமது மாணிக்கவீணனே சோமாசிமகானைக் கண்டவெப்பொழுதும் மேற்கூறிய தொந்திரவைக்கொடுக்காதிருப்பதில்லை. யோகிகளும் அவனுக்கு எளிதாய் "வேளையும் நாழியும் வரும் அப்போது இம்மந்திரம் நினக்குபதேசிக்கப்படும், வீணாகப்பதருதே" யென்று கூறி அவனைச்சமாதானப்படுத்திக் கொண்டேயிருப்பார். இவ்வாறு வெகுகாலங்கழிந்தது. யோகிகளோ மாணிக்கவீணன் தன்னை வினவும்போழ்தெல்லாம் வேளையும் நாழியும் வரும், வேளையும்நாழியும் வருமென்று சொல்லிக்கொண்டேவந்தார். மாணிக்கவீணன் எத்துணைநாட்கள்தான் பொறுப்பான். யோகிகளவர்களைக் கேட்டுக்கேட்டு அலுத்துப்போய்விட்டான். ஆனால் வீணன் தான்கொண்ட கருத்தை நிறைவேற்றாமல் பின்வாங்க மனமுடையவனல்லனாய், யோகிகளிடமிருந்து நல்ல மந்திரத்தை உபதேசிக்கப்பெறத் தனக்கு எப்போது வேளையும்நாழியும் வருமோ'வென்று வெகு ஆவலுடன் வெகு தீவிரமாய் அந்நாளை எதிர்பாராநின்றான். ஆனால் அடிக்கடி யோகிகளை அவ்விஷயத்தைப்பற்றிக் கேட்பதைமட்டும் விடாமலிருந்தான். அடிக்கடி மாணிக்கவீணன் தொந்தரவுசெய்வான். ஆனால் வீணன் அடிக்கடி தன்னைத்தொந்தரவுசெய்வதனால், அத்தகைய பிடிவாதக்காரனுக்கும் தம்பால் மிக்க பக்திபூண்டொழுகும் அத்தகையனுக்கும், தக்க மந்திரமொன்றினை உபதேசித்தருளல்வேண்டுமென்றும், அவன் அம்மந்திரம் உபதேசிக்கப்பெறப் பரிபக்குவதிசையடைதல்வேண்டுமென்றும் தம்மனதில் பரிபூர்ணமாய் யோகிகள் எண்ணியிருந்தாராயினும்,

தம்முடைய இக்கருத்தை அவனுக்குச் சிறிதேனும் வெளியிட்டாரி லர். மாணிக்கவீணனின் பிடிவாதத்தையும், அறிவையும், பக்தியை யும் முற்றிலும் பரிசோதித்தறிதல்வேண்டியே தாம் கொண்ட கருத் தை அவனுக்கு அவர் அவ்வளவு எளிதில் வெளியிடவிரும்பிலர்போ லும். இவர் சகலவிதமான விஞ்சைகளிலும் வல்லராதலால் ஓர் நாள் யோகிகள் விண்ணுலகத்தில் தேவேந்திரசபையில் நடந்தேறும் நர்த்தனத்திற்கழைக்கப்பட்டு அங்குச்சென்றிருந்தார். அத்தேவேந் திரசபையில் அநேக பிரபலமான இருடிகளும் தேவகந்தருவர்களும் பிரசன்னமாயிருந்தனர். மாணிக்கவீணனே சோமாசியோகிகள் விண்ணுலகஞ்சென்றதை எவ்விதமோ அறிந்து, அவரைப் பின்பற்றி த்தானும் விண்ணுலகஞ்சென்றான். சபையில் ரம்பை ஊர்வசிமுத லிய தேவதாசிகள் நர்த்தனஞ்செய்துகொண்டிருக்கவும், பல பிர பலமான பெரியோர்கள் தத்தமந்தஸ்திற்குத் தகுந்தவாறு அவரவர் ஆசனங்களில் வீற்றிருப்பதற்கும் நடுவே மாணிக்கவீணன் பொள் ளெனத்தோன்றிச் சோமாசியோகிகளைப் பல்லோரும்பார்த்திருக்கப் பணிந்துநின்று ஒரு வார்த்தை சொல்லுவானாயினன். "இதுகா றும் தம்மையடுத்து மிகுந்த பக்திபூண்டிருக்கும் அடியனேன்மீது கிருபைகூர்ந்து மந்திரமொன்றினை உபதேசிக்காததுபற்றி எனது மனம் மிகவும் கவல்கின்றது. சபையோர்காள்! இப்பெரியவரை யடுத்து வெகுநாளாய்ப் பக்திபூண்டிருக்கும் என்மீது இவர் கிருபை கூருகின்றாரிலர்! உபதேசஞ்செய்ய 'வேளையும் நாழியும்வரும்' என் றேசொல்லுகிறார்! ஆகவே இப்பெரியவர் என்மீது அருள்புரியுமாறு தாங்கள் அருள்செய்யப்பிரார்த்திக்கிறேன். எனலும், பெரியவரா கிய யோகிகளோ 'வீணா, மாணிக்கவீணனே! வேளையும் நாழியும் வரும் பதறாதே, 'பதறாத காரியஞ்சிதறாது' 'அவசரப்படேல்' என் பதை நீ கடைப்பிடித்தொழுகல்வேண்டும்; 'நாழிவரும் வேளைவரும்' சற்று காத்திருப்பாயாக! எனலும், யோகிகளைநோக்கி மாணிக்க வீணன் "வேளையும் நாழியும் வந்தால் நான் உபதேசிக்கப்பெறு வேனா' என்று வினவினான். ஆம்! ஐயமில்லை! 'வேளை நாழி வந்ததும் நீ உபதேசிக்கப்பெறுவை' என்று யோகிகள் விடைபகர, 'இஃது உண்மைதானா? பெரியவரே! வேளையும்நாழியும் வந்தமாத்திரத் தில் காரியம் சித்தியடையுமா? என்று மீட்டும் வினவித் திரும்பவும் சற்றுதூரஞ்சென்று வீணன் ஆங்கு முளைத்திருந்த வேளைச்செடி

யொன்றினையும், நாழி யென்னும் படியையும் தன்னுடைய மேல் உத்தரியத்தினால் மறைத்து எடுத்துக்கொண்டு யோகிகளினிடம் விரைந்துபோந்தான். மீட்டும் அவரை நோக்கி 'வேளையும் நாழி யும்வரின்' 'நான் உபதேசிக்கப்பெறுவேனு' என்று கேட்டலும், ஆம்! அணுத்துணையும் ஐயமில்லை! ஐயமேயில்லை என்று கம்பீரமாய் விடை பகரலும், தான் தன் மேலுத்தரியத்தில் மறைத்துவைத்திருந்த வேளையையும் நாழியையும் திறந்துகாட்டி வேளையும் நாழியும் இதோ வந்துவிட்டது இனிமேல் உபதேசிக்கத் தடையில்லையே! ஐய! அருமைக்குரவீர்! எனலும் யோகிகளும், சபையிலுள்ள மற்றையோ ரும் மாணிக்கவீணனின் அதியற்புதபுத்தியையும் சத்தியையும் கண்டு வியந்து கொண்டாடினார்கள். யோகிகளோ! அம்மாணிக்க வீணனைப்பற்றி அத்தேவேந்திரசபையில் பெரிதும் புகழ்ந்துரைத்த துமன்றி "ஏ, வீணனே! இதுகாறும் இவ்வேளையும் நாழியையும் அறியாமல் பக்குவதசையையடையாதவனாய் இருந்தினை; இப்போது நீ பரிபக்குவதசையையடைந்து உபதேசம்பெறுதற்கு யோக்கியனா யினாய்; வேளையும் நாழியும் வந்தது; நீ அதியற்புதபுத்திமானாய் உலகத்தில் விளங்கக்கடவை. இதோ! இம்மகாமந்திரமான லோ கோபகாரமான ஒப்பற்ற மந்திரத்தை இதோ உபதேசிக்கிறேன் என்று அம்மகாமந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். அம்மந்தி ரத்தை உபதேசிக்கப்பெற்றபின் அத்தேவேந்திரசபையினரையும் தனது ஒப்பற்ற ஆசிரியரையும் மிகுதியும் பணிந்து போற்றித்துதி த்து அவரிடம் சந்தோஷமாய் விடைபெற்றுத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தான். ஆகவே மாணிக்கவீணனைப்போல அனைவரும் ஆசிரி யரிடத்தில் நீங்காத பக்தியையும் பேரன்பையுமுடையவராயிருப்பின் எவ்வளவோ நன்மையையடைவராகள் என்பது நிச்சயம். எவ ரும் எக்காரியஞ்செய்யப் பிரயத்தனப்பட்டபோதிலும் அக்காரியத் தில் வேளையும் நாழியும் என்னும் விஷயத்தைப்போல் அவ்வவ் விஷயத்தில் தத்தம் ஊக்கத்தை மிகுதியுஞ்செலுத்திப் பயன்பெற முயற்சிக்கவேண்டும். அற்பவிஷயங்களையும் அலட்சியஞ்செய்யாது அவ்விஷயங்களிலுள்ள திட்பநுட்பங்களை செவ்விதின் ஆராய்ந் தறிந்து தக்கதுசெய்தல் மேதக்கதென்பது இக்கதையினால் அறியக் கிடக்கின்றது.

வீ. சுப்பிரமணிய ஐயர்.



மகன்.—அப்பா! தூரத்ருஷ்டி என்றால் என்ன?

தகப்பன்.—கடன்காரன் அரை மைல் தூரத்தில் வருகிறபொழுதே தெரிந்து ஒளிந்துகொள்ளுகிறது.

ராமன்.—அதோ போகிறாரே அவர் பீ.ஏ. பரீக்ஷையில் கணக்கில் ராஜதானிக்கெல்லாம் முதலில் தேறினவர்.

பீமன்.—ஏதோ பித்துப்பிடித்தாற்போலே போகிறாரே, என்ன காரணம்?

ராமன்.—இரண்டு நாளாக அவர் ஸம்ஸாரம் எழுதியிருக்கிற வீட்டுச் செலவு கணக்கைச் சரிபார்த்து வருகிறார்.

பள்ளிக்கூடம். பாடம், பூகோள சாஸ்திரம்.

உபாத்தியாயர்.—பாலை வனம் என்றால் என்ன?

மாணாக்கன்.—யாதொன்றும் முளைக்காத இடம்.

உபாத்தியாயர்.—ஒரு உதாரணம் சொல்லு.

மாணாக்கன்.—(சற்று நேரம் யோசித்து) எங்க தாத்தா வழுக்கைத் தலை.

சிநேகிதர்.—உங்கள் பத்திரிகை இப்பொழுது என்ன ஸ்திதியிலிருக்கிறது?

பத்திராதிபர்.—ரொம்ப நல்ல ஸ்திதியிலிருக்கிறது. முன்னைக்கிப்பொழுது இரண்டு பங்கு விற்பனையாகிறது.

சிநேகிதர்.—அப்படியா! ரொம்ப சந்தோஷம். என்னமாக இரண்டு பங்கு?

பத்திராதிபர்.—இந்த மாச ஆரம்பமுதல் இன்னொரு சந்தாதார் சேர்ந்திருக்கிறார்.

வேட்டைக்காரன்.—பையா! இந்தப்பக்கங்களில் சுடுகிறதற்கு ஏதாவது ஜந்துக்கள் அகப்படுமா?

பையன்.—அந்தா வாராங்களே எங்க வாத்தியார் ஐயா.

குப்பாசாஸ்திரிகள் மாடுவாங்குகிறதற்காகமந்தைக்குப்போனார்.

சாஸ்திரிகள்.—(ஓர் மந்தைக்காரனை நோக்கி)அப்பா, எனக்கு ஒரு ஜோடி மாடு வேணும்.

மந்தைக்காரன்.—என்னமாதிரி மாடுவேணும், சொல்லுங்கள்.

சாஸ்திரிகள்.—வண்டியில் கட்டினால் வேகமாக ஓடவேணும்.

மந்தைக்காரன்.—வண்டிமாடா வேணும்?

சாஸ்திரிகள்.—வண்டிமாடென்றால், வண்டிக்கு மாத்திரம் உபயோகப்படுத்தவா? சமயத்திற்கு உழவுக்குந்தான் உதவவேணும்.

மந்தைக்காரன்:—ஓசோ!

சாஸ்திரிகள்:—ஆமாம்; தவிர, தோட்டத்தில் கபிலை ஏற்றம் ஒன்று ஏற்படுத்தி இருக்கிறேன், ஆகையினால் கபிலைக்கும் பழகினவைகளாயிருக்கவேணும்.

மந்தைக்காரன்.—ஆமாஞ்சாமி, ஒழிஞ்சவேளையிலே சமயல்செய்வதற்கும் தெரிஞ்சமாடு தேவை இல்லையா?

சாஸ்திரிகள்.—மாடு வாங்காமலே வீடு வந்து சேர்ந்தார்.

ராஜம் அப்பா.